பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 | கதிர் 270 | ஆவணி 09 ஆம் நாள் | திங்கட்கிழமை 26 ஒகஸ்ட் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

Smart Up
- Diploma in English
- Diploma in IT
- Certificate in Spoken Sinhala

BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

# சஜித் அணியினர் தனிவழிக்கும் தயார்

## ஐ.தே.கவுக்குள் பிடுங்குப்பாடு மேலும் வலுக்கின்றது

கொழும்பு, ஒகஸ்ட் 26

அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் அறிவிக்கத் தவறினால், சஜித் ஆதரவு அணியைச் சேர்ந்த 57 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தனி வழியில் பயணிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இந்த விடயத்தை தலைமை அமைச்சரின் கவனத்துக்கும் அவர்கள் கொண்டு சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

23

லசந்த கொலை வழக்கு

## இராஜதந்திர சிறப்புரிமையை எதிர்பார்க்கின்றார் கோத்தபாய

கொழும்பு, ஓக. 26

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பான குற்றச்சாட்டை மறுத்துள்ள கோத்தபாய, ஒருவேளை அந்தக் குற்றச்சாட்டு உண்மையாக இருந்தாலும் இராஜதந்திரி என்ற அடிப்படையில் இந்த வழக்கு

23

## உலகில் முதல்முறையாக திருக்குறளுக்கு முத்திரை

30ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 26

உலகத்திலேயே முதன்முறையாக திருக்குறளுக்கு எதிர் வரும் 30ஆம் திகதி முத்திரை வெளியிடப்பட வுள்ளது.

23

## வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஓகஸ்ட் 26

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் நேற்று இரவு 8 மணியளவில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் சாவடைந்துள்ளதுடன், இரண்டு பேர் காயம டைந்து, வவுனியா மருத்து வமனையில் சேர்க்கப்பட் டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மதவாச்சி - மன்னார் பிர தான வீதியில் கிறிஸ்தவ குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த முச்சக்கர வண்டி கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மின்சாரக் கம்பத்துடன் மோதியதிலேயே விபத்து இடம்பெற்றுள்ளதாக முதல் கட்ட விசாரணை களில் தெரியவந்துள் ளது என்று பொலிஸார் கூறினர்.

முச்சக்கரவண்டியில் பய ணம் செய்த மெனிக்பாம் பகுதியை சேர்ந்த ஜீவா னந்தம் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சம்பவ இடத்தில் சாவ டைந்துள்ளதுடன் அதே பகுதியை சேர்ந்த இரு வர் படுகாயம டைந்த

23

ஓ.எம்.பி. பரிந்துரைத்த

## ரூபா 6 ஆயிரத்தைப் பெற்றுக்கொள்ள 650பேரின் விவரங்கள் அனுப்பிவைப்பு

அமைச்சின் மேலதிக செயலர் தகவல்

யாழ்ப்பாணம், ஓக. 26

காணாமல் ஆக்கப்பட்டோ ரின் உறவினர்களுக்கு உத வித் தொகையாக மாதாந் தம் 6 ஆயிரம் ரூபா வழங்கு வதற்கு காணாமல் ஆக்கப் பட்டோர் பணியகம் பரிந்து ரைந்திருந்தது. இந்தத் தொகை

23

அடுத்த வாரமளவில்

## மோடியுடன் முக்கிய பேச்சு நடத்த புதுடில்லி பறக்கின்றது கூட்டமைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய அரசு டன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு அடுத்து வாரமளவில் புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளது.

'டில்லிக்கான பயணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

23

## எதிர்கால கொள்கையை தெரிவிக்காது வேட்பாளரை அறிவிக்கப் போவதில்லை

புதுக்குண்டு போடுகிறார் ரணில்

கொழும்பு, ஓக. 26

நாட்டைக் கட்டியெழுப்பும் எதிர்கால கொள்கைத் திட் டங்களை மக்களுக்கு அறி விக்காமல் அரச தலைவர் வேட்பாளரை அறிவிக்கப் போவதில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்தார்.

ஜனநாயக தேசிய முன்ன ணிக்கான உத்தேச யாப்புக் கான சகல திருத்தங்களும் முழுமையடைந்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி உட்பட கூட்டணியில் இணைய வுள்ள சகல கட்சி களினதும் அடை

23

சலுகை அரசியலை கைவிட்டு

## தமிழர்களின் உரிமையை வெல்ல கூட்டமைப்பு கைகோர்க்கவேண்டும்

இப்படிக் கோருகிறார் கோத்தபாய

கொழும்பு, ஓக. 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனியும் சலுகை அரசிய லுக்கு அடிபணியாமல் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க எம்முடன் கைகோர்க்கவேண்டும். தமிழ் மக்கள் எம்மை நம்பு கின்றார்கள்.

23

தொடரும் அவலம்;

## காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிய தந்தை உயிரிழப்பு

முல்லைத்தீவு, ஓக. 26

இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிய லைந்த தந்தை ஒருவர் விபத்தில் சிக்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். மக னைத் தேடியவரது மனை வியும் விபத்தில் படுகாய மடைந்தநிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

கொழும்புக்குச் சென்று வரும் போது இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள் ளது. முல்லைத்தீவு

23

## பேராயரின் கோரிக்கையை ஆதரிக்கின்றார் கோத்தபாய

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்: சுயாதீன ஆணைக்குழு வேண்டுமாம்!

கொழும்பு, ஓக. 26

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஆராய் வதற்கு சுயாதீன ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்ட கையால் விடுக்கப்பட்ட கோரிக்கை

23

## எந்தக் குற்றச்சாட்டும் இல்லாத என்னை எல்லோரும் ஆதரியுங்கள்

அநுரகுமாரவின் கோரிக்கை இது

கொழும்பு, ஓக. 26

போர்க் குற்றங்களுக்கு உள்ளாகியவர்களுக்கும் ஊழல் மோசடிக்காரர்களுக்கும் வாக்களிப்பதால் எந்தப் பயனும் இல்லை. எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படாத வன் நான். என்னை ஆதரிக்குமாறு மூவின மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு மக்கள் விடுதலை முன் னணியின் (ஜே.வி.பி.) நாடாளுமன்ற உறுப்பி னரும், தேசிய மக்கள் சக்தியின் அரச

23

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள்
பொதிகள் சேவை
COURIER Services
- ஆகாய, கடல்மார்க்கமாக அதிவிரைவான பொதிகள் சேவை
- பால்மா, கடலுணவு, இறைச்சி வகைகள், எண்ணெய் வகைகள், மருந்துப் பொருட்கள், பழவகைகள், குறுகிய வாழ்நாள் காலம் உள்ள உணவுப் பொருட்கள் அனைத்தையும்
- அதிகுறைந்த கட்டணத்தில் அதிவிரைவான சேவை

Harikanan Express

20 வருடகால அச்சுத்துறை அனுபவம்
இன்று முதல் புலம்பெயர் உறவுகளுடன் உறவுப் பாலமாக...
கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்
021 222 2737

# உங்கள் நட்சத்திரங்களுக்குரிய பொதுவான குணங்கள்



## சுவாதி

தேவ கணத்தைச் சேர்ந்தது, இந்த நட்சத்திரம். மாதுளை முத்து போன்று சிவந்து காணப்படும். இது ஒரு வைரக்கல் நடுவில் ஜொலிப்பது போன்று தோற்றமளிக்கும். இதுவும் ஒற்றை நட்சத்திரமே! பௌர்ணமி தினங்களில் ஒட்சிசன் எடுக்கக் கடலின் மேற்பரப்புக்குச் சிப்பிகள் வரும்போது, விண்ணிலுள்ள பனித் துளிகள் அதில் விழுந்து முத்தாகும் நிகழ்வு, சுவாதி நட்சத்திரத்து நாளில்தான் சாத்தியமாகும் என்று சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

**பொதுவான குணங்கள்:**
அழகும், தெய்வ பக்தியும் மிகுந்தவர்கள். கூரிய அறிவு, ஞாபக சக்தி, கலைகளில் ஆர்வம், தன்னம்பிக்கை, தாராள மனப்பான்மை, இரக்க சிந்தனை கொண்டவர்கள். ஓரளவு தர்ம நியாயத்தைக் கடைப்பிடிப்பவர்கள். அதேநேரம் கோபம், பாசம், சுயநலமும் இவர்களிடம் உண்டு. இந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங் களும் துலாம் ராசியில் அமையும். துலாக்கோல் போல் நல்லது கெட்டதை சீர்தூக்கிப் பார்த்து, தீயதை அகற்றி நல்லதைக் கடைப்பிடித்து, வாழ்வில் உயர்பவர்கள்.

**சுவாதி நட்சத்திரம் முதல் பாதம்:** இதன் ஆட்சிக் கிரகம் குரு. புத்திசாலிகள். தைரியசாலிகள், நியாயவாதிகள், பேச்சுத்திறன் உடையவர்கள், பலமொழிகளைக் கற்பார்கள். கவிதைத் திறமை இருக்கும். அழகை ஆராதிப்பவர்கள். திட்ட மிட்டுச் செயற்படுபவர்கள்.

**சுவாதி நட்சத்திரம் இரண்டாம் பாதம்:** இதனை ஆட்சி செய்பவர் சனி. இந்த பாதத்தைச் சேர்ந்தவர்கள் கடும் உழைப்பால் பொருளீட்டுவர். அதிகாரம் செய்வார்கள். சுயநலம் கொண்டவர்கள். சாதிக்கத் துடிப்பவர்கள். சொத்து சேர்க்கவும் விரும்புவர். தலைமைப் பண்பு மிகுந்தவர்கள். நல்ல நண்பர்களாகத் திகழ்வர்.



**சுவாதி நட்சத்திரம் மூன்றாம் பாதம்:** இதற்கும் அதிபதி சனி பகவான்தான். இந்த பாதத்தைச் சேர்ந்தவர்களுக்கு கர்வம் இருக்கும். ஆழமானவர்கள். கோபமும் மூர்க்கத்தனமும் உண்டு. அவசரமாகச் சிந்தித்து, அவசரமாகச் செயற்பட்டுத் தவறிழைப்பார்கள். உணர்ச்சிவசப்படுபவர்கள். ஆனால் பாசமும், கடமை உணர்ச்சியும் மிக்கவர்கள்.

**சுவாதி நட்சத்திரம் நான்காம் பாதம்:** இதன் அதிபதி குரு. நல்ல நடத்தை, புகழைத் தேடும் உத்வேகம் உண்டு. மற்றவர்கள் மெச்ச வாழ்வார்கள். நட்பு, உறவுகளிடம் பற்றும் பாசமும் மிக்கவர்கள். ஆடம்பரத்தை விரும்புவார்கள். தெய்வ பக்தி, கடமையுணர்வு மிக்கவர்கள். உழைத்து உயர் பவர்கள்.

## விசாகம்

இது முருகப்பெருமானின் அவதார நட்சத்திரம். குயவனின் மண்பாண்ட சக்கரத்தைப் போல் அமைந்துள்ள ஐந்து நட்சத்திரங்களின் கூட்டம் இது. விசாகத்தின் முதல் மூன்று பாதங்கள் துலா ராசியிலும், 4ஆம் பாதம் விருச்சிக ராசியிலும் அமையும்.

**பொதுவான குணங்கள்:**
அறிவாளிகள், தெய்வபக்தி உள்ளவர்கள், கடமை உணர்வுடன் செயலாற்றுபவர்கள், ஆடம்பரப் பிரியர்கள், பணம் சேர்ப்பதில் ஆவல் கொண்டவர்கள், மனித நேயமும், நியாய உணர்வும் உள்ளவர்கள், பேச்சுத் திறமை கொண்டவர்கள்.

**விசாகம் நட்சத்திரம் முதல் பாதம்:**
இதன் அதிபதி செவ்வாய். இந்த பாதத்தில் பிறந்தவர்கள் சுகவாசிகளாகத் திகழ்வர். சொத்து சுகம் மட்டுமன்றி, நட்பையும் சுற்றத்தையும் விரும்புவார்கள். கோபம், எளிதில் உணர்ச்சி வசப்படுதல், பிடிவாதம், பிறரை நம்பாமை ஆகிய குணங் களும் இவர்களிடம் உண்டு.

**விசாகம் நட்சத்திரம் இரண்டாம் பாதம்:** இதன் அதிபதி சுக்கிரன். இந்தப் பாதத்தில் பிறந்தவர்கள் சுகவாசிகள், சுயநலம் மிகுந்தவர்கள். வாழ்க்கையை ரசித்து வாழ்வர். உணர்ச்சிபூர்வமாகத் திகழும் இவர்கள், நல்ல அறிவாளிகள். தன்னம்பிக்கையும், கலைகளில் ஈடுபாடும் உண்டு.

**விசாகம் நட்சத்திரம் மூன்றாம் பாதம்:**
இதன் அதிபதி புதன். இதில் பிறந்தவர்கள் பக்திமான்கள். கணிதம், விஞ்ஞானத்தில் ஈடுபாடு கொண்டவர்கள். திட்டமிட்டு வாழ்பவர்கள். பிறரை நம்பமாட்டார்கள். உயர் பட்டங்கள், பதவிகளைப் பெறுவார்கள். புகழுடன் வாழ்வார்கள்.

**விசாகம் நட்சத்திரம் நான்காம் பாதம்:** இதன் அதிபதி சந்திரன். இதில் பிறந்தவர்கள் பொருளீட்டுவதில் வல்லவர்கள். தாராளமாகச் செலவு செய்வார்கள். குடும்பப் பாசம் மிக்கவர்கள். சுகமான, ஆடம்பரமான, கௌரவமான வாழ்க்கை வாழ விரும்புபவர்கள். தாராள மனப்பான்மை இருக்கும். பொதுவாழ்வில் ஈடுபாடு இருக்கும். புகழை நாடுபவர்கள்.

# உங்கள் பிறந்த திகதியின்படி உங்களின் பலவீனங்கள் எவையென்று தெரியுமா?

(தொடர்ச்சி)

உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய ரகசியங்கள் உங்களுடைய பிறந்த எண்ணில் இருக்கிறது. ஏனெனில் எமது எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் எம்முடைய பிறந்த எண் முக்கியப்பங்கை வகிக்கிறது. எம்முடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் என அனைத்தும் எம் முடைய பிறந்த திகதியை வைத்துக் கணிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.



**பிறந்த எண் 6**
பிறந்த திகதி 6, 15 மற்றும் 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 6 ஆகும். இந்த எண்ணில் பிறந்த வர்கள் எங்கு சென்றாலும் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பவராக இருப்பார்கள். இவர்களின் மிகப்பெரிய பிரச்சினையே மற்றவர்களை எளிதில் நம்பிவிடுவதுதான். தகுதியான நபர்களை மட்டும் நம்பும் பழக்கத்தை இவர்கள் வளர்த்து கொள்ள வேண்டும் இல்லையென்றால் பிரச்சினை தான்.

**பிறந்த எண் 7**
7, 16 மற்றும் 25 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 7 ஆகும். மற்றவர்களின் கருத்தைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். இவர்கள் குறுகிய காலத்திலேயே வெற்றியை அடைந்து விடுவார்கள். இதனால் அவர்களுக்கு ஆணவம் கொஞ்சம் அதிகமாக இருக்கும். அதேசமயம் தன்னை விரும்புப வர்களைக் காயப்படுத்துவதை இவர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள்.

**பிறந்த எண் 8**
8, 17 மற்றும் 26 ஆம் ஆகிய திகதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 8 ஆகும். இந்த எண்ணில் பிறந்தவர்கள் தங்கள் வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள். அதனால் அதிக சுதந்திரமாக வாழ விரும்பு வார்கள். இவர்களை மற்றவர்கள் அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்வரார்கள். அதனாலேயே இவர்களுக்கு நண்பர்கள் மிகவும் குறைவாகவே இருப்பார்கள்.

**பிறந்த எண் 9**
9, 18 மற்றும் 27ஆம் ஆகிய திகதிகளில் பிறந்தவர்களின் பிறந்த எண் 9 ஆகும். செவ்வாயால் ஆளப்படுவதால் இவர்கள் எப்பொழுதும் பதற்றமாகவும், கவலையாகவும் இருப்பார்கள்.
இவர்கள் கடினமாக உழைக்க கூடியவராக இருந்தாலும் எப்பொழுதும் இவர்களைச் சுற்றி எதிர்மறை சிந்தனைகள் இருந்து கொண்டே இருக்கும். மூர்க்கத்தனமும், முன்கோபமும் இவர்களிடம் அதிகமிருக்கும் அதுதான் இவர்களின் பலவீனமும் கூட.



# ரஜினியுடன் நடிப்பது நீண்ட நாள் கனவு

-ஐஸ்வர்யா ராஜேஷ்

தமிழ் படங்களில் மட்டும் கவனம் செலுத்தி வந்த ஐஸ்வர்யா ராஜேஷ், அடுத்து மலையாளம், தெலுங்கு என வெவ்வேறு மொழி களிலும் நடிக்க தொடங்கிவிட்டார். இந்த நிலையில் சிவகார்த்திகேயன், விக்ரம் பிரபுவுக்கு தங்கையாகவும் நடித்து வருகிறார். இதுபற்றி அவர் அளித்த செவ்வியில் கூறிய தாவது:

"ஒரு படத்தில் என்னுடைய பாத்திரம், அது என்ன சொல்லப் போகிறது?, அதில் எவ்வளவு முக்கியத்துவம் இருக்கு என்பதைத்தான் பார்ப்பேன். நடிச்சா கதாநாயகியாகத் தான் நடிக்க வேண்டும் என்ப தில்லை.

'நம்ம வீட்டுப் பிள்ளை' படத்தில் தங்கை கதாபாத்திரம் மிகவும் சூப்பரா இருக்கும். இந்தப் படம் பார்க்கும்போது உங்களுக்கே தெரியும். அதே போல்'கனா' படத்தில் சத்யராஜ் சேர்தான் நாயகன். நான் ரஜினிக்கு பெரிய ரசிகை. அவர்கூட ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என்பது நீண்ட நாள் ஆசை. இனி யாவது நடக்குமா என்று பார்க்கலாம்". இவ் வாறு அவர் கூறியுள்ளார்.

## twitter

சப்பாணி@manipmp

தாத்தா கதையில் யாரும் இறந்ததே இல்லை.
தாத்தா இறந்த பிறகு ஒவ்வொரு கதையாய்
இறந்து போயின

நட்சத்திரா@star_nakshatra

சாப்பிடும்போது புத்தகம் படிக்காத
ஆச்சி அம்மாவிடம்

சாப்பிடும்போது டிவி பாக்காத
அம்மா என்னிடம்

சாப்பிடும்போது மொபைல் பாக்காத நான்
பிள்ளையிடம்

தலைமுறை மாறினாலும் ஏதோ ஒரு
பழக்கம் ஒட்டிக்கொள்ளத்தான் செய்கிறது

கோழியின் கிறுக்கல்!!

எவ்வளவு பெரிய படிப்பு படித்திருந்தாலும்,
கைநாட்டு வச்சி தான் கைப்பேசியை திறக்க
வேண்டியிருக்கிறது!!

சப்பாணி@manipmp

நேர்காணல் என்பது
டீசண்டாய் கலாய்ப்பதே

சிலந்தி™@nandhu_twitts

"ஐ" போன் மாதிரி பயனில்லா
'செல்'வாக்கில் வாழாதீர்கள்..!!




தம்பி எங்கயோ இருக்கிற அமேசன் காடு எரியுது என்று இங்க இருந்துகொண்டு Pray for Amazon போடுறியே இயற்கையில அவ்வளவு பாசமாப்பா உனக்கு?

ஆமா அமேசான்ல இருந்துதான் உலகத்துக்கு 20வீத ஒட்சிசன் கிடைக்குதாம். அது எரிஞ்சி போற தால ஒட்சிசன் கிடைக்காம உலகம் பாதிக்குமாம்... அப்படியா 20வீத ஒட்சிசன் கொடுக்கிற அமேசான் இருக்கிற நாட்டுக்கு அந்த காட்டை பாதுகாக்க நீ இதுவரை ஏதாவது உதவி செய்து இருக்கியா?

இல்லையே...!!
இதுக்கு முதல் எப்பவாச்சும் அமேசன் காடு பற்றி யும் அது கொடுக்கும் ஒட்சிசன் பற்றியும் போஸ்ட் போட்டிருக்கி யாப்பா?
இல்லை ப்ரோ...

சரி நீ இருக்கும் இந்த ஊர் கொஞ்ச காலத்துக்கு முதல் காடா இருந்திச்சே அது தெரியுமா உனக்கு?

ஆமா! இங்கல்லாம் ஆளே இருக்கயில்லை. அதை வெட்டி அழிச்சு நகரமாக்கி வீடு கட்டடம் என்று கட்டி எழுப்பிட்டம். இப்ப நிலம் கோடிக்கணக்கில போகுது. பக்கத்தில பாருங்க வங்கி, கடைகள் என்று ஏகப்பட்டது வந்திருச்சி சாதிப்பான்ல தமிழன்...

ஏன்பா இந்தக் காட்டை அழிக்கும்போது உனக்கு ஒட்சிசன் காபனீரொக்சைட்டு பற்றியெல்லாம் தெரி யாதாப்பா?

தெரியும்! அதெல்லாம் பார்த்தா நம்ம ஏரியா வளர்ச்சி அடைஞ்சிருக்குமா? வெறும் காடாத்தான் கிடந்திருக்கும்.

ஏன்டா உன்னோட சுயநலத்துக்கு உன்னோட ஏரியாவில இருக்கிற காட்டை நீ அழிப்பாய். போட்டி போட்டு நிலம் வாங்குவாய். அதுக்கு வளர்ச்சி என்று காரணம் சொல்வாய். இப்ப அமேசன் எரியுது என்ற உடன் ஒட்சிசன் கிடைக்காமல் போகப்போகுது என்று ஒப்பாரியா வைக்கிறாய்? அடுத்தவன் காடு வளர்த்து உனக்கு ஒட்சிசன் கொடுப்பான். நீ உன் ஏரியாவில உள்ள மரத்தை யெல்லாம் வெட்டி வீடு கட்டி சொகுசா வாழ்ந்திட்டு Pray for Amazon போடுவியா? வாயில் மிதிக்க...! முதல் மரியாதையா ஓடிடு அப்புறம் உனக்கு Pray for போடவேண்டி வந்திடும்

Vajorth VN Guru

இயற்கையின்
சே(சோ)லை
அடியின்றிக்கருகி
தாயின் உடல்
தீயில் உருக
பாத்திருக்கும் நாம்
நவீனக் குழந்தைகள்.



தன் மகனுக்கு கிருஷ்ணர் வேடமிட்டு கோகுலாஷ்டமி கொண்டாடிய ரஷ்ய பக்தை.

ரஷ்யக் கிருஷ்ணர் வெண்ணையில் வடித்த சிலை போல இருப்பது அற்புதம்.









## பணம் பொன்மொழிகள்

பணத்தின் அருமையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் யாரிடமாவது கடன் கேட்டுப் பாருங்கள்.

பெஞ்சமின் பிராங்க்லின்.

பணத்தில் செல்வமில்லை. அது உன் மனதில்தான் இருக்கிறது.

நபிகள் நாயகம்.

பணம் தரை காணமுடியாத ஆழ்கடல். அதில் கௌரவம், மனசாட்சி, உண்மை ஆகிய அனைத்தும் மூழ்கிப் போய் விடும்.

கோஸ்லே.

பணம் நல்ல வேலைக்காரன்; மோசமான எஜமானன்.

டி. பவர்ஸ்.

பணத்தைத் தவிர வேறெதுவும் தேனை விட இனிப்பாக இருக்காது.

பெஞ்சமின் பிராங்க்லின்.

பணம் உரம் போன்றது. பரவலாகத் தூவாவிட்டால் பயன் எதுவும் கிடையாது.

பிரான்சிஸ் பேகன்.

# ஒரே காலப் பகுதியில் 9 தாதியர்களும் அவர்களது குழந்தைகளும்



அமெரிக்காவின் ஓரிகன் மாகாணத்திலுள்ள போர்ட் லாண்ட்நகரில்உள்ளதனியார்மருத்துவமனையொன்றில் பணிபுரியும் 9 தாதியர்கள் ஒரே நேரத்தில் கர்ப்பமாகினர். இதையடுத்து குறித்த 9 கர்ப்பிணி தாதியர்களும் ஒன்றாகஇருக்கும்ஒளிப்படத்தைமருத்துவமனைநிர்வாகம் வெளியிட்டு "எங்கள் மருத்துவ நிலையத்தின் 9 தாதியர்கள் ஒரே நேரத்தில் கர்ப்பமாகி இருக்கிறார்கள். அவர்கள்தங்கள்குழந்தைகளைகடந்த ஏப்ரல்மற்றும்ஜூலை மாதங்களில் பிரசவிப்பதற்குள்ளார்கள். அவர்களுக்கு வாழ்த்துக்கள்" என்று தெரிவித்திருந்தது.

இந்த ஒளிப்படம் அப்போது சமூக வலைத் தளத்தில் பெரும்கவனத்தை ஈர்த்தது. சமூகவலைத்தள ஆர்வலர்கள் தாதியர்களுக்குவாழ்த்துக்கூறிஅந்தஒளிப்படத்தைப் பகிர்ந்தனர். இந்த நிலையில் அந்த தாதியர்கள் 9 பேருக்கும் கடந்த 3 மாதங்களுக்கு முன்பு குழந்தைகள் பிறந்துள்ளன. தாதியர்கள்9பேரும்தங்களதுகுழந்தைகளுடன் இருக்கும்ஒளிப்படத்தைஅந்தமருத்துவமனைநிர்வாகம் தற்போது வெளியிட்டுள்ளது. சமூக வலைத்தளங்களில் வைராலாகி வரும் அந்த ஒளிப்படம் அதிக லைக்குகளை குவித்து வருகிறது.





கடந்தவாரம் 'பிக்பாஸ்' வீட்டில் இருந்து வெளியேறிய அபிராமி, சாண்டியின் வீட்டுக்குச் சென்று, சாண்டியின் மனைவி மற்றும் குழந்தையை சந்தித்து, ஒளிப்படம் எடுத்துக்கொண்டார்..

# 'ஸ்பைடர்மேன்' படங்கள் தயாரிப்பை கைவிட்டது மார்வெல் நிறுவனம்



உலகப்புகழ்பெற்ற "ஸ்பைடர்மேன் இல்லாமல் அடுத்த படத்தைத் தயாரிக்க மார்வெல் நிறுவனம் திட்ட மிட்டுள்ளது. 'ஸ்பைடர் மேன்' படங்களை 2017 மற்றும் 2019ஆம் ஆண்டுகளில் மார்வெல்நிறுவனம் தயாரித்துள்ளது. இவ்விரு படங்களும் வசூலில் பெரும் சாதனைபடைத்துள்ளன.

இதில் டாம் ஹாலண்ட் ஸ்பைடர் மேனாக நடித்திருந்தார். இனிமேல் 'ஸ்பைடர்மேன்' படங்களைத்தயாரிப்பதில்லை என்று மார்வெல்நிறுவனம்முடிவெடுத்துள்ளது.

'ஸ்பைடர்மேன்' படங்களின் தயாரிப்புநிறுவனங்களான டிஸ்னி நிறுவனத்துக்கும் சோனி பிக்சர்ஸ் நிறுவனத்துக்கும் இடையே வர்த்தக ரீதியாக நடைபெற்ற பேச்சுகளில்'ஸ்பைடர்மேன்'படங்களைத் தயாரிக்கப்போவதில்லை என்று மார்வெல் தயாரிப்புநிறுவனத்தலைவர் கெய்ன் பெய்ஜ் அறிவித்துள்ளார். இந்த முடிவு ஏமாற்றமளிப்பதாக சோனி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆயினும்கெய்ன்பெய்ஜின் முடிவுக்கு மதிப்பு கொடுப்பதாகசோனிநிறுவனம்வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈழத்தமிழர்களை காயப்படுத்தும்படி நடிப்பை வெளிப்படுத்தேன்!

- விஜய்சேதுபதி

நீட் பிரச்சினை தொடங்கி காஷ்மீர்ப் பிரச்சினை வரை தன் கருத்துக்களையும் தயங்காமல் பதிவு செய்ய விஜய்சேதுபதி தவறுவதில்லை. அவருடனான செவ்வியில்.

**எல்லாஇடங்களிலும்உங்களுடையவாழ்க்கைஅனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான காரணம் என்ன?**

"வாழ்க்கையில் எல்லாமே அனுபவம்தானே சகோதரா. நான் ஏன் திரும்பத்திரும்பச்சொல்றேன் என்றால், எனக்கு சமூகத்தில் இருந்துதான் இந்த அனுபவம் கிடைக்கிறது. அதனால, அடுத்த தலைமுறைக்கு இதைச் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இருக்கு. சொல்லப்போனால் இறப்பு, ஒரு அனுபவம்தான். அது கண்டிப்பாக ஒரு நாள் புரியும். நானும் அதுக்குத்தான் காத்திருக்கிறேன். வாழ்க்கையில் பணம் சம்பாதிக்கிறது, அதை இழந்து நிற்பது, உணர்ந்து நிற்பது, அதிலிருந்து மீண்டு எழுந்துவருவதுஎல்லாமேஅனுபவம்தான்."

**முத்தையா முரளிதரன் வாழ்க்கை வரலாற்றில் நடிப்பது பற்றி?**

"சின்ன வயசுல இருந்து நான் கிரிக்கெட் பார்த்தது இல்லை. முத்தையா முரளிதரனைப் பார்க்கும்போது, இதை நான் அவரிடம் சொன்னேன். என்னுடைய நண்பர்கள் பந்து எடுக்கத்தான் என்னை விளையாடவே கூட்டிப்போவார்கள். கிரிக்கெட்டின் அடிப்படைகூட எனக்கு முழுசா தெரியாது. கற்பனையான ஒரு கதைதான். அதற்கான கதாபாத்திரத்தை ஓரளவு தெரிந்து கொள்வேன். ஆனால்இதுஏற்கெனவேஇருக்கிறஒருவரைப்பற்றியகதை. இதை நான்எப்படிநடிக்கப்போகிறேன்என்றுதெரியவில்லை. படம்முழுக்கவேகிரிக்கெட்டைப்பற்றியதுமட்டுமல்ல, அவருடையவாழ்க்கையும் முக்கியமான அங்கமாக இருக்கும்."

**இந்தப்படம்தொடர்பாக ஈழத்தமிழர்கள் உங்கள் மேல் சில விமர்சனங்களும், நடிக்கக்கூடாது என்ற கோரிக்கையையும் முன் வைக்கிறார்களே?**

"என்மேல்அன்புவைக்கிறவர்கள்எவரையும்நான் இழக்க மாட்டேன். அப்படி இழக்கிற மாதிரியான ஒரு காட்சிகூட இந்தப் படத்தில் இருக்காது.

என்மேல்அன்புசெலுத்துபவர்களைகாயப்படுத்தும் வேலையை நான் எப்படிச் செய்வேன்? நான் அவ்வளவு சுயநலமான ஆள் கிடையாது. படம் வந்தபின் இது மக்களுக்குப் புரியும் என்று நம்புகிறேன். இதையும் மீறி, காயப்படுத்தும்படி நான் நடந்துகொண்டால், சின்னக்குழந்தையா இருந்தால்கூடமன்னிப்புக் கேட்பதற்கு நான்தயங்க மாட்டேன்."

**மற்ற மொழிப் படங்களில் நடிக்கின்றீர்கள். இங்கேயும் அங்கேயும் என்ன வித்தியாசம்?**

"மொழிதான்வித்தியாசம். அத்துடன், எல்லாமேகலைதான். எல்லா மொழிகளிலேயும்மனிதனைச்சுற்றிஉறவுகள், அரசியல், சாதி, மதம், வன்மம்என்றுநல்லதுகெட்டதுஎல்லாமேஇருக்கும். இது அந்தந்த பகுதி மக்களுக்கு வேறுபடும். அவ்வளவுதான். ஆனால், கலையைப்பொறுத்தவரை இனம், மொழி, மதம்என எதுவும்இல்லை."

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
24 . 06 . 1981



உதிர்வு
27 . 07 . 2019

### அமரர் அந்திவண்ணன் ஜெயலட்சுமி (ஜெயா)

கடந்த 27.07.2019 அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.08.2019) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்களும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அதன்பின்னர் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்புத்தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்குப் பல்வேறு வழிகளில் உதவிகளை வழங்கிய அனைவருக்கும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள், பதாகைகள், போன்றவற்றை வெளியிட்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

**துர்க்காபுரம்,**
**தெல்லிப்பழை.**

**குடும்பத்தினர்**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் இராஜேஸ்வரி பொன்னம்பலம்

மலர்வு
18.03.1948

உதிர்வு
17.08.2017

திதி:- ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் அபரபக்க ஏகாதசி (26.08.2019)



அன்பும் பண்பும் நிறைந்த எங்களது
அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட
இனிக்கும் நினைவுகளுடனே
இரண்டாண்டும் ஆயிற்றோ
நீவீர் எம்மை விட்டுப் பிரிந்து
சொந்தபந்தங்கள் வாழ்ந்தவாதாரமாய்
மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே!
என்றும் உம்மை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்
பெற்றிடுக சாந்தி! ஓம் சாந்தி!

**இல.43, அம்மன் வீதி,**
**நல்லூர்.**

(CS/27620)(11,17)

**குடும்பத்தினர்.**
**மகன்:- பொ.அதீசன்**

## மரண அறிவித்தல்

### நரசிங்கராசா பேரின்பராசா (பேரின்பு)

(பிரபல அலுமினிய பிற்றிங் பொருத்துநர்)



சாவகச்சேரி டச்சுறோட்டை பிறப்பிடமாகவும் கிராம்புவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கராசா பேரின்பராசா அவர்கள் 25.08.2019 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் நரசிங்கராசா பரமேஸ்வரியின் அன்பு மகனும் கனகலிங்கம் நாகம்மாவின் பாசமிகு மருமகனும் தர்சினியின் அன்புக்கணவரும் விதூசன், அக்சியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பராணி, ஜெயபிரசாத் ஆகியோரின் சகோதரனும் புஸ்பராணி, புஸ்பமாலா, புஸ்பலதா, புஸ்பகலா, செல்வராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று 26.08.2019 காலை 9:00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிராம்புவில், சாவச்சேரி**


**தகவல்: குடும்பத்தினர்**
**077 922 0804**

**பசு மாடுகள் விற்பனைக்கு**
வவுனியாவில் பட்டியில் உள்ள
ஜேர்சி கலப்பின பசுமாடுகள்.
கன்றுகள் மற்றும் நாம்பன்களும்
உடனடி விற்பனைக்குண்டு.
(CS 00570) (14,17)
தேவன் - 077 258 5408
பவானி - 077 199 9202

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன்
advt@uthayan.com,
021493 1111

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சுதன்



பிறப்பு
22.05.1971

இறப்பு
02.08.2019

கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சுதன் 02.08.2019 வெள்ளிக்கிழமை பிரான்சில் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நேசம்மாவின் அன்பு மகனும், கௌரியின் அன்புக் கணவரும், கிருஷிகா (சிந்து), சஞ்சு, திஸ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அன்னுங்கை,**
**உரும்பிராய் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(cs.27563) (13.17)

**076 984 0479, 077 163 2301**

## மரண அறிவித்தல்

### திருமதி திலகவதி மனோகரன்



தோற்றம்
05.08.1947

மறைவு
25.08.2019

வேலணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும், குரும்பைகட்டி - புலோலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி மனோகரன் 25.08.2019 காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தேவநாயகம், இராசவதி மற்றும் இரத்தினவதி (UK), தனபாலன் (UK) ஆகியோரின் சகோதரியும் மனோகரனின் அன்பு மனைவியும் கௌரி, Dr. லக்ஸ்மன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கரிகரன் (கட்டடக் கலைஞர் - கொழும்பு), Dr.யனோஜினி ஆகியோரின் மாமியாரும் அபூர்வா, கரிதாமோதர், சிறிசண்முகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சீதாலட்சுமி, சோமசேகரகுருக்கள், காலஞ்சென்ற தனலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் தாரணி(UK), றமணன், வினோத் (UK), றொசான்(UK) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், வாகீசன் (அதிபர்), உருத்திரன் கிராமஅலுவலர் (கொழும்பு), மேனகா (கனடா) ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வைறகவுஸ் மலர் சாலையில் இன்று (26.08.2019) திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**குரும்பைகட்டி,**
**புலோலி.**

(C 32689)(14,17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**077 196 8666**

## மரண அறிவித்தல்

### கனகசபை ஆனந்தராசா



பிறப்பு
08.02.1968

இறப்பு
24.08.2019

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் தாவடியை வதிவிடமாகவும் கொண்ட கனகசபை ஆனந்தராசா 24.08.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், தனபாலசிங்கம் காலஞ் சென்ற விமலாதேவி மற்றும் வசந்தராணி தம்பதியரின் அன்பு மருமகனும், சர்மலாவின் அன்புக் கணவ ரும், சிந்துஜா, வைஷ்ணவி, தக்ஷ்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், குயிந்தனின் (பிரான்ஸ்) அன்பு மாமனும், அழகேந்திரனின் அன்பு சகோதரனும், யசோதரன் - கேமலா (சுவிஸ்), கிருபாகரன்- தேவப்பிரியா (சுவிஸ்), கோகுல ராஜன்- கோமதி (லண்டன்), பகீரதன் - சாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2019) திங்கட்கிழமை பி.ப. 1.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/27611)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பே: 077 607 7137, 077 337 6950**

# புத்திசாலி மனைவி!

வீராச்சாமி என்ற ஏழை நெசவாளி இருந்தான். அவன் மனைவி தனபாக்கியம் மிகுந்த அறிவாளி. அவள் பெருமையை ஊரார் தெரிந்துகொள்ள விரும்பினான். அதற்காக, பெரிய விளம்பர பலகையை உருவாக்கி வீட்டு வாசலில், அமைத்து, "என் மனைவிதான், உலகிலேயே அறிவில் சிறந்தவள்; அவள் அறியாததே இல்லை" என்று எழுதி வைத்தான்.

அந்த வழியாக, நகர்வலம் வந்த, அந்த நாட்டு மன்னர் விளம்பரத்தைப் பார்த்தார்; அவருக்கு எரிச்சல் ஏற்பட்டது.

அவைக்குச் சென்றவர், ஏவலர்களிடம், நெசவாளியை அழைத்து வரும்படி உத்தரவிட்டார். வீராச்சாமி வீட்டுக்குச், சேவர்கள் வந்து அவனை அழைத்தனர்.



நடு நடுங்கினான் வீராச்சாமி. அவன் மனைவி தைரியம் கூறினாள்.

"நீங்கள் மன்னரைச் சென்றுப் பாருங்கள். மற்றவற்றை, நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றாள்.

வீராச்சாமியை, மன்னர் முன் நிறுத்தினர்.

"உன் வீட்டின் முன் உள்ள, விளம்பரப் பலகையைப் பார்த்தேன். உன் மனைவி, அறிவில் சிறந்தவள் தானே! நான், மூன்று சோதனைகள் வைக்கிறேன். அவற்றில் வெற்றி பெற்றால், உன் மனைவி அறிவாளி என ஒப்புக்கொள்ளலாம்" என்றார்.

"சொல்லுங்கள் மன்னா" என்று, நடுக்கத்தை மறைத்து கேட்டான், வீராச்சாமி.

"நீ மிகச் சிறந்த நெசவாளி என்பதை அறிவேன். எம் நாட்டு சாலைகள் முழுவதையும் மூடும் அளவுக்கு, துணி நெய்து தர வேண்டும். எம் நாட்டு கடலில் உள்ள நீரளவுக்கு, பழச்சாறு தயாரித்து தர வேண்டும். மூன்றாவதாக, ஒரு பன்றியை மலை போல் பெரிதாக்கி காட்ட வேண்டும்" என்றார்.

'திரு திரு' என விழித்தான் வீராச்சாமி.

"என்ன முழிக்கிறாய்! உன் மனைவி அதிபுத்திசாலி என்று பலகையில் எழுதி வைத்துள்ளாய், அப்புறம் என்ன?" என்றார் மன்னர்.

"நிச்சயமாக மன்னா" என்று கூறி, தப்பித்தோம், பிழைத்தோம் என, வீடு வந்து சேர்ந்தான் வீராச்சாமி.

கணவரின் வெளிறிய முகம் கண்டு, விசாரித்தாள். விவரத்தைக் கூறினான். 'இவ்வளவுதானா...' என்று, சில யோசனைகளை அவனுக்கு கூறினாள்.

மறுநாள் அரசவைக்கு, மனைவி கொடுத்த சில பொருள்களை எடுத்துச் சென்றான். அவன் கையில், அளக்கும் தடி, ஒரு பாத்திரம், எடை போடும் தராசு ஆகியவை இருந்தன.

"மன்னர் நாட்டில் உள்ள சாலைகளின் நீளத்தை, இந்த அளவுத் தடியால் அளந்து சொல்லுங்கள். கடல் தண்ணீரை எல்லாம் இந்த பாத்திரத்தால் அளந்து சொல்லுங்கள். அந்த மலையை இந்த தராசால் எடை போட்டு சொல்லுங்கள். நீங்கள் சரியான அளவுகளைகொடுத்தால், துல்லியமாகத் தயாரித்து வருவேன்" என்றான்.

மன்னர் விழி பிதுங்கினார். வீராச்சாமியின் மனைவி தனபாக்கியத்தின் வேலை தான் இது என்பதைப் புரிந்து கொண்டார்.

அவள் புத்திசாலிதான் என்று ஒப்புக் கொண்ட மன்னர் வீராச்சாமிக்கு ஏராளமான பரிசுகளைக் கொடுத்து அனுப்பினார்.

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg ) மொத்தமாகவும் (ரூபா 100), சில்லறையாகவும் (ரூபா 110) பெற்றுக்கொள்ளலாம்.

**சிவா நறுமணப்பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகில்)
**021 222 2567**

(IN/10801) (11.17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1028
சீட்டிழுப்பு திகதி 2019.08.24 சனிக்கிழமை
E 29 51 63 69
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
தானியங்கி குரல் பதிலுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.
டிக்கட் விநியோகத்திற்கான உடனடி அழைப்பு 011 4 062 002 / 077 105 4894

கோடீபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 485
திகதி: 2019 ஆகஸ்ட் 23
வர்ணம்: பச்சை
வெள்ளி
G 04 13 33 38
வாசி 9 7 4 9 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.137,123,738/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
தானியங்கி குரல் பதிலுக்கு 0114 825 825 ஐ அழையுங்கள்.
டிக்கட் விநியோகத்திற்கான உடனடி அழைப்பு 011 4 062 002 / 077 105 4894

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 711
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.08.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,153,620/-
வெற்றி இலக்கங்கள் 34 43 51 62 L
விசேட வெற்றி இல. 4314
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 0114 824 824, 0112 333 776 or 1919
0114 825 825
பச்சை நிற டிக்கெட்டுக்கள் இன்றைய சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.08.2019 | வெற்றி வாரம் 2597 | வர்ணம் ஊதா
சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 20 26 36 56
திங்கட் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,000.000/=
டபல் சான்ஸ்
விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 7680
ரூ.100 பரிசுக்காக 703
26.08.2019 ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்

### செல்வி கார்த்திகா காராளசிங்கம்

தோற்றம் 27.09.1983 — மறைவு 24.08.2019

வதிரி, கரவெட்டி, வைரவகோவிடியைச் சேர்ந்த செல்வி கார்த்திகா காராளசிங்கம் 24/08/2019 சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் தம்பையா காராளசிங்கம்-காராளசிங்கம் ஜெயமணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், துவாரகாவின் அன்புச் சகோதரியும், சுஜீவனின் (Appu builders) அன்பு மைத்துனியும், அக்ஷயன், சர்மிலி ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26/08/2019 திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 4.30 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

## நெடுங்கேணி பிள்ளையார் ஆலயத்திற்கு பிரதம குரு தேவை

மேற்படி எமது ஆலயத்திற்கு நித்திய நைமித்திய கருமங்களை ஆற்றுவதற்கான குருக்கள் தேவைப் படுகின்றார். எமது ஆலயத்தினை அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 02.09.2019 திங்கட்கிழமைக்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:-

பரிபாலன சபை,
நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோயில்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பரிபாலன சபை

## 31 ஆம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் புஸ்பதேவி மகாதேவன்

கடந்த 2019.07.28 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி அமரர் புஸ்பதேவி மகாதேவன் அவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் இன்று (26.08.2019) திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறவுள்ளது.


27.08.2019 செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோர் சகல வழிகளிலும் உதவி புரிந்தோர் இறுதிச்சடங்கில் பங்குபற்றியவர்கள், மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்கள், தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்தவர்கள் பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு ஆறுதல் அளித்தோர் அதிபர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் தயைகூர்ந்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
077 92

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் 25 . 09 . 1934

மறைவு 23 . 08 . 2019

# சின்னத்துரை மயில்வாகனம்

*(முன்னாள் மயில்வாகனம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - நந்தாவில்)*
*(முன்னாள் தலைவர் - குமரகோட்டம் சித்திவைரவர் முத்துமாரி அம்மன் ஆலயம்)*

குமரகோட்டம். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மயில்வாகனம் 23.08.2019 வெள்ளிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற பாலசிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவரும் சுபத்திரை. நல்லலட்சுமி. பூபதி (கனடா). தங்கம்மா. காலஞ்சென்ற யோகராசா. இராஜேஸ்வரி காலஞ்சென்ற சற்குணாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமலிங்கம். தர்மேஸ்வரி. காலஞ்சென்ற தியாகராஜா. மகேந்திரராஜா. தெய்வேந்திரராஜா (ஜேர்மனி). யோகேஸ்வரன்(சுவிஸ்). சாந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் தயாபரன் (சுவிஸ்). தமிழ்ச்செல்வன் (சுவிஸ்). தமிழ்ச்செல்வி (லண்டன்). சுகந்தினி (ஜேர்மனி). தர்மினி ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசினி (சுவிஸ்). இராஜவதனி (சுவிஸ்). தவத்தழகன் (லண்டன்). தேவதாசன் (ஜேர்மனி). நர்மிலராஜ் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லிஜிந்தன். லிசாந்தன். லெவினா (சுவிஸ்). மகரன். யதுசன் (சுவிஸ்). சானுசன். ஆருஷன். டிலக்சன் (லண்டன்). விதுரா. விதுசன். விதுஜா(ஜேர்மனி). சிவசுஜன். யாதுசன். கனிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2019) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெட்டிலிப்பாய் வீதி,**
**குமரகோட்டம், கோண்டாவில்.**


**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 27595) (14)

**077 662 0905/ 021 205 3676**

## மரண அறிவித்தல்கள்

# திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை



தோற்றம் 06.07.1929 மறைவு 23.08.2019

கைதடியைப்பிறப்பிடமாகவும் வளலாயை வசிப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தில் வசித்த வருமாகிய திருமதி பத்மாசனி கணபதிப்பிள்ளை 23.08.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் அன்னபூரணம் தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை அதிபர்) அவர்களின் பாசம் நிறைந்த மனைவியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ( ஓய்வுநிலை கல்வி அதிகாரி ), கருணாமூர்த்தி, தவமணிதேவி ஆகியோரின் அன்புச்சகோதரியும் புவனாம்பிகை, சிவபாலன், மனோகரி, கேசவன், சோதிரூபன், உமா, நிர்மலா ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் காலஞ்சென்ற சரவணபவன் மற்றும் பத்மலீலா, சத்தியநாதன், பவானி, நிர்மலபாமா, கணேசலிங்கம், கண்ணன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சதாரூபவதி மற்றும் செ. கணபதிப்பிள்ளை, விஜயலட்சுமி, காலஞ்சென்றவர்களான அரியராசா, பார்வதி ஆகியோரின் மைத்துனியும் சிவஜன், வசுதாரா, நர்த்தனன், கோபிதன், அஜனி, கிரிஷானி, ஜோயல், சங்கமி, சகானா, சாம்பவி, ராகவி ஆகியோரின் அருமைப் பாட்டியும் தபிஷ், சஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**44/7B, மணல்தரை லேன், கந்தர்மடம்**
**T.P 077 949 2567, 077 949 2577**
**0212219004**

**தகவல்: நா.சத்தியநாதன் (மருமகன்)**
**(ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலரும் சட்டத்தரணியும்)**



# திருமதி நகுலேஸ்வரி இரத்தினவடிவேல்

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி இரத்தினவடிவேல் நேற்று (25.08.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - நாகமுத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வேதவனம் தம்பதிகளின் மருமகளும், மயில்வாகனம் இரத்தினவடிவேலின் அன்பு மனைவியும், துஷியந்தி (லண்டன்), கர்ஜனா, சுவர்ணா, ஆகுலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளீசன் (லண்டன்), ஞானரூபன் (பிரான்ஸ்), பிரணவன் ( கட்டார்), விபூசனி (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், அபிநயா, அஸ்வினி, ஷர்மிதா, திருமகள், அபிராம், டிவானி ஆகியோரின் பேர்த்தியும், சதானந்தன், காலஞ்சென்ற சிவனேஸ்வரி மற்றும் அம்பிகாதேவி, கமலாதேவி (பிரான்ஸ்), சிவராசா (ஆனந்தம் - பிரான்ஸ்), சீவரத்தினம் (சுவிஸ்) ருக்குமணிதேவி, இந்திராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவபாக்கியலச்சுமி, காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, பூமாதேவி, வரதராசா உருக்குமணிதேவி, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.08.2019) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் மூளாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மூளாய் கிழக்கு,**
**சுழிபுரம்.**

(CS/27623)(11.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# திருமதி
# சங்கநாதபிள்ளை இராசலெட்சுமி

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு. கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கநாதபிள்ளை இராசலெட்சுமி நேற்று (25.08.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னமுத்து தம்பதியரின் அருமைப் புத்திரியும் காலஞ்சென்ற சங்கநாதபிள்ளையின் அன்பு மனைவியும் ஸ்ரீரங்கநாயகி (முன்னாள் தாதிய விடுதிச் சகோதரி, யாழ்.போதனா வைத்தியசாலை) பாலகுமார் (லண்டன் - சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் துஷ்யந்தினியின் அன்பு மாமியாரும், தனுஷ், மிதுஷன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சுப்பையா, சோமசேகரம், முத்தையா மற்றும் நடேசபிள்ளை (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், இலங்கை மின்சார சபை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2019)திங்கட்கிழமை விநாயகர் வீதி நல்லூர் வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விநாயகர் வீதி,**
**நல்லூர் வடக்கு.**

(CS 27621) (14.17)

**தகவல் : ச.ஸ்ரீரங்கநாயகி**
**(மகள்)**



# இன்றைய நாள்

**மேடம்:** வருமானம் திருப்தி தரும் நாள். வம்பு, வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள். வீட்டைச் சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படும். தொழில் முன்னேற்றம் உண்டு.

**இடபம்:** நாவன்மையால் நல்ல பெயர் எடுக்கும் நாள். நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். அலங்காரப் பொருள்களை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** மாற்றங்கள் உருவாகும் நாள். மனதிற் கினிய சம்பவங்கள் நடைபெறும். ஆரோக்கி'யத்துக்காக சிறிது செலவு செய்யும் சூழ்நிலை உண்டு. தொட்ட காரியத்தில் வெற்றி ஏற்பட நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வர்.

**கடகம்:** மதிப்பும், மரியாதையும் உயரும் நாள். மறக்க முடியாத சம்பவமொன்று நடைபெறலாம். வீடு, வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு உண்டு. பஞ்சாயத்துகள் சாதகமாக முடியும்.

**சிம்மம்:** ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பொருளாதார முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். தூர தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.

**கன்னி:** கவனமுடன் செயற்பட வேண்டிய நாள். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என செய்ய இயலாது. அத்தியாவசியப் பொருள்களை வாங்க அதிகமாகச் செலவிட நேரிடலாம்.

**துலாம்:** காலை நேரத்தில் கவனம் தேவைப்படும் நாள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் வேலையில் குறை கண்டுபிடிப்பர். மதியத்திற்கு மேல் செய்யும் முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் ஏற்படும் நாள். எதையும் நிதானித்து முடிவெடுப்பது நல்லது. உத்தியோகத்தில் உடனிருப்பவர்களால் தொல்லைகள் ஏற்படும். பயணங்களில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** வெளிநாட்டு முயற்சியில் வெற்றி கிட்டும் நாள். வீடு வாங்கும் யோகம் உண்டு. வாழ்க்கைத் துணை வழியே வந்த கருத்து வேறுபாடு அகலும். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். பயணத்தால் ஆதாயம் உண்டு.

**மகரம்:** திடீர் திருப்பம் ஏற்படும் நாள். தெரியாததை தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் இருந்த மறைமுகப் போட்டிகள் மாறும். பழைய கடன்களை அடைக்க எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**கும்பம்:** சாதனை படைக்கும் நாள். வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி முக்கியப் புள்ளிகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டும்.

**மீனம்:** அவசரமாக எடுத்த முடிவிலும் ஆதாயம் கிடைக்கும் நாள். பெற்றோர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். வேலை மாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.



# குழந்தைகள் பொய் சொல்வது ஏன்?

குழந்தை; பொய்சொல்லத் தொடங்கும்போது பெற்றோரின் மனம் பதற்றம் கொள்கிறது. குழந்தைகள் ஏன் பொய் சொல்கிறார்கள்? என்பதற்கான காரணத்தை அறிந்துகொள்வோம்.

பெற்றோரின் மனம். திடீரென ஒரு சூழலில் குழந்தை பொய் சொல்லத் தொடங்கும்போது பதற்றம்கொள்கிறது. அதிலும் சில குழந்தைகள் தொடர்ந்து பொய் சொல்லும் போது எங்கே நம் குழந்தை கெட்டுப்போய்விடுமோ என்ற அச்சத்தில் சில பெற்றோர்களுக்கு மனஉளைச்சலே ஏற்பட்டுவிடும். குழந்தைகள் ஏன் பொய் சொல்கிறார்கள்? என்பதற்கான காரணத்தை அறிந்துகொள்வோம்.

1. உண்மையில் குழந்தைகள் பொய் சொல்வது என்பது அவர்களின் புத்திசாலித்தனத்தின் வெளிப்பாடு என்கிறார்கள் உளவியலாளர்கள். குழந்தையின் பொய்களுக்குப் பின்னே அவர்களின் நரம்பியல் வளர்ச்சி, சமூகத்தைப் புரிந்துகொள்ளும் பாங்கு, அறிவார்த்தம், உணர்ச்சி நிலை ஆகியன எல்லாம் மேம்பட்டு இருப்பதை உணரலாம் என்கிறார்கள்.
2. குழந்தைகள் பொய் சொல்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. பெரும்பாலான குழந்தைகள் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவோ, பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்காகவோதான் பொய் சொல்கிறார்கள்.
3. தொடர்ந்து பொய் சொல்லும் குழந்தைகளிடம் தோழமையுடன் நடந்துகொள்ளவது அவசியம். அவர்கள் பொய் சொல்லும் போதெல்லாம் அதைக் கண்டுப்பிடித்து சுட்டிக்காட்டிக் கொண்டே இருப்பவர்களாக நாம் இருந்தால், குழந்தைகள் நம்மிடம் இருந்து விலகிக்கொண்டே இருப்பார்கள். மாறாக, அவர்கள் பொய் சொல்வதற்கான வாய்ப்புகளைக் குறைக்க முடியுமா என்று பார்க்கலாம். அதாவது, பொய் சொல்வது ஒரு ஒழுக்கக்கேடான விடயம் என்பதைப் புரியவைக்க வேண்டியது அவசியம்.
   ஆனால், பொய் சொல்வதுதண்டனைக்கான வாய்ப்பை உருவாக்கும் என்கிற மனப்பதிவு இருந்தால், தண்டனை கொடுப்பதைப் பற்றி மறுபரிசீலனை செய்யுங்கள்.
4. குழந்தைகள் சிறிய குற்றங்களை ஏற்றுக்கொள்ளும் போது அவர்களின் நடத்தையைப் பாராட்டுங்கள். ஆனால் அந்த செயல் தவறு என்பதைப் புரியவையுங்கள். சிறிய சிறிய பரிசுகள், எளிய பாராட்டுக்கள் போன்றவை சிறந்த பயன்களைத் தரும்.
5. குழந்தைகள் பொய் சொல்வது ஒரு இயல்பான செயல் தான் என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். குழந்தைகளை நல்வழிப்படுத்தும்போது அவர்களுக்குப் பொய் சொல்வதைத் தவிர வேறு வழி இல்லை எனும் நெருக்கடியை ஏற்படுத்தாதீர்கள். குழந்தைகளிடம் அவர்கள் பொய்யர்கள் எனக் குற்றஞ்சாட்டாதீர்கள். ஆனால், பிரச்சினை என்ன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும்படியாக எடுத்துச் சொல்லுங்கள்.



# பயன்கள் பல தரும் நல்லூரரான்

நயினை விசு- இராசநாயகம்

வடஇலங்கையில் பண்டைய வரலாறு, கந்தபுராணக் கலாசாரம்மிக்க நல்லூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான் தம் அடியவர்களுக்கு அருள் சுரந்து கொண்டிருக்கிறான். நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் மாவிட்ட புரத்தில் அபிசேகக் கந்தனாகவும் செல்வச்சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும் கதிர்காமத்தில் காவடிக் கந்தனாகவும் அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான். ஆலய கிழக்கு, தெற்கு, வடக்கு வாயில் கோபுரங்கள் சிற்ப வேலைகளுடன் அமைக்கப்பெற்று அடியவர்களை அருள் சுரந்து வரவேற்கும் வாயிலாக காட்சி தருகின்றது. ஆலய உள்வீதி மண்டபங்களும் அழகிய வர்ணங்கள் தீட்டப்பட்டுத் தெய்வீக சிறப்புடன் காட்சி தருகிறது.

ஆலயத்தின் கண்டாமணி நாதம், நாளும் கேட்கும் மணியோசை அடியவர்களது பக்தியைக் கூட்டிப் பரவசப்படுத்துகின்றது. திருவிழாக்காலம் நல்லூர் கோயில் பகுதி இந்திரவிழா போலக் காட்சியளிக்கும். அத்துடன் அந்தப் பகுதி புனிதம் நிறைந்ததும் காணப்படும். திருவிழாக்காலங்களில் முருகன் அடியார்கள் எல்லா இடங்களிலும் இருந்து விரதம் இருந்து நல்லூர் முருகப்பெருமானின் திருவருள் பெறுகின்றனர்.

பெரியவர்கள் குறிப்பாக இளைஞர்கள் இருபத்தைந்து நாளும் விரதமிருந்து அதிகாலை வேளை தினமும் வந்து அங்கப் பிரதட்சி ணம் செய்வதைக் காணலாம்.

பெண்கள், பெண்பிள்ளைகள் ஆசார சீலராக வந்து நேர்த்திக்கடன் செய்வதையும் கற்பூரச்சட்டி ஏந்தி பக்திபூர்வமாக வழிபாடு செய்வதையும் காணலாம். அனைவருக்கும் முருகப்பெரு மான் நல்திருவருள் சுரந்து கொண்டிருக்கிறான்.

**நல்லூர் கோயிலின் பூசை வழிபாடுகள்**

ஈழத்திலுள்ள கோவில்களுள் நேரம் தவறாத நித்திய நைமித்திய பூசைகள் மூலம் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மற்றைய கோவில்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. வருடாந்த மகோற்சவம் ஆடிஅமாவாசையில் இருந்து ஆறாம் நாள் கொடியேற்றத்துடன் இருபத்தைந்து நாள்கள் நடைபெறுகிறது. இந்தத் திருவிழா யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமன்றி வேறு பிரதேச மக்களுக்கும் முக்கிய திருவிழாவாகும். ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி, சூரன்போர், இயம சங்காரம், கார்த்திகை திருவிழா, கற்பூ ரத் திருவிழா, தைப்பூசம், சித்திரை வருடப்பிறப்பு என பல விழாக்கள் கொண்டாடப்படுகிறது. ஆறு காலப் பூசைகள் நடைபெறுகின்ற ஒரே ஒரு ஆலயம் நல்லூர் என்பது குறிப்பிடத்தக் கது.

**ஆலய கொடிச்சீலை வரலாறு**

ஒவ்வொரு வருடமும் தலைமுறை தலைமுறையாக செங்குந்தா மரபில் வந்த சிவஞானமுதலியார் அவர்களது பேரன், அவர்களைச் சார்ந்தோர்களினால் கொடியேற்றத்துக்கு முதல்நாள் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் வீட்டில் இருந்து கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வைரவநாதர் வல்லிபுரச்சாமியால் அமைக்கப்பட்ட கொடி தேர்மடத்தில் கோவில் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்று அழகிய சித்திரத் தேரில் மங்கள வாத்தியங்கள் புடைசூழ அடியவர்கள் சகிதம் கொடிச்சீலையானது பருத்தித்துறை வீதியூடாக நல்லூர் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு ஆலயச் சிவாச்சாரியார்களிடம் பக்திபூர்வமான முறையில் ஒப்படைக்கப்படுகிறது.

இந்த ஆலயத்தில் அர்ச்சனைக்கு ஒரு ரூபாய் மட்டும் பெறப்படுகிறது தனி அம்சமாகும். உற்சவ காலங்களின் முருகப்பெருமான் தினமும் வெவ்வேறு அலங்கார வடிவில் வந்து அடியார்களுக்கு அருள்மழை பொழிகின்றான்.

ஆலய சிவாச்சாரியார்களும் கழுத்தில் உருத்திராட்சை மாலையுடன் ஒரே சீரான ஆடையுடன் காணப்படுகிறார்கள். பணியாளருக்கும் தனியான தொரு சீருடை காணப்படுவதும் ஓர் சிறப்பம்சமாகும். ஆலய வீதியில் காவடிகள் ஆட்டத்தைக் காணலாம். ஆட்டக் காவடி, பறவைக்காவடி, செடில் காவடி, தேர்க்காவடி, புஸ்பக்காவடி போன்ற பல காவடிகள் ஆடி அடியவர்கள் தம் நேர்த்திக் கடனை நிறைவு செய்து முருகன் திருவருள் பெறுகின்றனர்.

இந்த ஆலய வீதியில் வழிபட்டு யோகசுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் போன்ற பல சித்தர்கள் உருவானார்கள்.

தேர்த்திருவிழா அழித்தலையும் தீர்த்தத் திருவிழா அருளலையும் குறிக்கும். இந்தத் தேர்த் திருநாளில் தேவர் சிறைமீட்டுக் காத்த முருகப் பெருமானை வணங்கி, வழிபட்டு நல்லருள் நல்பேறு என்பன பெறுவோமாக.

கட்டுரையாளர்,
ஓய்வுநிலை தாதிய அலுவலர்.

# நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறிலசிறி ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் பஜனைக் குழுவினர் வழங்கும் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இது இடம்பெறுகின்றது.

++++

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம் பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வில் இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் மயிலணி சொர்ண வரதகாளியம்பாள் ஆலய தலைமைக்குரு பிரம்மசிறி ச.ஈஸ்வர சர்மா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில், முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் தி.விஸ்வரூபனும் சிறப்பதிதியாகத் திருக்கேதீச்சரம், சிவனருள் அறக்கட்டளை நிறுவுநர், மருத்துவர் ஜெ.நமசிவாயமும் (லண்டன்) கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

மன்னார்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட திருக்கேதீச்சரம், சிவனருள் மன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி, ச.லலீசனின் 'வீரவாகுதேவர் தூது'எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளன. சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக் கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக கொழும்பு, தேஜஸ்வராலயா கலைக்கூட மாணவர்கள் வழங்கும் வீணை இசை மற்றும் வாய்ப்பாட்டுக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

++++

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 7.15 வரை இசைக்கச்சேரி இடம்பெறும். பாட்டு கல்யாண் சரண், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ஞா.வசந், கெஞ்சிரா ச.ஜெனில் சங்கர். இரவு 7.15 தொடக்கம் 8.15 வரை இடம்பெறும் இசைக் கச்சேரியில், பாட்டு சுகன்யா அரவிந்தன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் ஞா.வசந், ஆகியோர் நிகழ்த்துவர். (கு)




## 'சரவணபவ' என்றிட சக்தி பிறக்குதடி

நல்லூர் முருகனின் நாமங்கள் கேட்டிட
உள்ளங் குளிருதடி- அவன்
கோபுர வாசலில் கும்பிட்டெழுகையில்
உடம்பே சிலிர்க்குதடி- கிளியே
உடம்பே சிலிர்க்குதடி

நல்லூர் முருகனின் மணியோசை
கேட்கையில்
ஓமென் றொலிக்குதடி - அவன்
வீதியில் வலம்வந்து நாமங்கள் சொல்லிட
தெய்வீகம் ஒளிருதடி- கிளியே
தெய்வீகம்- ஒளிருதடி

நல்லூர் முருகனின் பவனி வருகையில்
உள்ளம் துடிக்குதடி - அவன்
பின்னே நடந்து திருப்புகழ் பாடியே
என்னை மறந்தேனடி - கிளியே
என்னை மறந்தேனடி

நல்லை முருகனை நாடி வந்தோர் வாழ்வில்
பயம் ஏதும் இல்லையடி- அவன்
திருநாமம் சரவணபவ என்றிட
சக்தி பிறக்குதடி - நெஞ்சில்
சக்தி பிறக்குதடி

*எஸ்.சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.*

## "நல்லையில் திருந்திடலாம்"

பஞ்சமா பாதகம் செய்த பாவிகள் இனி
பணிந்தால் நல்லையில் திருந்திடலாம்
வெஞ்சமரைப் புரிபவர் எவரும் வீதியில்
விழுந்து கும்பிட்டால் வாளும் வேலாகும்

பேருக்கும் புகழுக்கும் கோயிலைக் கட்டி
புகழேந்தும் புண்ணியவான்களே!
ஆருக்கும் பெயரே போடாமல் நல்லூர்
அரசாள்வது பார்த்துத் திருந்திடுவீர்!

*கே.எஸ்.சிவஞானராஜா*

## திருக்குமரா திருவருள் தருவாயே!

போரிருள் நீங்கினும் பரிவொளி ஓங்காது
பாரமாய் வாழ்வு போகையிலே
வேர்விட்ட வேதனைகள் வேரோடு வீழ்ந்திடவும்
வீறுடன் நல்வாழ்வு வளர்ந்திடவும்
ஆர்வமுடன் நல்லூரில் அடியார்கள் தேரதனை
ஓரணியாய் வடம்பிடித்து இழுக்கின்றார்
தேரதனில் வள்ளி தெய்வயானையுடன் காட்சிதரு
திருக்குமரா திருவருள் தருவாயே!

*குளப்பிட்டி க.அருமைநாயகம்.*

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மீண்டும் தொடக்கத்தில் இருந்தா...!

தாம் ஆட்சிக்கு வந்ததும் புதிய அரசமைப்பு ஒன்று கொண்டு வரப்படும் என்று தெரிவித்திருக்கிறார் பொதுமக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச. ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். தாம் ஆட்சிக்கு வந்ததும் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் நீக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்த அவர், இப்போது புதிய அரசமைப்பு ஒன்று கொண்டுவரப்படும் என்கிறார். தனது செவ்வியில் மீண்டும் அதனை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும் என்று தெரிவித்தபோதும் அதன் உள்ளடக்கங்கள் தொடர்பில் அவர் எதனையும் தெரிவிக்கவில்லை. குறிப்பாக, தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வாக அமையும் வகையில் அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமா என்பது தொடர்பில் அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. புதிய அரசமைப்பின் உள்ளடக்கங்கள் குறித்து எதிர்காலத்திலேயே தீர்மானிக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். மாகாணசபைகள் உட்பட அதிகளவு அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் கவனம் செலுத்துவோம் என்றும் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறத்தில் இருக்க, தமிழர்களின் பிரச்சினை தொடர்பான தீர்வைக் காண்பதற்கான இணைப்பாளராகப் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவை மகிந்த ராஜபக்ச நியமித்திருக்கிறார் என்கிற செய்தியும் வந்திருக்கிறது. திஸ்ஸவின் முதற் பணியாக, பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் தேர்தல் கொள்கை விளக்க அறிக்கையில், தீர்வு தொடர்பில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் தொடர்பில், ஓர் அறிக்கையை தருமாறு திஸ்ஸவிதாரண கேட்கப்பட்டிருக்கிறார் என்றும் சொல்லப்படுகின்றது. இதற்காக அவர் மகிந்த ஆதரவுத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களையும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த காலத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வைத் தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்த கட்சிகள் அனைத்தினதும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் பேராசிரியத் திஸ்ஸவிதாரண. இடதுசாரி முகத்தைக் கொண்டவரான அவரது தலைமையிலான குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. என்பன புறக்கணித்தன என்றபோதும் ஏனைய கட்சிகள் இணைந்து அனைத்துக் கட்சிக் குழு என்ற ரீதியில் ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தன.

ஆனால், அந்தத் தீர்வுத் திட்டம் மகிந்த ராஜபக்சவால் ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை. மகிந்த ராஜபக்ச உண்மையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண விழைவாராக இருந்தால், அந்த அனைத்துக் கட்சிக் குழுவின் தீர்வுத் திட்டத்தை பேச்சு மேசைக்கு எடுத்து வந்து, தமிழர்தரப்புப் பிரதிநிதிகளுடன் அது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தி முறையான தீர்வு ஒன்றைத் தயாரிக்க முடியும். அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க்கட்சிகளும் நிராகரிக்கப்போவதில்லை. ஏனெனில் திஸ்ஸவிதாரணவின் தீர்வுத் திட்டத்தையும் தீர்வுக்கான அடிப்படைகளில் ஒன்றாக ஆராய்வதற்குத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே அறிவித்திருக்கிறது. எனவே அதிலிருந்து முன்னேறிச் செல்வதென்பது கடினமானதொன்றல்ல.

அத்தோடு ஏற்கனவே தற்போது உள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல தரப்புக்களினதும் பங்கேற்புடன் தயாரிக்கப்பட்ட புதிய அரசமைப்புக்கான வரைவு ஒன்றும் உள்ளது. அதில் மகிந்த தரப்பினரும் கூடப் பங்கேற்றிருந்தனர். அந்த வரைவு தொடர்பில் அவர்கள் தனியாகத் தமது கருத்துக்களையும் பதிவு செய்துள்ளனர். புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் எனில் இடைநடுவில் நிற்கும் அந்த முயற்சியைத் தொடர்ந்தாலே போதுமானது.

அவற்றையெல்லாம் விட்டுவிட்டு, விட்டேத்தியாகப் புதிய அரசமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் தீர்வுக்கான இணைப்பாளராக திஸ்ஸவை நியமிப்பது என்பதும் உண்மையான அக்கறையோடு எடுக்கப்படும் நடவடிக்கையாகத் தெரியவில்லை. காலத்தைக் கடத்துவதற்கும் வாக்குகளைக் கவர்வதற்குமாக மேற்கொள்ளப்படும் உத்தியாகவே தென்படுகின்றது.

வெண்ணிலா கபடிக் குழு படத்தில் வரும் பரோட்டா நகைச்சுவை மாதிரி எல்லாக் கோட்டையும் அழியுங்கள்! நான் மீண்டும் தொடக்கத்தில் இருந்தே சாப்பிடுகின்றேன் என்பது மாதிரி இருக்கிறது மகிந்தவின் புதிய அரசமைப்புக் கதையும்.

# ஆப்கானிஸ்தானில் அமைதி எப்போது?



ஆப்கானிஸ்தான் பிரச்சினைக்கு அமைதியான தீர்வு காண்பதில், தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும் உலகளாவிய அளவிலும் முயற்சிகள் நடக்கின்றன. போரிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வதில் அமெரிக்கா தீவிர முனைப்பு காட்டி வரும் நிலையில், கணிக்க முடியாத அதிபராலும், தீவிரமாக இயங்கிவரும் சிறப்புத் தூதுவர் ஜால்மே காலில்ஸாதாலும் இந்த விவகாரம் உச்சமடைந்துவருகிறது.

1994ஆம் ஆண்டில், ஆப்கன் அரசைக் கவிழ்த்துவிட்டு தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதைப்போல், மீண்டும் நிகழ்ந்து விடுமோ எனும் அச்சம் ஆப்கனில் அதிகரித்துவருகிறது.

பதற்றத்துடன் இருக்கும் அமெரிக்காவுக்கும் அதீத நம்பிக்கை கொண்ட பாகிஸ்தானுக்கும் இடையில் அவசர கோலத்தில் உருவாகவிருக்கும் ஒப்பந்தத்தின் மூலம், ஆப்கன் அரசு, அந்த நாட்டின் அரசியல் வட்டாரம், ஜனநாயக அமைப்பு ஆகியவை ஏமாற்றத்து உள்ளாக இருக்கின்றன. பதற்றம், பயம், இறுமாப்பு ஆகியவற்றின் மூலம் ஓர் அமைதி ஒப்பந்தம் ஏற்படுத்தப்படலாம். ஆனால், அப்படியான ஒரு ஒப்பந்தம், அனைத்துத்தரப்பையும் உள்ளடக்கிய, நீடித்து நிலைக்கக்கூடிய அமைதியைக் கொண்டு வராது.

ஒரு பிரச்சினையின் முக்கிய காரணிகளைக் களைவது தான், நிலையான அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்கான அடிப்படை நோக்கமாக இருக்கமுடியும்.

ஆப்கன் பிரச்சினையின் வேர்கள் அடிப்படையில் மத, இன ரீதியிலானவை. வெளிக் காரணிகளும் உள்ளன. ஆப்கன் அரசு மற்றும் சமூகத்தின் அடையாளம், சட்டபூர்வத் தன்மை, இறையாண்மை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பிரச்சினை நடந்து வருகிறது.

பஷ்தூன்களின் ஆதிக்கம் கொண்ட நாடாக ஆப்கன் இருக்க வேண்டுமா? அல்லது பன்முகத்தன்மை கொண்ட ஒரு நாடாக இருக்க வேண்டுமா? நாட்டின் உண்மையான அடையாளம் என்பது இஸ்லாமிய, மதச்சார்புள்ள அரசா அல்லது அரசியல் சட்ட குடியரசா? பாகிஸ்தானின் கைப்பாவையாக இருக்க வேண்டுமா? அல்லது சுதந்திரமான நாடாக இருக்க வேண்டுமா?


## அமைதி தராத ஒப்பந்தங்கள்

1979ஆம் ஆண்டில் ஆப்கன் பிரச்சினை தொடங்கியது முதலே, எண்ணற்ற அமைதி முயற்சிகளும் ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இடதுசாரி அதிபரான நஜிபுல்லா அஹ்மத்ஜாயி அரசு, புர்ஹானுதீன் ரப்பானி தலைமையிலான முஜாகிதீன் அரசு, மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் அமைந்த ஹமீத் கர்ஸாய் மற்றும் அஷ்ரப் கனியின் அரசுகள் அதிகாரப்பகிர்வு, ஜனநாயக அரசு நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாண முயன்றன. ஆனால், அதில் தோல்வியைச் சந்தித்தன.

1994ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த தலிபான் அரசு, முழு வெற்றியைப் பெறுவது, தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவுவது ஆகிய நோக்கங்களில் உறுதியுடன் இருந்தது. தலிபான் அமைப்பு என்பது அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடும் தேசியவாதக் கிளர்ச்சி அமைப்பு அல்ல. மாறாக, பாகிஸ்தானின் புவி வியூகக் கொள்கைகளுக்கு ஏற்ப ஓர் அரசியல் சூழலை மீண்டும் ஏற்படுத்துவதில் உறுதியுடன் செயற்படும் ஒரு சித்தாந்த இயக்கம். ஆப்கனில் பன்னாட்டு படைகள் இருப்பது, தலிபான் அமைப்பின் நோக்கத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

முதன்மைக் கேள்விகள் இவைதான்: தூய்மையான இஸ்லாமிய அரசை நிறுவும் தாலிபானின் லட்சியமானது, பன்மைத்துவம், அதிகாரப் பகிர்வு, தேர்தல் அடிப்படையிலான அரசியல் ஆகியவற்றுக்குப் பொருத்தமானதா? இறையாண்மை கொண்ட, சுதந்திரமான ஆப்கானிஸ்தானை பாகிஸ்தான் ஏற்றுக் கொள்ளுமா? தேசக் கட்டுமானம், ஜனநாயகமயமாக்குதல், பன்மைத்துவம் ஆகியவற்றில் நிகழ்த்தப்பட்டிருக்

⇨



“ **ஆப்கன் அரசையும் மக்களையும் கவனத்தில் கொள்ளாமல் தலிபான் அமைப்புக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் தோல்வியையே தழுவும். 2019ஆம் ஆண்டில் ஆப்கன், 1990 ஆம் ஆண்டுகளின் ஆப்கனைவிட அடிப்படையில் வேறுபட்டது. எத்தனையோ குறைபாடுகள் இருந்தாலும், ஆப்கன் அரசு குறிப்பிடத்தக்க அளவிலான திறனையும், சட்டபூர்வத்தன்மையையும் கொண்டிருக்கிறது.**

கும் பலவீனமான சாதனைகளின் அடிப்படையில் அமைதித் தீர்வுக்கான முயற்சிகள் கட்டமைக்கப்படுமா? எந்த ஓர் அமைதி ஒப்பந்தத்தின் நிலைத்தன்மையையும் உறுதிசெய்வதற்கான உத்தரவாதம் இருக்குமா?

1979 மார்ச்சில், ‘ஒப்பரேஷன் சைக்ளோன்’ மூலம் பாகிஸ்தானின் உதவியுடன் முஜாஹிதீன்களுக்கு ரகசியமாக ஆதரவளிக்கத் தொடங்கியது அமெரிக்கா. ஆப்கன் விவகாரத்தில் ஒரு தரப்பாக அமெரிக்கா இன்றுவரை தொடர்கிறது. எனினும், பெரும்பாலும் ஆழ்ந்த பரிசீலனையின் அடிப்படையில் அல்லாமல், உள்ளுணர்வின் அடிப்படையிலேயே அமெரிக்காவின் ஆப்கன் கொள்கை இருக்கிறது. அமெரிக்காவின் தற்போதைய அமைதி முயற்சிகள்கூட அந்த நாட்டின் சுயநலன் சார்ந்தும், அடிக்கடி மாறும் அதன் மனநிலையின் அடிப்படையிலும்தான் எடுக்கப்படுகின்றனவே தவிர, ஆப்கனின் கள நிலவரத்தின் அடிப்படையில் - குறிப்பாக ஆப்கன் அரசு மற்றும் மக்களின் பங்கு என்ன என்பதன் அடிப்படையில் அல்ல.

ஆப்கன் விவகாரத்தில், நிபந்தனையின் அடிப்படையிலான முன்னெடுப்புகள் தொடங்கி, அமெரிக்காவின் உள்நாட்டுத் தூண்டுதல்கள் அல்லது புவி அரசியல் நடப்புகளின் அடிப்படையிலான நடவடிக்கைகள் வரை, முந்தைய அதிபர்கள் அடிக்கடித் தங்கள் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதைப் போலவே ட்ரம்பும் நடந்துகொள்கிறார்.

### வலிமையான தலிபான்

தற்போதைய இராணுவச் சூழலும் சரி, அரசியல் கட்டமைப்பும் சரி நிலையான அமைதி முயற்சிக்கு உகந்ததாக இல்லை. ஆப்கன் மற்றும் அதன் கூட்டணிப்படைகள் இராணுவரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் களைப்படைந்தும் பதற்றத்துடனும் இருப்பதைப் போல், தலிபான் அமைப்பு இல்லை. தலிபான் தலைமையும், அதன் பாகிஸ்தான் கூட்டாளிகளும் முழு வெற்றியை அடையும் அளவிலான வலிமை, வளம், காரணிகளைக் கொண்டிருக்கின்றன. பாகிஸ்தான் விடயத்தில், ‘தொடர்ந்து குரைத்தாலும் கடிப்பதில்லை’ எனும் ரீதியிலான அணுகுமுறையை ட்ரம்ப் அரசு தொடர்ந்து மேற்கொண்டுவருவதன் காரணமாக தலிபான் தரப்பின் நம்பிக்கையை வலுப்படுத்திவருகிறது.



ஜூலை மாதம் நடக்கவிருக்கும் ஆப்கன் அதிபர் தேர்தலில், வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 17 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அமெரிக்கா - தாலிபான் இடையிலான துரிதமான பேச்சுக்கள், ஆப்கன் அதிபர் தேர்தலுடன் போட்டி போடும் அளவில் இணையாக நடந்துகொண்டிருக்கின்றன. தனது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக, தற்போதுதான் வளர்ந்துவரும் நிலையில் இருக்கும் ஆப்கன் ஜனநாயகத்தையும் இறையாண்மையையும் அமெரிக்கா பலிகொடுத்துவிடும் என்று ஆப்கனைச் சேர்ந்த பலரிடம் நிலவும் அச்சம் நியாயமானதுதான்.

ஆப்கன் அரசையும் மக்களையும் கவனத்தில் கொள்ளாமல் தலிபான் அமைப்புக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஒப்பந்தமும் தோல்வியையே தழுவும். 2019ஆம் ஆண்டில் ஆப்கன், 1990 ஆம் ஆண்டுகளின் ஆப்கனைவிட அடிப்படையில் வேறுபட்டது. எத்தனையோ குறைபாடுகள் இருந்தாலும், ஆப்கன் அரசு குறிப்பிடத்தக்க அளவிலான திறனையும், சட்டபூர்வத்தன்மையையும் கொண்டிருக்கிறது. வலிமைமிக்க, வளர்ந்துவரும் தேசியப் பாதுகாப்புப் படையும் அதன் வசம் இருக்கிறது.

### மக்கள் ஆதரவு இல்லை

மறுபுறம், பாகிஸ்தானும் தலிபானும் ஆப்கனின் பெரும்பாலானோரின் வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் ஆளாகியிருக்கின்றன. ஆப்கனின் 90 வீதமான மக்கள் தாலிபானின் நோக்கத்தை ஆதரிக்கவில்லை என்பது, 2018ஆம் ஆண்டில், ஆசியா பவுண்டேஷன் நிறுவனம் நடத்திய வருடாந்திர ஆப்கன் கணக்கெடுப்பிலும், வியூக ஆய்வுகளுக்கான ஆப்கன் நிறுவனம் நடத்திய தேசிய அளவிலான ஆய்விலும் தெரியவந்திருக்கிறது. தலிபான்களின் வார்த்தைகளில் சொன்னால், உலகமெங்கும் உள்ள ஜிகாதிகளுக்கு ஆப்கன் என்பது ஒரு ‘ஜிகாத் பள்ளி’. எனவே, தாலிபானுடனான எந்தவொரு ஒப்பந்தமும் வன்முறை சார்ந்த பிற இஸ்லாமியக் குழுக்கள் மத்தியில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.

பாகிஸ்தான், அமெரிக்கா மற்றும் தலிபானின் குவெட்டா ஷூரா அமைப்பு ஆகிய வற்றுக்கு இடையிலான முத்தரப்புப் பேச்சு என்பது ஆப்கன் மற்றும் அதைச் சுற்றியுள்ள பிராந்தியங்களைச் சேர்ந்த வர்களால் ஏற்றுக்கொள்ளப்படாது. அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய, நடைமுறைச் சாத்தியமுள்ள, நீடித்து நிலைக்கக்கூடிய முயற்சிகளே அமைதி ஒப்பந்தத்துக்கு வழிவகுக்க வேண்டும். இது வெற்றியடைய, 1990ஆம் ஆண்டுகளின் இருண்ட காலத்துக்குத் திரும்பிவிடாமல் முன்னேற்றப் பாதையில் ஆப்கன் செல்வதை உறுதிசெய்ய விரும்பு கின்ற, ஒத்த கருத்துடைய மற்ற சக்தி களுடன் இந்தியாவும் கைகோர்க்க வேண்டும்.

அமைதியான, பன்மைத்துவம் கொண்ட, வளமான தேசத்தையே ஆப்கன் மக்கள் விரும்புகிறார்கள். இப்படியான ஒரு அரசியல் சூழலைக் கட்டமைப்பதில், பிற ஆப்கன் குடிமக்களுக்கும் அரசியல் குழுக்களுக்கும் இருக்கும் அதே பங்கு தலிபான்களுக்கும் இருக்கிறது. அமைதியான, வளமான ஆப்கானிஸ்தான், அமைதியான முன்னேற்றமடைந்த பிராந்தியம், வன்முறை சித்தாந்தம் கொண்ட இஸ்லாமியக் குழுக்களின் வீழ்ச்சி ஆகிய அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. திணிக்கப்படும் அமைதி அல்லது திணிக்கப்படும் அரசியல் சட்டத்துடன் கூடிய சுதந்திரம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை ஆப்கன் மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படக் கூடாது. திணிக்கப்பட்ட அமைதி என்பது ஒரு தரப்புக்குத் தற்காலிக வெற்றியைத் தரலாம். ஆனால், அது நீண்டகாலத் துயரத்தை ஏற்படுத்துவதுடன், இறுதியில் தோல்வியையே தழுவும்!

*– நன்றி – இந்து தமிழ் திசை*

## ஆசிரியருக்கான கடிதம்

# வர்த்தகத்துக்கு அப்பாலும் பல விடயங்கள் உள்ளன

அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் பல்பொருள் அங்காடியில் அவதானித்த விடயம் மனதைக் கனக்க வைத்தது. யாழ்ப்பாணம் கன்னாதிட்டிப் பகுதியில் அமைந்துள்ள அந்த அங்காடிக்கு வெளிப்புறமாக ஒரு யுவதி வெயிலில் நிற்க விடப்பட்டு அவரிடம் சில மரக்கறிப் பொருள்கள் விற்பனைக்காகக் கொடுக்கப்பட்டிருந்தன. இலங்கை முழுவதும் கிளைகளைக் கொண்டுள்ள அந்த அங்காடியின் இந்தச் செயல் எதிர்மறை ஆச்சரியத்தைத் தந்தது. அதே பொருள்கள் உள்பக்கம் குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் வெளியில் அதே பொருள்களை வைத்து இந்த வணிகம் எதற்காக? என்ற கேள்வி என்னுள் எழுந்தது. குறித்த வர்த்தக நிலையத்துக்குள் நின்றவர்களுடன் நட்பு ரீதியில் உரையாடினேன். அப்போதுதான் தெரிந்தது வர்த்தகத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக அந்த அங்காடியின் முகாமையாளர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என்பது.

வர்த்தக நோக்கில் அவரின் சிந்தனை சரியாகப்படலாம். ஆனால் வாகனங்கள் தரித்து வைக்கப்படும் இடத்தில் அங்காடிக்கு வெளியில் எந்த அடிப்படையில் அவர்களால் இவ்வாறு பொருள்கள் விற்க முடியும். இது சுகாதார சீர்கேடான வர்த்தகம். இரண்டாவது, பல நூறு பேர் தினம்தினம் அந்த அங்காடிக்குச் சென்று வருகின்றனர். இவ்வாறிருக்கையில் வெளியில் உட்கார வைத்திருந்த, அந்த இளம்பெண் அவர்களை எத்தகைய மனநிலையில் எதிர்கொண்டிருப்பார்? வர்த்தகம் முக்கியமானதுதான். ஆனால் அதைத்தாண்டியும் பல விடயங்கள் உள்ளன.

**- வர்த்தகன்.**

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்பட மாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# குடிதண்ணீர்த் திட்டத்துக்கென்று சரசாலையில் அமைகிறது குளம்

## மைத்திரி வெள்ளியன்று அடிக்கல் நடுவார்

சாவகச்சேரி, ஓக. 26

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் குடிதண்ணீர்த் திட்டத்துக்குச் சரசாலையில் குளம் அமைக்கப்படவுள்ளது. 200 மில்லியன் ரூபா செலவில் 100 கிலோமீற்றர் சுற்றளவில் குளம் அமைத்துக் குடிதண்ணீர்த் திட்டத்துக்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அங்கு அடிக்கல் நட்டு பணியை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

சரசாலை கப்புதூ (அந்தணத்திடல்) பகுதியில் காலை 9 மணிக்கு அடிக்கல் நடுகை இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நீர்ப்பாசனத் திணைக்களம் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' திட்டத்தின் கீழ் இது செயற்படுத்தப்படுகின்றது.

மழைகாலங்களில் வடமராட்சி கிழக்குத் தொடக்கம் வரணி வரை கழிக்கரை வாய்க்கால் ஊடாக தொண்டமனாறு கடலேரிக்கு ஆறு வருகின்றது.

அந்த ஆறு கடலில் சேர்வதைத் தவிர்த்து, மழை நீர் வீணாவதைத் தடுக்கும் நோக்கிலும் மக்களுக்குக் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கவும், குறித்த மருதங்கேணியிலிருந்து வரும் தண்ணீரை குளத்தில் சேகரித்து குடிதண்ணீராக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேசத்தின் அனைத்துக் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களைக் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (த-9)




# 3 பொது அமைப்புகளுக்கு குடிதண்ணீர்த் தொட்டிகள்

சாவகச்சேரி, ஓக. 26

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் அரச தலைவர் செயலகத்தின் ஏற்பாட்டிலான 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்ட வாரத்தில் நேற்று பிரதேசத்தில் உள்ள 3 பொது அமைப்புகளுக்குக் குடிதண்ணீர் தொட்டிகள் வழங்கப்பட்டன.

இடர் முகாமைத்துவ அமைச்சால் வழங்கப்பட்ட குடிதண்ணீர் தொட்டிகள் சரசாலை மகேஸ்வரி சனசமூக நிலையம், தாவளை இயற்றாலை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், வரணி இடைக்குறிச்சி கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்கு அவற்றின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.வேலாயுதபிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தி.தங்கவேலு, பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் உட்பட பிரதேச செயலக் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலக ஏற்பாட்டில் நேற்று 60 கிராம அலுவலர் பிரிவுகளிலும் உட்பட 78 செயற்றிட்டங்கள் இடம்பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது. 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்ட வாரத்தில் பிரதேச செயலகத்தால் 423 செயற்றிட்டங்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

### வடக்கு மாகாணத்திலுள்ள

# மூன்று செயலர்களுக்கு விரைவில் இடமாற்றம்

## இடமாற்றத் தகுதியுடைய ஏனையவர்களுக்கு இன்னுமில்லை

யாழ்ப்பாணம் , ஓக. 26

வடக்கு மாகாணத்தில் 10 ஆண்டுகள் மற்றும் 8 ஆண்டுகளாகச் செயலர்களாகப் பணியாற்றும் 8 செயலர்கள் உள்ளனரெனினும், 3 செயலர்களை மாத்திரம் வடக்கிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

5 ஆண்டுகள் கால சேவையை நிறைவு செய்தால் இடமாற்றம் செய்யப்படுவது வழமையான விடயம்.

வடக்கு மாகாண சபையில் 5 ஆண்டுகளைக் கடந்த செயலர் தரத்தையுடையவர்கள் தற்போது 8 பேர் பணியில் உள்ளனர்.

இதில் 10 ஆண்டுகளை கடந்தவர்களும் உள்ளனர். 8 ஆண்டுகளைக் கடந்தவர்களும் உள்ளனர். ஆனால் இவர்களில் மூவரை மட்டும் இடமாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பொது நிர்வாக அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். செயலர்க்ளான திருவாகரன், திருமதி ரூபினி வரதலிங்கம், சிவபாத சுந்தரம் ஆகியோருக்கே இடமாற்றம் வழங்குமாறு ஆளுநர் பரிந்துரைத்துள்ளார்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதனை அனுமதித்து மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

இதன் அடிப்படையில் குறித்த மூவரும் விரைவில் வடக்கு மாகாணத்துக்கு வெளியில் செல்லவேண்டும்.

இந்த மூவரை வெளியில் அனுப்புவதிலுள்ள அக்கறை ஏனைய செயலர்கள் விடயத்தில் இல்லை. இந்தப் பாகுபாடானது இடமாற்ற விடயத்தில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டுவதாகவுள்ளது என்றும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனினும், 8 பேரையும் ஒரேதடவையில் இடமாற்றம் செய்தால் பதிலீடு வரத் தாமதமாயின் நிர்வாகச் சிக்கல்கள் வரலாம் என்றும் - அதனால் பகுதி பகுதியாக இட மாற்றம் செய்யப்படுகின்றனர் என்றும் - ஆளுநர் கூறியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# காலாவதியான பொருள்கள் விற்றவர்களுக்கு தண்டம்



யாழ்ப்பாணம், ஓக. 26

நல்லூர் ஆலயச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள கடைகளில் நடத்திய திடீர் சோதனையில் 6 கடைகளில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

கிடைத்த முறைப்பாடுகளையடுத்து யாழ்ப்பாண மாநகர சபையின் பொதுச் செயலர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையில் அவை சிக்கின.

அவற்றை விற்றவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது. அவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்குத் தலா 6 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-105)

### தென்மராட்சி விவசாயிகளுக்கு

# 50 வீத மானியத்தில் விவசாயப் பொருள்கள்

## இன்று வழங்கப்படும் எனத் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஓக. 26

தென்மராட்சியில் விவசாயிகளுக்கு 50 வீத மானிய அடிப்படையிலான விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இன்று காலை 8.30மணிக்கு நடைபெறவுள்ளது என்று பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

திண்மக்கழிவுப் பொருள்களை கூட்டுப் பசளை தயாரிக்கும் இயந்திரம், தண்ணீர் இறைக்கும் றொபின் இயந்திரங்கள் 20, எம்கே 12 வகையைச் சேர்ந்த நீரிறைக்கும் இயந்திரங்கள் 35 மற்றும் இஞ்சி பயிரிடுவோருக்கான இஞ்சித்துண்டங்கள் ஆகியவை வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்ட வாரத்தில் இவை வழங்கப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# அரச தலைவருக்கு முறைப்பாடுகளை தென்மராட்சி மக்கள் இன்று தெரிவிக்கலாம்


சாவகச்சேரி, ஓக. 26

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டத்தின் கீழ் அரச தலைவருக்கு முறைப்பாடுகள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பும் தென்மராட்சி பிரதேச மக்கள் இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை தெரிவிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டத்தில் இன்றைய தினம் அரச தலைவருக்கு தெரிவிக்க என்னும் நிகழ்வு சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கருத்துக்கள் மற்றும் முறைப்பாடுகளை அரச தலைவருக்கு தெரிவிக்க விரும்பும் பொதுமக்கள் நேரடியாக வருகை தந்து தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## தேர்த் திருவிழா





அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் நாகவரத நாராயணன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நாராயணப் பெருமான் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருளாசி வழங்குவதையும் பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவு செய்வதையும் படங்களில் காணலாம். (ம-36)

# வட மாகாணத்தின் எதிர்காலம் கூட்டுறவிலேயே தங்கியுள்ளது

## கருத்துப் பரிமாற்ற நிகழ்வில் முன்வைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

வடக்கு மாகாணத்தின் எதிர்காலம் கூட்டுறவுத் துறையிலேயே தங்கியுள்ளது. ஆகவே, கூட்டுறவுத் துறையை வளர்க்க ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமென்று கருத்துப் பரிமாற்ற நிகழ்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் 'சனிக்கிழமை ஆய்வுக் கருத்தரங்கு' எனும் தலைப்பிலான நிகழ்வொன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் ஐந்தாவது நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல்10 மணிக்கு 'கூட்டுறவுத் துறை' எனும் தலைப்பில் ஆரம்பமாகி நடைபெற்றது. அதில் மேற்கண்ட விடயம் முக்கிய விடயமாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையின் அவசியம் பற்றியும் அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. அது பற்றிய காத்திரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் மனித வள மேம்பாடும் அபிவிருத்தியும் பிரிவின் முன்னாள் பிரதிச் செயலரும், யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தின் செயலருமான சி. கிருஸ்ணானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலர் திருமதி வேதவல்லி செல்வரட்ணம், யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபைப் பணிப்பாளர் எஸ். முருகேசனார், கால்நடை மருத்துவத் துறையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.வசீகரன், மூத்த கூட்டுறவாளர் எஸ். கணேசமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் தலைவரும், மூத்த கூட்டுறவாளருமான சுந்தரலிங்கம், யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உப தலைவரும், மூத்த கூட்டுறவாளருமான க.மகாதேவன், யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழுத் தலைவியும், பண்டத்தரிப்புச் சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவியுமான திருமதி ஜெபமணி ஜோசவ் ஆகியோர் கருத்துரைகள் ஆற்றினர்.

அதனைத் தொடர்ந்து திறந்த கலந்துரையாடல் நடைபெற்றது. திறந்த கலந்துரையாடலில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆ.ந.இராசேந்திரம், இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களின் முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாள், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராஜா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடத் துறைத் தலைவரும், மூத்த பேராசிரியருமான இரா. சிவச்சந்திரன், யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனத்தின் இணைப்பாளர் வி. நிரஞ்சன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கினர் என்று சம்மேளனத்தின் இணைப்பாளர் நிரஞ்சன் அனுப்பிய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# வாகனம் மோதி சிறுமிக்கு காயம்

கொடிகாமம், ஓக. 26

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பாரம் தூக்கி (கிறேன்) வாகனம் மதிலுடன் மோதியதில் சிறுமியொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை மதியம் நாவற்குழி தொடருந்துக் கடவைக்கு அருகாமையில் இடம்பெற்றது.

காயமடைந்த சிறுமி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159)

# நகைக்கடை வர்த்தகர்களுக்கான நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.26

யாழ்ப்பாண மாவட்ட நகைக்கடை வர்த்தகர்களுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண வணிகர் கழக பணிமனையில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்போது தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையை சேர்ந்த அதிகாரிகள் வருகைதரவுள்ளனர்.

எனவே யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த நகைக்கடை வர்த்தகர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வர்த்தக நிலையங்களுக்கு இதுவரை அனுமதி பெற்றுக் கொள்ளாமல் இருப்பின் தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாண வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு 021 222 8593 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)



# பயனற்ற கருவேல மரங்கள் கைதடிச் சந்தியில் அழிப்பு

கொடிகாமம், ஓக. 26

ஏ-9 வீதி கைதடிச் சந்தியில் ஜே/291கைதடி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கருவேல மரங்கள் நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்டன.

அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' செயற்றிட்டத்துக்கு அமைவாக இது நடைபெற்றது.

அரசதலைவர் செயலக நிதியொதுக்கீட்டில் கனரக இயந்திரம் மூலமாக அவை பிடுங்கி அழிக்கப்பட்டன.

நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் தேவநந்தினி பாபு, அரசதலைவர் செயலக சுற்றுச்சூழல் பகுதி அலுவலர் விக்னேஸ் மற்றும் டபிள்யூ. எஸ்.பி.பெரேரா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தங்கவேலு, பிரதேச செயலக அலுவலர்கள், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர், சமுர்த்தி அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-159)

# தேர்ப் பவனி



மண்ணித்தலை புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது. அருட்தந்தை றொசான் அடிகளார், மற்றும் அருட்தந்தை அருள்தாஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். தொடர்ந்து தேர்ப் பவனியும் இடம்பெற்றது. (ம-23)

# மிருசுவில் வடக்கில் நேற்றுமுன்தினம் முதியோருக்கு மருத்துவப் பரிசோதனை

கொடிகாமம், ஓக. 26

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' எனும் திட்டத்தின் கீழ் முதியோருக்கான மருத்துவப் பரிசோதனையும் தொற்றா நோய்களுக்கான பரிசோதனையும் மிருசுவில் வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கொடிகாமம் பிரதேச மருத்துவமனையின் அதிகாரி எஸ்.ராஜகுமார் மற்றும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த அலுவலர்கள் இணைந்து இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்டனர். 55 முதியவர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம-159)



# தமிழர் மேம்பாட்டு ஒன்றியத்தின் அறிமுகமும் கலந்துரையாடலும்

கொடிகாமம், ஓக. 26

தமிழர்களின் கல்வி சார்ந்த மேம்பாட்டை முக்கியத்துவப்படுத்தியதாக 'தமிழர் மேம்பாட்டு ஒன்றியத்தின் அறிமுகமும்', கலந்துரையாடலும் வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றது.

தமிழர் மேம்பாட்டு ஒன்றிய வடக்கு மாகாண இணைப்பாளர் இரா.இராஜேஸ்வரன் நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

தமிழர் மேம்பாட்டு ஒன்றியத் தலைவரான கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் முதன்மை பங்கேற்பாளராக இணைந்து கொண்டார்.

முன்னதாக சுடர்கள் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது.

தொடர்ந்து சிதம்பரேஸ்வரா நடனாலயப் பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அறிமுக மற்றும் வரவேற்புரையினை தமிழர் மேம்பாட்டு நிறுவன வவுனியா மாவட்ட இணைப்பாளர் இரா.இராஜேஸ்வரன் வழங்கினார். அறிமுகவுரையைத் தமிழர் மேம்பாட்டு நிறுவனத்தின் மலையக மற்றும் கொழும்பு இணைப்பாளர் இந்திரஜித் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர்களான சோ.சந்திரசேகரம், என்.கருணாநிதி ஆகியோர் கல்விசார் நிலைமைகள், முன்னெடுக்க வேண்டியவிடயங்களைஉரைத்தனர்.

தொடர்ந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ந.பார்த்தீபன் தமிழர் பகுதி கல்வி நிலைகளை எடுத்துரைத்தார். வவுனியா சிதம்பரேஸ்வரா நடனாலயப் பள்ளி மாணவிகளின் கோலாட்டமும் நிகழ்வை அலங்கரித்தது.

தொடர்ந்து தமிழர் பகுதியின் கல்வி மேம்பாடு, இலங்கையின் கற்றல் முறைமைகள், எதிர்கால முன்னெடுப்பு விடயங்கள் குறித்ததான ஆக்கபூர்வமான கலந்துரையாடல் இடம்பெற்றது. பல்கலைக்கழகம், தேசிய கல்வியியற் கல்லூரி, வலயக் கல்விப் பணிமனை, கல்வி நிறுவனங்கள், வர்த்தக துறைசார்ந்தோர், எழுத்தாளர்கள் எனப் பன்முகப் புலத்திலிருந்தும் அநேகர் தமது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கூறினர். கலந்துரையாடல்களும் இடம்பெற்றன.

தொடர்ந்து நன்றியுரையைத் தமிழர் மேம்பாட்டு ஒன்றியத்தின் மலையக மற்றும் கொழும்பு இணைப்பாளர் இந்திரஜித் வழங்கினார். (ம-159)



# கரவெட்டிப் பிரதேசசபை விரைவில் இரண்டாகும்

## அதன் தவிசாளர் சபையில் தெரிவிப்பு

வடமராட்சி, ஓக. 26

கரவெட்டி பிரதேசசபையை நெல்லியடி நகர சபையாகவும் உடுப்பிட்டி பிரதேச சபையாகவும் பிரிப்பதற்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் வழிநடத்தலோடு இடம்பெற்றுவருகின்றது என்று கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் த. ஐங்கரன் தெரிவித்தார்.

சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் ஐங்கரன் தலைமையில் பிரதேசசபை மாநாட்டு மண்டபத்தில்அண்மையில் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதன்போது கரவெட்டிப்பிரதேசசபை இரண்டாகப் பிரிக்கப்படவுள்ளது. அது பற்றி யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் கூறியுள்ளேன். அவற்றைச் சபைக்குத் தெளிவுபடுத்துகிறேன் என்று தெரிவித்து சபையில் விவரித்தார்.

எமது பிரதேச சபை நெல்லியடி நகரசபையாகவும் உடுப்பிட்டி பிரதேச சபையாகவும் பிரிக்கப்படவுள்ளது. சமரபாகு கிராமத்தை வல்வெட்டித்துறை நகரசபைக்குள்ளாகவா அல்லது நெல்லியடி நகரசபைக் குள்ளாகவா அல்லது உடுப்பிட்டிப் பிரதேச சபைக்குள்ளாகவா இணைப்பது என்பது தொடர்பான பிரச்சினை இருந்து வந்தது. இறுதியில் கரணவாய் சமரபாகு பகுதிகள் உடுப்பிட்டி பிரதேச சபையுடன் இணைப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி பிரதேசசபையை நெல்லியடி நகரசபை உடுப்பிட்டி பிரதேச சபை என இரண்டாகப் பிரிக்கும் திட்டத்துக்கான வரைபடம் மிக விரைவில் யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு வழங்கப்படவுள்ளது. அதன் பிரதிகளை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கே. பரஞ்சோதி கருத்துத் தெரிவிக்கையில், சமரபாகு கிராமத்தையும் கரணவாய் கிராமத்தையும் உடுப்பிட்டியுடன் இணைப்பது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்தார்.

தலைவர் த.ஐங்கரன், எமது பகுதியில் மக்கள் செறிந்து நெருக்கமாக வாழும் பகுதிகளே நகரசபையுடன் இணைக்கப்படுகிறன. இந்தப் புதிய திட்டத்துக்குப் இந்தப் பகுதி புத்திஜீவிகளின் கருத்துக்களும் ஆலோசனையாகப் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

வடமராட்சிக்கு என்று தனியாக தீயணைப்புப் பிரிவுதேவை. பிரதேச சபைக்கு அதை வழங்கவும் மாவட்டச் செயலர் முன்வந்துள்ளார்.

அது வழங்கப்பட்ட பின்னர் எமது சபையில் வைத்து வடமராட்சிப் பகுதியின் அனைத்துப் பகுதிகளுக்கும் நாங்கள் சேவை வழங்குவோம் என்று தெரிவித்தார்.

இது பற்றி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் கே. பரஞ்சோதி கருத்துத் தெரிவிக்கையில், 2012 ஆம் ஆண்டு எமது சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டு தீயணைப்புப் பிரிவு மந்திகையில் அமையவேண்டும் என்ற தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்புப் பிரிவு ஆரம்பிக்க எமது ஒத்துழைப்பு உண்டு - என்றார்.

**உறுப்பினர்கள் மாற்றம்**

கரவெட்டி பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் விகிதாசார உறுப்பினர்கள் இருவரும் சுழற்சி முறை அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளனர்.

இதுவரைகாலமும்முன்னணியின் சார்பில் விகிதாசார உறுப்பினர்களாகக் கடமையாற்றிவந்த இராசையா சிவராணி மற்றும் தர்மசீலன் சிவரதி ஆகியோர் தமது உறுப்பினர் பதவியிலிருந்து விலகியிருந்தனர். இவர்களின் இடத்துக்கே புதிய உறுப்பினர்களாக மல்லிகா தேவி செல்வரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி விஜயபாகு ஆகியோர் நியமிக்கப்பட்டு கடந்த மாத அமர்வில் பங்கேற்றனர்.

கரவெட்டி பிரதேச சபையின் துன்னாலை வட்டார சுதந்திரக்கட்சி உறுப்பினர் நாகராஜா சர்மா தனது பதவியைத் துறந்ததையடுத்து விகிதாசார அடிப்படையில் வட்டாரத்தைச் சேர்ந்த மகேந்திரன் பிரேமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். அவர் கன்னியுரையாற்றத் தவிசாளர் 3 நிமிடங்கள் அனுமதித்தார்.

அவர் தனது கன்னி உரையில், எனது கிராமத்தில் பல குறைபாடுகள், தேவைகள் இருக்கின்றன. அவற்றைத் தீர்க்க நான்முயற்சிப்பேன் என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த சபைத்தலைவர், உங்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் ஏற்கப்பட்டு பரிகாரம் காணப்படும் என்று தெரிவித்தார். (த-173)

---

கப்புதூ மயானம் பறிபோவதால்

# கரவெட்டி சந்தணன் திடலில் எரிகொட்டகை அமைக்கவும்

## கரவெட்டிப் பிரதேச சபையில் கோரிக்கை

வடமராட்சி, ஓக. 26

வடமராட்சி கரவெட்டி கப்புதூ கிராமத்தில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான நன்னீர்த்திட்டத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் கப்புதூ கிராமத்துக்கான பாதை ஒன்றையும் மயானத்தையும் இழக்கின்றோம். வீதிபோனாலும் பரவாயில்லை மயானத்துக்கு மாற்றீடாக சந்தணன்திடலில் எரிகொட்டகை அமைத்து மயானம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் திருமதி மல்லிகாதேவி செல்வரத்தினம் கரவெட்டி பிரதேச சபையில் அவசர வேண்டுகோள் விடுத்தார்.

கப்புதூ கிராமத்தில் கடலேரிமூலம் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான நன்னீர்த் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. கிராம மக்கள் சந்தணன் திடல் என்ற இடத்தில் எரிகொட்டகை அமைப்பதை விரும்புகின்றனர். எனவே அவசரமாக அதை ஏற்படுத்தித் தாருங்கள் என்று சபையில் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர், இதற்கான நிதி மூலங்களைக் கண்டறிய வேண்டும். ஏதோ ஒரு வகையில் சபையின் அனுமதியோடு நிதி மூலத்தைப் பெற்று மயானத்தை எரிகொட்டகையாக்க தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்வோம் என்று தெரிவித்தார். (த-173)

---



# தென்னை பயிர்ச்செய்கைச் சபையால் மானியத் திட்டங்களுக்குக் காசோலை!

சாவகச்சேரி, ஓக.26

தென்னைப்பயிர்ச்செய்கை சபையால் வழங்கப்ப டும் மானியத் திட்டங்களுக்குரிய காசோலை வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி புத்தூர்ச்சந்தி கமநல சேவைகள் நிலையத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருமதி கௌசிகா தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில்தென்னைச் செய்கை சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகளை-படக் காட்சிகள் மூலம் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜெ.சத்தியேந்திரன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி (புத்தூர்ச்சந்தி) கமநல சேவைகள் நிலைய பெரும்போக அலுவலர் சுகந்தராஜ், அபிவிருத்தி அலுவலர்களான திருமதி யசிந்தன் சாந்தினி, சிவகுருநாதன் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பின் மாவட்ட அமைப்பாளருமான தி.தங்கவேல், இராமாவில் பிரிவு கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-159)

---

# தமிழ் மக்களுக்கு விரைவில் மற்றொரு சிறந்த சந்தர்ப்பம்

## இதையாவது அவர்கள் பயன்படுத்த வேண்டும் என்று கோருகின்றார் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழ் மக்களின் எதிர்காலத்தை மாற்றியமைக்க மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வரவுள்ளது. இதை தெளிவான சிந்தனையூடாக மக்கள் இம்முறையேனும் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அந்த மாற்றத்தை இம்முறை மக்கள் தவறவிடமாட்டர்கள் என நம்புகிறேன் இவ்வாறு தெரிவித்தார் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா.

பலாலி வடக்கு அன்ரனிபுரம் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதப் போராட்டம் உருவாகுவதற்கு முன்னர் எமது மக்கள் சுயமாக சிந்தித்துச் செயற்பட்டார்கள். பின்னாளில் எமது மக்களின் கருத்துச் சுதந்திரத்தை போர் மௌனிக்கச் செய்துவிட்டது. ஆனால் இவ்வாறு தொடர்ந்தும் இருந்துவிட முடியாது. இனிவரும் காலத்தையாவது நாம் வெற்றிகொள்ள சுயமாக சிந்தித்து கிடைக்கின்ற சந்தர்ப்பங்களின்போது அதன் பங்காளிகளாக இருக்கவேண்டியது காலத்தின் கட்டயமாக உள்ளது. கடந்தகாலசரி, பிழைகளை ஆராய்ந்து நாம் விட்ட சந்தர்ப்பங்களை பாடமாக கற்றுக்கொள்ள வேண்டும்.

ஆனாலும் மாற்றங்கள் பல நடைபெற்றுள்ளன. திரும்பி நீங்கள் இந்தப் பகுதிக்கு வந்தபோது பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனாலும் இன்னும் பல மாற்றங்கள் தேவையாக உள்ளது. மீண்டும் தமிழ் மக்களுக்கு ஒரு சிறந்த சந்தர்ப்பம் தற்போது கிடைக்கவுள்ளது. கடந்த காலங்கள் [illegible] போல தமது எதிர்காலத்தை கருங்கல்லில் விதைத்துவிடாது சரியானதாக உருவாக்கிக்கொள்வர் என நம்புகின்றேன்- என்றார். (ம)

---

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 26

சமுர்த்தி சமுதாயமட்ட அமைப்பின் பிரதிநிதிகளுக்கு தகவல் அறியும் சட்டவரைவு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை உடுவில் பிரதேச செயலகத்தில் காலை 8.30 மணிமுதல் 11 மணி வரை பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் தலைமையில் நடைபெறவுள்ளது. உடுவில் பிரதேச செயலக பிரிவால் இந்த நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (ம)

---

# புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக. 26

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆவரங்கால் சமுர்த்தி வங்கி வலயத்துக்கு உட்பட்ட பயனாளிகளுக்கான போதை மற்றும் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வங்கி முகாமையாளர் சி.ஸ்ரீகிருஸ்ணன் தலைமையில் ஆவரங்கால் சிவன் ஆலய மண்டபத்தில் காலை 9 மணிக்கு நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கோப்பாய் வங்கிச் சங்க முகாமையாளர் தி.யோகேந்திரன், கோப்பாய் பிரதேச செயலக தலைமைப்பீட முகாமையாளர் ந.நகுலராணி, கருத்திட்ட முகாமையாளர் யோ.கலைவாணி உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ம)

## பிரச்சினைகளை கண்டறியும் கலந்துரையாடல் வவுனியாவில்

வவுனியா, ஓக. 26
இலங்கையில் மனித மற்றும் தொழிலாளர் உரிமை மீறல் தொடர்பிலான குழுவின் கலந்துரையாடலொன்று வவுனியா தொடருந்து நிலையத்துக்கு அருகேயுள்ள விருந்தினர் விடுதியில் நேற்று காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணி வரை நடைபெற்றது.
கலந்துரையாடலில் வவுனியா வடக்கில் பெரும்பான்மையினத்தவரின் ஆக்கிரமிப்பு, வடக்கில் தமிழ் மொழி புறக்கணிப்பு, தமிழர்களின் பூர்வீக இடங்களைத் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமிப்பது, வவுனியாவில் பொதுமக்கள் அதிகமாக எதிர்நோக்கும் பிரச்சினைகள், வரிச்சலுகை தொடர்பான அறிக்கையிடல், அதுசார்ந்த தெளிவுத்தன்மை, வவுனியா மாவட்டத்தின் தற்காலிக நிலமைகள், மனித உரிமைகள் சார்ந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றது.
கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். இந்தக் குழுவின் இவ்வாறான கலந்துரையாடல் நாடுமுழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இடம்பெற்று வருகின்றது. (து-ரி4)

## பச்சிலைப்பள்ளியில் 'எம்.ஐ.சி.எச்1' மிளகாய்ச் செய்கை பெருவெற்றி



கிளிநொச்சி, ஓக. 26
கிளிநொச்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட எம்.ஐ.சி.எச்1 மிளகாய்ச் செய்கை பச்சிலைப்பள்ளியில் வெற்றி பெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் இந்த மிளகாய்ச் செய்கை அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டது.
கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் தோல்வியில் முடிந்த இந்தச் செய்கை பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் வெற்றி பெற்றுள்ளது. கிளிநொச்சியின் பல பகுதிகளில் பரவலாக எம்.ஐ.சி.எச்1 மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. கடும் வறட்சியின் காரணமாக பல இடங்களில் இந்தச் செய்கை வெற்றியளிக்கவில்லை.
எனினும் சரியான பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக் காரணமாகவே நாம் வெற்றியடைந்துள்ளோம் என்று அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (ம-ரி1)



## மடுவுக்குச் சென்ற வாகனம் மின்கம்பத்துடன் மோதியது

*12 பேர் மருத்துவமனையில்*

கிளிநொச்சி, ஓக. 26
செட்டிகுளம் ஆண்டியாபுளியாலங்குளம் பகுதியில் வாகனம் மின்கம்பத் துடன் மோதி விபத்துக் குள்ளானது.
வாகனத்தில் பயணித்த 11 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
வத்தளையில் இருந்து மடு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தபோது நேற்றுக் காலை 7.40 மணியளவில் ஆண்டியாபுளியாலங்குளம்பகுதியில் மின் கம்பம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த வாகனத்தில் பயணித்த 11 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
2பேர் சிறுகாயங்க ளுக்குள்ளாகினர்.
அவர்கள் அனைவரும் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
35 வயது மதிக்கத்தக்க பெண் மேலதிக சிகிச்சைக்காகவவுனியாபொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளார். விபத்துத்தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (து-222)
















## மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற திருக்குறள் பெருவிழா

மன்னார், ஓக. 26
அரச தலைவரின் எண்ணக்கருவில் உருவான திருக்குறள் வாரத்தை முன்னிட்டு வடக்கு மாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வட மாகாண பண்பாட்டாலுவல்கள் திணைக்களமும் கல்வி அமைச்சும் இணைந்து ஏற்பாடுசெய்த திருக்குறள் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையின் தலைமை மண்டபத்தில் இடம்பெற்றது.
நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இருந்து பவனி ஆரம்பமாகி மன்னார்அல்அஸ்ஹர் தேசிய பாடசாலையைச் சென்றடைந்தது. அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன. மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ. மோகன்ராஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த விழாவுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண தலைமைச் செயலர் ஏ.பத்திநாதன் கலந்து கொண்டார்.
மன்னார் மாவட்ட மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், மஹா தர்மகுமாரக் குருக்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மொழியியற்றுறை விரிவுரையாளர் விஜயபாஸ்கரன், ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக முன்னாள் ஆய்வுப் பேராசிரியர் முனைவர் மனோன் மணி சண்முகதாஸ், அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.
குறித்த நிகழ்வில் கலைஞர்கள், பிரதேச செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், மாணவர்கள் எனப் பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (ம-56)





## மக்களின் தேவைகள் தொடர்பில் ஆய்வு

கிளிநொச்சி, ஓக. 26

கிளிநொச்சி உழவனூர் மற்றும் தம்பிராசபுரம் ஆகிய பகுதிகளில் மக்களின் அடிப்படைத் தேவைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் பணிப்புக்கு அமைவாக, கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் நேரடியாகச் சென்று மக்களின் நிலமைகள் தொடர்பாக அண்மையில் ஆராய்ந்துள்ளனர்.

குறித்த தேவைகள் தொடர்பாக உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தி, உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் எனவும் உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் குறித்த பகுதியில் வள்ளுவர் விளையாட்டுக் கழகத்துக்கும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

சிறீதரன் ஒதுக்கிய 5 லட்சம் ரூபாவில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.


பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன், புண்ணைநீராவி வட்டாரப் பிரதேசசபை உறுப்பினர் கலைவாணி மற்றும் உப தவிசாளர் காயன், உறுப்பினர்களான ரமேஷ், வீரவாகுதேவர் மற்றும் கட்சியின் புன்னைநீராவி வட்டார அமைப்பாளர் முரளி, கட்சியின் முன்னணி செயற்பாட்டாளர் தீபன் ஆகியோருடன் பொது அமைப்பினர், இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-6)

### விசுவமடுவில் ஒரே இரவில்

# 60க்கும் மேற்பட்ட தென்னைகள் யானைகளால் அழிக்கப்பட்டன!

முல்லைத்தீவு, ஓக. 26

விசுவமடு தொட்டியடியில் நேற்றுமுன்தினம் இரவு சுமார் 60க்கும் மேற் பட்ட தென்னை மரங்கள் யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன. தமது பகுதியில் யானைகளின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது என்று அந்தப் பகுதி விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.





அரச தலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' வேலைத் திட்டத்தின் கீழ் விசுவமடு பகுதியில் 22.6 கிலோமீற்றர் தூரம் யானை வேலி அமைப்பதற்கு ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டுக்கு அனுமதி வழங்கப்பட்ட நிலையில் யானை வேலி அமைப்பதற்கான பணிகள் எவையும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை.

தற்போது சிறுபோக நெற்செய்கை அறுவடையானதைத் தொடர்ந்து காட்டு யானைகள் மக்கள் வாழ்கின்ற இடங்களுக்குள்ளும், மேட்டு நிலத் தோட்டங்களுக்குள்ளும் புகுந்து விவசாயப் பயிர்களை அழித்து வருகின்றன. நேற்றுமுன்தினம் அழிக்கப்பட்ட தென்னங்கன்றுகள் பல இரண்டு தொடக்கம் மூன்று வரையான வயதுடையவை.

அவை இன்னும் ஓரிரு ஆண்டுகளில் பயன் தரத்தக்கவை. அவை அழிக்கப்பட்டுள்ளமை மிகுந்த வேதனையைத் தருகிறது. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் இனியும் தாமதிக்காது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்றனர். (ம-ரி3)

## கஞ்சா வைத்திருந்தவர் ரூ.10,000 செலுத்தினார்

### சமுதாய சீர்திருத்தத்துக்கு உட்படுத்தவும் நீதிமன்று உத்தரவு

தலைமன்னார், ஓக. 26

கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்தவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று, அவரைச் சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிட்டது.

தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த குறித்த நபரிம் ஆயிரத்த 630 மில்லிக்கிராம் கஞ்சா போதைப் பொருள் மீட்டதாகக் குற்றஞ்சாட்டி, மன்னார் பொலிஸார் கடந்த வாரம் அவரைக் கைது செய்து, கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து மேற்குறித்த தண்டம் விதிக்கப்பட்டு சமுதாய சீர்திருத்தத்துக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். இவர்மட்டுமன்றி, 410 மில்லிக்கிராம் கஞ்சா போதைப் பொருள் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மற்றொருவரையும் பொலிஸார் கைது செய்து அன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர் தான் சுற்றவாளி என்று கூறுவதால் வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அவர் ஒரு லட்சம் ரூபா பெறுதியான இரண்டு ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டார். (த-60)



## சங்கத்தார்வயல் மீனவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்வு

கிளிநொச்சி, ஓக. 26

இயக்கச்சி, சங்கத்தார் வயல் மீனவ குடும்பங்கள் எதிர்நோக்கி வரும் வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் அவர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வியமைச்சர் குருகுலராஜா மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் உள்ளிட்ட குழுவினரே மக்களுடன் கலந்துரையாடியுள்ளனர்.

குறித்த பகுதி மக்கள் ஆனையிறவில் நன்னீர் இறால் பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதிக்கு மழை காலங்களில் சுண்டிக்குளம், கடல்நீரேரி ஊடாகப் பாய்ந்து வருகின்ற தண்ணீர் மூலமாக இறால் உற்பத்தி அதிகரித்துக் காணப்படுகின்றது. அதன் மூலமாகவே அவர்கள் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்துகின்றனர்.

எனினும், ஆனையிறவை மிகப்பெரும் தளமாக வைத்திருந்த இராணுவத்தினர், அதன் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக பெருமளவான மண் அணைகளை அணைத்து காவல் அரண்களை அமைத்திருந்தனர்.

இதனால் அணையின் ஊடாகச் சுண்டிக்குளம் பகுதியிலிருந்து வருகின்ற தண்ணீர் தரவைப் பகுதிக்கு வருவது குறைந்தது. இதனால் இறால் உற்பத்தி குறைந்துவிட்டது என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். அந்தப் பகுதிக்கும் குறித்த குழுவின் சென்று ஆராய்ந்தனர்.

குறித்த பிரச்சினைக்கு 10 நாள்களில் தீர்வு பெற்றுத் தருகின்றோம் என்று அந்தக் குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

இதன்போது உப தவிசாளர் கயன் உறுப்பினர்களான ரமேஷ், வீரபாகுதேவர் மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உப தலைவர் அப்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-6)

## குடும்பத் தலைவர் மீது வீடு புகுந்து வாள்வெட்டு

முல்லைத்தீவு, ஓக. 26

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் கற்சிலைமடு கணேசபுரம் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த இனந் தெரியாத நபர்கள் குடும்பத் தலைவரை வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டுக்கு இலக்கான 35 வயதுடைய குடும்பத் தலைவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

விசாரணை நடக்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-ரி3)

## பொதுஇடங்களில் புகைப் பிடித்த நால்வருக்கு ரூ.1,500 தண்டம்

தலைமன்னார், ஓக. 26

மன்னார் நகர்ப் புறங்களில் தடைசெய்யப்பட்ட பொது இடங்களில் புகைபிடித்த நான்கு பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது மன்னார் நீதிமன்று.

பொலிஸார் குறித்த நால்வருக்கும் எதிராக மன்னார் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நால்வரும் தம் மீதான குற்றங்களை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்தே மேற்குறித்த தண்டம் விதிக் கப்பட்டது. (த-60)

## வீதி விளக்குகள் பொருத்த நிதி ஒதுக்கீடு

முல்லைத்தீவு, ஓக. 26

முல்லைத்தீவு, கணுக்கேணி வட்டாரத்துக்கு ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபாவில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கணுக்கேணி வட்டார பிரதேச சபை உறுப்பினர் த.அமலனின் கோரிக்கைக்கு அமைவாக வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக வீதி விளக்குகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி3)



# சஜித்தை நியமிக்காவிட்டால் பலர் அரசியலை கைவிடுவர்

*ஹேஷா விதானகே எம்.பி. தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக.26



இந்த மாத இறுதிக்குள் அமைச்சர் சஜித் பிரேமதாசவை அரச தலைவர் வேட்பாளராக நியமிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பலரும் தமது அரசியல் வாழ்க்கைக்கு விடை கொடுக்க நேரிடும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, கோடகவெல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றின்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாகக் கிராமங்கள் தோறும் ஐக்கிய தேசியக் கட்சிக்காக உழைத்தவர்களை நிர்க்கதியாக்கும் வகையில் நாம் செயற்பட முடியாது. பதவிகளை எதிர்பார்க்காது அவர்களுக்கான நல்ல ஒரு சூழலை உருவாக்குவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தே வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றார். அவர் சஜித்துக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டு வந்தார். அதனால் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம்சிங்கவுடன் முரண்பாடுகளும் ஏற்பட்டிருந்தன. எனினும் அண்மையில் விதானகே உடல் பாதிக்கப்பட்டு கொழும்பு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது, அவரை ரணில் விக்கிரமசிங்க சந்தித்து உடல் நலம் விசாரித்திருந்தார். (எ-21)

---

# உட்கட்சி விடயங்களை ஐ.தே.க. வீதிக்கு கொண்டு வரக்கூடாது

*வேலுகுமார் எம்.பி. அறிவுரை*

கொழும்பு, ஓக.26

கட்சியின் மையச் செயற்குழுவில் கலந்துரையாடித் தீர்மானிக்க வேண்டியவிடயங்களைஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நடுவீதிக்குக் கொண்டுவருவது கட்சி மீதுதவறானவிம்பத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

எதிரிகளை வீழ்த்துவதற்கு ஒற்றுமையே வலிமையான ஆயுதம். அதைப்புரிந்து கொண்டு செயற்பட்டால் மட்டுமே தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

அரச தலைவர் தேர்தல் நெருங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சியினர்இருஅணிகளாகப்பிரிந்துசொற்போரில் ஈடுபடுகின்றனர். புதிய அரசியல் கூட்டணியோ, அரசதலைவர் வேட்பாளரோ இன்னமும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில், இவ்வாறு கருத்து மோதல்களில்ஈடுபடுவது ஏனைய கட்சிகளுக்கே களம்அமைத்துக்கொடுக்கும்.

ஒற்றுமையைக்கருத்தில் கொண்டே வேட்பாளரைத் தெரிவு செய்யும் பொறுப்பை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கினோம். அதை எமது பலவீனமாகக் கருதிச் செயற்படக்கூடாது. கூட்டணி ஜனநாயகத்தை மதிப்பதாலேயேமிகவும்கௌரவமான முறையில் பங்காளிகளாகச் செயற்படுகின்றோம்.

கட்சிக்குள்கலந்துரையாடல்களை நடத்தி, மக்கள் மனநிலையை அறிந்து, மக்களால் கோரப்படும் வெற்றி வேட்பாளரைக் களமிறக்கும் தீர்மானத்தை ஐக்கிய தேசியக் கட்சி கூடிய விரைவில் எடுக்க வேண்டும். தான்தோன்றித்தனமாக மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்த வேட்பாளர்களைப் போட்டிக்காக நிறுத்தக்கூடாது. அவ்வாறு நடந்தால் நாம் அதற்கு எதிராகச் செயற்படுவோம். அரச தலைவர் தேர்தலை எவ்வாறு கையாள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளோம் - என்றார். (எ)

---

# புத்துவெட்டுவான் - முறிகண்டிக்கு பேருந்து சேவையின்றி பேரவலம்

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை
## அதிகார சபையிடம் தீர்வு என்கிறது தனியார் பேருந்து சங்கம்

கிளிநொச்சி, ஓக. 26

**கிளிநொச்சிப் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், தேறான் கண்டல், பழைய முறிகண்டி ஆகிய கிராமங்களுக்குப் பேருந்து போக்குவரத்து வசதி இல்லாததால் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். எனவே விரைவில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.**

இந்தப் பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் 5 ஆயிரத்துக்கும்மேற்பட்டஉறுப்பினர்களைக் கொண்டு வாழ்கின்றன என்று சமூகத் தலைவர்கள் கூறுகின்றனர்.

2006 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் இந்த பகுதிகளில் தனியார் போக்குவரத்து சேவை இடம்பெற்றது. 2006ஆம்ஆண்டுக்குப் பின்னர் தனியார் போக்குவரத்துச்சேவையும்இல்லை. அரசபோக்குவரத்துச் சேவையும் இல்லை. இதனால் அந்தப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலைதரம்5வரைதான்உள்ளது. தரம் 6 லிருந்து கல்வி கற்பதற்கு ஐயன்கன்குளம்மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்குச் சென்றுதான் கல்வி கற்கவேண்டும். பொதுமக்கள்செல்வதற்கும் போக்குவரத்து சேவை இல்லை. மாணவர்களுக்கும் பாடசாலைசேவைஏற்படுத்தப்படவில்லை. இதனால் நாளாந்தக் கூலி வேலை செய்யும் குடும்பங்கள், வியாபாரிகள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் 5 கிலோமீற்றர் தூரத்துக்கு நடந்தும் ஈருருளியிலும் செல்கின்றனர்.

ஏனைய அலுவலர்கள் தத்தமது திணைக்களங்களுக்கு அவ்வாறே செல்கின்றனர். ஒருசிலகுடும்பங்கள் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும்முச்சக்கரவண்டிஅமர்த்தியுள்ளனர். அதற்காக மாதாந்தம் 5 ஆயிரம்ரூபாசெலவழிக்கின்றனர். பணம்செலுத்த முடியாத மாணவர்கள்5கிலோமீற்றர்நடந்துசெல்கின்றனர். முச்சக்கரவண்டியிலும்ஈருருளியிலும்இன்னும்பலர்நடந்தும்செல்ல வேண்டிய நிலையிலுள்ள னர்.

எமது பகுதியில் சந்தை இல்லை. கிளிநொச்சிஅல்லதுமல்லாவிஆகிய சந்தைகளுக்கு12மைல்தூரத்துக்கு அப்பால் அத்தியாவசியப் பொருள்களை வாங்கிச் செல்லவேண்டிய தேவை உள்ளது. மீள்குடியேற்றம் செய்தபின்னர்ஒருகிழமைபேருந்து சேவை நடைபெற்றது. பாதை சரியில்லைஎன்றுஅதனையும்நிறுத்திவிட்டார்கள்.

இதேவேளை - கொக்காவில் - துணுக்காய்வீதிகுண்டும்குழியுமாகக்காணப்படுகின்றது. போக்குவரத்துச் சேவையும் இல்லை, அரசியல்வாதிகள்தேர்தல்காலத்தில்வருவார்கள். அவர்கள்வரும்போது போக்குவரத்து வீதிப் பிரச்சினை எல்லாம் சொன்னோம். செய்துதருவோம்எங்களை வெல்ல வையுங்கள் என்று கூறியவர்கள் தேர்தல் முடிந்ததும் இந்த பக்கம் திரும்பிப் பார்க்கவும் இல்லை. எமது பிரச்சினைகளைக் கருத்திலெடுக்கவும் இல்லை.

இதுதொடர்பில்இலங்கைப்போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளரிடம் கேட்டபோது, எமது சாலையில் பேருந்து மற்றும் சாரதிகளுக்கும் நடத்துநர்களுக்கும்பற்றாக்குறைநிலவுகின்றது. புதிய பேருந்துகளையும் எமக்கு தேவையான சாரதி மற்றும் நடத்துநர்களைவழங்கும்பட்சத்தில்கொக்காவில் - துணுக்காய் வீதிக்கான பேருந்துசேவையைநடத்த முடியும். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சாரதி மற்றும் காப்பாளர்களை நியமித்தால் எமது சேவையை தொடர முடியும்என்று கூறினார்.

இதுதொடர்பாககிளிநொச்சிதனியார் போக்குவரத்துச்சபையின்தலைவரிடம் கேட்டபோது, குறித்த பகுதியில் பேருந்துகளை அனுப்புவதற்கான வழிஅனுமதியைவடக்குமாகாண போக்குவரத்து அதிகார சபையினர் வழங்கவேண்டும். வழங்கினால் நாங்கள் கிளிநொச்சியில் இருந்து சேவையை ஆரம்பிப்போம் என்று தெரிவித்தார். (த-6,159)

---



# பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடைபயணம் வவுனியா சென்றது

கிளிநொச்சி, ஓக. 26

நாட்டின் பாதுகாப்பு நிலையிலுள்ள நம்பகத்தன்மையை வெளிக்காட்டும் வகையில், பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனைநோக்கிய நடைபயணத்தின் இரண்டாம் நாளான நேற்று பயணம் கிளிநொச்சியிலிருந்து தொடர்ந்தது.

யாழ்ப்பாணம்பருத்தித்துறையிலிருந்து நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நடை பயணம் பிற்பகல் கிளிநொச்சியைச்சென்றடைந்தது. நேற்று காலை 6.30 மணியளவில் கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து குறித்த நடை பயணம் தொடர்ந்தது. இரண்டாம் நாள் பயணம் வவுனியா புளியங்குளம் பகுதியில் நிறைவடைய உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரலில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து நாட்டில் நிலவிய இனங்களுக்கிடையிலான முறுகல் நிலை மற்றும் பாதுகாப்பற்ற நிலை காரணமாக சுற்றுலாத்துறையில் பெரு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

குறித்த நிலை தற்போது மக்கள் மத்தியில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் காணப்படுவதை வெளிப்படுத்தவும், பாதுகாப்பான நிலை தொடர்பில் பன்னாட்டுச் சமூகத்துக்கு வெளிக்காட்டவும் குறித்த நடைபயணம் இந்த மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் தற்போதுள்ள நிலையை பன்னாட்டுச் சமூகத்துக்குஎடுத்துகாட்டுவதும் நோக்கம் என்றும் அந்த மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (த-6)

---

# ஐ.தே.கட்சியின் நெருக்கடி கோத்தபாயவுக்கே சாதகம்!

*சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.26



அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நெருக்கடிநிலவுகின்றது. கோத்தபாய ராஜபக்சகடும்போட்டியில்லாதுதேர்தலில் வெற்றி பெறுவார்.

இவ்வாறுநாடாளுமன்றஉறுப்பினர் சுசில்பிரேமஜயந்ததெரிவித்துள்ளார்.

கடுவெலவில்ஊடகங்களிடம்கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலமைகள் தொடர்பாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்கு தெரியும். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாயராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கும் விடயத்தில் சரியான முடிவை அவர் எடுப்பார்.

இலங்கையில் கலாசார ஆடை அணிபவரே சுதந்திரக் கட்சி வேட்பாளராக வருவார் எனச் சிலர் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னாள் தலைமை அமைச்சர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க, ஆரம்பத்தில் ஐரோப்பிய ஆடைகளை அணிந்தார். பின்னர் நாட்டுக்கு பொருந்தும்வகையில் இடத்துக்கு ஏற்றவகையில் அவர் ஆடைகளை அணிந்தார்.

ஆடைகள் அணிவதை வைத்து ஒருவரை மதிப்பிட முடியாது. கல்வி, செயற்பாடு ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒருவருடைய திறமையை மதிப்பிட வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் அரச தலைவர் தேர்தலுக்கு வேட்பாளரைநிறுத்துவதில்பிரச்சினைதோன்றியுள்ளது. இந்த நிலமை தொடர்ந்து நீடிக்குமானால் கடும் போட்டியில்லாது கோத்தபாய ராஜபக்ச வெற்றியடைய முடியும் - என்றார். (எ)

# இராணுவப் புலனாய்வை கட்டமைக்க நடவடிக்கை

## புதிய இராணுவத் தளபதி கூறுகின்றார்

கொழும்பு, ஓக26

இராணுவப் புலனாய்வுத்துறையை மறுசீரமைத்து அதன் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அதில் உள்ளதாவது:

"எந்தச் சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய நிலமைகளுக்கும் முகம்கொடுக்கும் வகையில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு மறுசீரமைக்கப்படும். அதன் செயற்பாடுகளை மேலும் சிறப்பாக முன்னெடுக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகளின்போது வெளிநாட்டு இராணுவங்கள் பயன்படுத்தும் உத்திகள் ஆராயப்பட்டு, அதன் அனுபவங்களை எமது இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளேன்.



நாட்டின் இறைமை, ஆட்புல ஒருமைப்பாடு என்பவற்றைப் பாதுகாப்பதற்குத் தேவையான தலைமைத்துவத்தை வழங்க வேண்டியது இராணுவத் தளபதி என்ற வகையில் எனது முக்கிய பொறுப்பாகும். மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையானவற்றை முன்னெடுப்பதற்குப் பாதுகாப்புத்துறை சார்ந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்க வேண்டியது எனது இரண்டாவது பொறுப்பு எனக் கருதுகின்றேன். அந்த அடிப்படையில் நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

இலங்கை இராணுவம் உலகின் சிறந்த இராணுவம் என்று பெற்றுள்ள நற்பெயர் மற்றும் நம்பிக்கையைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது எமது அனைவரது பொறுப்புமாகும்.

நவீன தொழில்நுட்ப அறிவைப் படையினருக்கு வழங்குவதும், எதிர்காலத்தில் எந்தச் சவாலுக்கும் முகம் கொடுக்கும் வகையிலான பயிற்சிகளைப் பெற்றுக்கொடுப்பதும் எனது எதிர்பார்ப்பாகும்" என்றுள்ளார்.

அதேவேளை, லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமைக்குப் பல தரப்பினரிடம் இருந்து எதிர்ப்புக்கள் கிளம்பியிருந்தன. இறுதிப் போரின்போது நடைபெற்றன என்று கூறப்படும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கு இவரே பொறுப்பேற்க வேண்டும் என்று பன்னாட்டு மனித உரிமை அமைப்புக்களும், பன்னாடுகளும் கூறிவருகின்றன.

இறுதிப் போரின்போது இவர் கட்டளைத் தளபதியாக இருந்த படைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட பலர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டு வருகின்றன. (எ-21)

### 4 நாள்களில் 24 பேர் வழுக்கி விழுந்தனர்!

கொழும்பு, ஓக. 26

நாடாளுமன்ற கட்டடத்திலுள்ள தரைப்பகுதியை சுத்தம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட திராவகத்தால், தரை வழுக்குவதால், இதுவரை 24 பேர் வழுக்கி வீழ்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வீழ்ந்தவர்களுள் 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 14 பெண் ஊழியர்கள் மற்றும் நான்கு வெளிநபர்கள் அடங்குவதாக கூறப்படுகிறது. கடந்த 20ஆம் திகதி முதல் நான்கு நாள்களாக இந்த வழுக்கும் தன்மை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

## ஓய்வு வழங்கும் அதிகாரம் இனிக் கல்வி அமைச்சிடம்

இலங்கை கல்வி நிர்வாக சேவை, இலங்கை ஆசிரியகல்விசேவை மற்றும் இலங்கைஅதிபர்சேவை ஆகியமூன்றுபிரிவுகளையும் சேர்ந்த அலுவலர்களுக்கு ஓய்வு வழங்குவதுதொடர்பானஅதிகாரம் பொதுச்சேவைஆணைக் குழுவிடமிருந்து கல்வி அமைச்சின் செயலரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. கல்விஅமைச்சர்அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனைக்கமைய, பொதுச்சேவைஆணைக் குழுவிடம்கல்விஅமைச்சு இதற்கான கோரிக்கையை முன்வைத்திருந்தது. அதையடுத்து ஒழுக்காற்று பிரச்சினைகள் தவிர்ந்த சாதாரண முறையில் குறிக்கப்பட்ட தினத்தில் ஓய்வு பெறுவதற்கான அனுமதியை தமது அமைச்சினூடாக வழங்க முடியும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## சஜித்தைப் பதவியில் அமர்த்தும் மைத்திரியின் திட்டம் தோல்வி

கொழும்பு, ஓக.26

ஐக்கியதேசியக்கட்சியின் பிரதித்தலைவர்சஜித்பிரேமதாசவைத் தலைமை அமைச்சராக்குவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எடுத்த முயற்சிகள் மீண்டும் தோல்வியடைந்துள்ளன என்றுதெரியவருகின்றது.

சஜித் பிரேமதாசவைத் தலைமை அமைச்சராக்கி, புதிய அமைச்சரவையை உருவாக்கும் முயற்சிகளைக் கடந்த வாரம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முற்கொண்டிருந்தார். சஜித்தைத் தலைமை அமைச்சராக்க வேண்டும் என 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டகடிதத்தைவழங்கினால் அவரைத் தலைமை அமைச்சராக்க முடியும் என்று சஜித்தின் நெருங்கிய சகா ஒருவருக்கு அரச தலைவர் ஆலோசனை வழங்கியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

அதையடுத்து சஜித்தின் ஆதரவாளர்கள் சிறிலங்காபொதுமக்கள்முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் புதிய அரசை அமைக்கும் முயற்சிகளை மேற்கொண்டனர் என்றும், ஆனால் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் அதை விரும்பாததால் அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது என்றும் கூறப்படுகின்றது.

அதேவேளை, சஜித் பிரேமதாசவும் இந்த விடயத்தில்பெரிதாகஆர்வம்காட்டவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## பெரமுன ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பு வருமாம்!

கொழும்பு, ஓக.26

சிறிலங்காபொதுமக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்தால் புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று அந்தக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமானமகிந்தராஜக்சதெரிவித்துள்ளார்.

கொழும்பு ஆங்கில ஊடகம்ஒன்றுக்குவழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

புதிய அரசமைப்பின் உள்ளடக்கங்கள் தொடர்பாக எதிர்காலத்திலேயே தீர்மானிக்கவேண்டும். மாகாணசபைகளின் செயற்பாடுகள் உட்பட அதிகளவு அதிகாரப் பகிர்வு குறித்து நாங்கள் கவனம்செலுத்துவோம்.



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை நீக்கவேண்டும். அது பிழையானது. நாங்கள் நாடாளுமன்றத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.

கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற்றால் தேசிய பாதுகாப்பு மற்றும் துரிதமாக வீழ்ச்சியடைந்து வரும் பொருளாதாரம் தொடர்பாக அதிக கவனத்தை செலுத்துவோம். மக்கள் இன்று உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் வாழ்கின்றனர். பயங்கரவாதத்துடன் தொடர்புடைய நபர்கள் கைதுசெய்யப்படுகின்றனர் என்று நாளாந்தம் செய்திகள் வெளியாகின்றன.

கோத்தபாய ராஜபக்ச மிகவும் திறமையான வேட்பாளர். அவர்தேசிய பாதுகாப்பை மாத்திரமல்ல, சட்டம் ஒழுங்கையும் உறுதி செய்வார். அவர் ஏற்கனவே தனது ஆளுமையை நிரூபித்துள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமையைக்கைவிட்டுவிட்டார் என என்னால் நிச்சயமாகத் தெரிவிக்க முடியும். அவர் பிரஜாவுரிமையை கைவிடவில்லைஎனச்சிலர்பரப்புரையில் ஈடுபடுகின்றனர். அவர்கள் தங்கள் நேரத்தை வீணடிக்கட்டும். -என்றார். (எ)

## காட்டு யானைகளை கணக்கிட தேசிய பூங்காக்களுக்கு பூட்டு!

கொழும்பு, ஓக.26

நாடுமுழுவதும் காட்டு யானைகளைக் கணக்கெடுப்பதற்காக நாட்டில் உள்ள அனைத்துத் தேசியப் பூங்காக்களுக்கும் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று வன ஜீவராசிகள்திணைக்களஅதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளுக்காக நீர் நிலைகளுக்கு அருகிலுள்ள சுமார் 250 வனப் பிரதேசங்கள் திணைக்களத்தால்தெரிவு செய்யப்பட்டுள்ளதுஎன்று வன ஜீவராசிகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் ஹசினி சரச்சந்திர தெரிவித்துள்ளார்.

4 ஆயிரத்து 500 பேரை இணைத்து யானைகளை கணக்கெடுக்கும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்படவுள்ளன. இறுதியாக 2011 ஆம் ஆண்டிலேயே யானைகளை கணக்கெடுக்கும் நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டது. அப்போது காட்டு யானைகளின் எண்ணிக்கை 5 ஆயிரம் 879 ஆகும். வடக்கு-கிழக்கில் சில இடங்களில் அப்போது கணக்கெடுப்பு மேற்கொள்ள முடியாதிருந்துள்ளது என்று தெரியவந்துள்ளது.

இதுவே நாடு முழுவதும் காட்டு யானைகளை கணக்கெடுக்கும் முதலாவது நடவடிக்கையாகும். நீர்நிலைகளை அண்டிய வண்ணம் கணக்கெடுப்பு நிலையங்கள் அமைக்கப்படும். ஏனெனில், 24 மணிநேரத்தில் யானைகள் நீர் நிலைகளைநாடிவரும். இந்தக் கணக்கெடுப்புக்குவறண்ட காலநிலை உகந்ததாகும். இந்த நடவடிக்கைக்காகநாங்கள்பௌர்ணமி தினத்தை தெரிவுசெய்துள்ளோம். ஏனெனில் கணக்கெடுப்புக்கு நிலா ஒளி அதிக நன்மை பயக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த கணக்கெடுப்புக்காக சுமார் 80 மில்லியன் ரூபா வரை செலவாகுமென்றுவனஜீவராசிகள் திணைக்களம் கணக்கிட்டுள்ளது. (எ)

# வெள்ளை வான் கடத்தலுக்கு கட்டளையிட்டாரா கோத்தா?

*வாசுதேவ எம்.பி. கேட்கிறார்*

யாழ்ப்பாணம், ஓக.26

**2015** ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த கோத்தபாய ராஜபக்ச வேறு, தற்போது அரச தலைவர் தேர்தலில் களமிறங்கும் கோத்தபாய ராஜபக்சவேறு. வெள்ளைவானில்நடைபெற்றகடத்தல்களுக்கு கோத்தபாய ராஜபக்சதான் கட்டளையிட்டார் என்று நிரூபிக்கப்பட்டுள்ளதா?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார.

கொழும்பில்நேற்றுமுன்தினம்நடத்தியசெய்தியாளர்சந்திப்பில்கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது: கோத்தபாய ராஜபக்ச பாதுகாப்புச் செயலராகப்பதவிவகித்தகாலத்தில் வெள்ளைவான் கடத்தல் நடந்தது என்கின்றனர்.அவைஅவர்பதவியில் இருந்தகாலப்பகுதியில்நடந்திருக்கலாம்.ஆனால்அதற்கானகட்டளையை அவர்தான் பிறப்பித்தார் என்று எங்காவது நிரூபிக்கப்பட்டுள்ளதா? பாதுகாப்புச்செயலராகப்பதவிவகித்த கோத்தபாயராஜபக்சவேறொருவர், நாட்டின்அரசதலைவரானபின்னர் வரவுள்ள கோத்தபாய ராஜபக்ச வேறொருவர். அரச தலைவரானதும் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவராகவே செயற்படுவாரே தவிர, பாதுகாப்புச் செயலராகச் செயற்படப் போவதில்லை.

தற்போதைய அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனஎன்னசெய்தார்?. மகிந்த ராஜபக்சவுடன் இருந்தார். அவருக்குத் துரோகம் செய்து அரச தலைவரானார். தன்னை அரச தலைவராக்கியஐக்கியதேசியக்கட்சிக்கும்அவர்உண்மையாகஇருக்கவில்லை - என்றார்.

அதேவேளை, மகிந்தராஜபக்சஅரச தலைவராகப் பதவி வகித்தபோது, பாதுகாப்புஅமைச்சின்செயலராகக் கோத்தபாயராஜபக்சநியமிக்கப்பட்டிருந்தார். இந்தக் காலப்பகுதியில் வெள்ளைவான் கடத்தல்கள், இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர்கள் படுகொலை என்பன இடம்பெற்றிருந்தனஎன்றும், அவற்றுக்குப்பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சபொறுப்புக்கூறவேண்டும் என்றும்மனிதஉரிமைஅமைப்புக்களும், ஆர்வலர்களும் குரல் கொடுத்து வருகின்றனர். கோத்தபாயராஜபக்சவுக்குஎதிராகஅமெரிக்காவில் இரு வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன: படுகொலை செய்யப்பட்டஊடகவியலாளர்லசந்தவின் மகளும், தன்னைச் சித்திரவதைக்கு உள்ளாக்கினார் என்று மற்றொருவரும்இந்தவழக்குகளைத் தாக்கல்செய்துள்ளனர். (எ-21)

## சு.கவின் மாநாட்டுக்கு முன்னர் கூட்டணி தொடர்பில் தீர்மானம்

*மகிந்த அமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.26

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னர் பரந்துபட்ட கூட்டணி தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே கூட்டணி தொடர்பாகப் பல கட்டப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. எனினும் கூட்டணி தொடர்பாக தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. நாளையும் இது தொடர்பாக இரு தரப்பினரும் பேச்சு நடத்தவுள்ளனர்.

அது தொடர்பாகக் கேட்கப்பட்டபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: புதிய அரசில் அமைச்சரவையின் எண்ணிக்கையை 30 ஆக மட்டுப்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரச தலைவர், எதிர்கட்சித் தலைவர், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் ஆகியோரின் சந்திப்புக்களின் பெறுபேறுகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும் - என்றார். (எ)

## ஐ.தே. கட்சியில் இருந்தே வேட்பாளர் வரவேண்டும்

*பிரதி அமைச்சர் மஃறூப் தெரிவிப்பு*

ஐக்கியதேசியக்கட்சியில் இருந்தே அரச தலைவர் வேட்பாளர் தெரிவு செய்யப்பட வேண்டும். அதற்காக அகில இலங்கை மக்கள்காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையகக் கட்சி என்பன உறுதுணையாக இருக்கும். எமக்குள் எந்தவிதப்பிரிவினையும் இல்லை.

இவ்வாறு துறைமுகங்கள் மற்றும்கப்பல்துறைப் பிரதிஅமைச்சர் அப்துல்லா மஃறூப்தெரிவித்தார்.

மூதூரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வீதிச் சீரமைப்பு ஆரம்ப நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: எதிர்வரும்தேர்தல்களில் சிறுபான்மைச் சமூகம் தீர்மானிக்கின்றசக்தியாக இருக்க வேண்டும். 30 வருடகாலப்போர்காரணமாகத் திருகோணமலை மாவட்டம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பல அபிவிருத்திகளைச் செய்ய வேண்டியுள்ளது. துரிதமாக அபிவிருத்தி செய்யவேண்டிய ஐந்து மாவட்டங்களில் திருகோணமலையில் உள்வாங்கப்பட்டுள்ளது.

இனவாதத்தைக் கக்கி வாக்குகளைத்தேடமுயற்சிப்பது தோல்வியில் முடியும். மகிந்த அரசு போரை வெற்றிகொண்டபோதும், ஏன் கடந்த அரசதலைவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்? இந்தநாட்டில்இனவாதத்துக்கு இடமில்லை என்பதைஅதுஎடுத்துக்காட்டியது. முஸ்லிம் சமூகம் பல சோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. அதை வெற்றி கொள்ள எதிர்வரும் தேர்தல் இருப்பை உறுதிப்படுத்தும்தேர்தலாக அமைய வேண்டும். அதற்கு அனைவரது ஒத்துழைப்பும் தேவை. - என்றார். (எ-40)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு சிறப்பு நிதியுதவி வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், ஓக.26




பொருளாதார நிலையில் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தில் இணைக்கப்படும் மாணவர்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

அவையாவன: வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவராக இருத்தல், இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரச பல்கலைக் கழகத்தில் கல்வியைத் தொடர்பவராக இருத்தல், இடம்பெயர்ந்த மாணவர்கள், வருமானத்தை இழந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள், ரூபா 6 ஆயிரத்துக்கு குறைவான வருமானங்களைப் பெறும் மாணவர்கள் ஆகியோர் இத் திட்டத்துக்கு சேர்த்துக் கொள்வதற்கு தகுதியானவர்கள்.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் www.edumin.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்யலாம். முழுமைப்படுத்தப்பட்ட படிவங்களையும் தேசிய அடையாள அட்டை மற்றும் பல்கலை அடையாளஅட்டை, விண்ணப்பதாரியின் வங்கி சேமிப்பு புத்தகத்தின் கணக்கிலக்கம், பெயர் போன்ற விவரங்கள் அடங்கிய பக்கத்தின் பிரதி என்பனவற்றுடன் பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன், பிரதேச செயலரின் பரிந்துரையுடனும்அனுப்பிவைக்கவேண்டும். "கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு, செம்மணி வீதி நல்லூர்" என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (ஐ)

## விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.26

கண்டி, நுவரெலியா முதன்மை வீதியில்தவலந்தென்ன, கெரண்டிஎல்லபகுதியில்நேற்றுமுன்தினம் இரவுநடந்தஉந்துருளிவிபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உந்துருளிவேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரக் கால்வாய் ஒன்றுக்குள்வீழ்ந்துவிபத்துநடந்ததுஎன்றுகூறப்படுகின்றது. விபத்தில் 20 வயதுடைய இளைஞர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின்உடல்உடற்கூற்றுச் சோதனைக்காக கொத்மலைப் பிரதேச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தவிபத்துத்தொடர்பாகக்கொத்மலைப் பொலிஸார் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர். (எ)

## இந்த ஆண்டின் இறுதிக்குள் மருந்துகள் விலை குறைப்பு

*அமைச்சர் ராஜித தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.26

இந்தஆண்டுஇறுதிக்குள்27 மருந்து வகைகளின் விலைகள் குறைக்கப்பட வுள்ளன என்று சுகாதார, பாதுகாப்பு மற்றும்சுதேசியமருத்துவத் துறைஅமைச்சர்ராஜிதசேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மருந்து வகைகளை இறக்குமதி செய்வோர் சங்கத்தின் 18ஆவது மாநாடு அம்பாந்தோட்டையில்நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

ஒரே வர்த்தக் குறியீட்டில் பெரும் எண்ணிக்கையான மருந்துவகைகள்பதிவுசெய்யப்பட்டுள்ளன. இது தற்போது வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தரமான மருந்துவகைகளைப்பொதுமக்களுக்கு வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை நாம்முன்னெடுத்துள்ளோம். ஏற்கனவே மருந்து வகைகளின்விலைகள்குறைக்கப்பட்டுள்ளன. இந்தஆண்டின் எதிர்வரும் காலங்களில் மேலும் 27 மருந்து வகைகளின்விலையைக்குறைத்து அதன்நன்மைகளைமக்கள் பெற வழி வகுக்கப்படும். - என்றார். (எ)

## பேருந்துகள் உரிமையாளர் சங்க தலைவர் தெரிவு

மன்னார், ஓக. 26

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் புதிய தலைவராக ரீ.ரமேஸ் நேற்றுமுன்தினம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத் தெரிவுகள் மன்னார் எழுத்தூர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

அதன்போதே ரமேஸ் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து செயலராக கே.கேதுஜன், பொருளாளராக ஜீ.எலியாஸ் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபைஉறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

# தெரிவுக் குழுவுக்கு வருமாறு அரச தலைவருக்கு அழைப்பு

கொழும்பு, ஓக.26

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்னிலையாக வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

அதற்கான திகதி மற்றும் நேரத்தை வழங்க வேண்டும் என்று அரச தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அரச தலைவர் திகதி வழங்கிய பின்னர், அவரை தெரிவுக்குழுவுக்கு அழைக்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரச தலைவர் தெரிவுக்குழுவில் முன்னிலையாகாவிட்டாலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என பிரதி சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதி சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் சாட்சியம் வழங்கியுள்ளனர். இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆயுள் காலம் ஒகஸ்ட் 23ஆம் திகதியுடன் நிறைவடையவிருந்த நிலையில், அதன் ஆயுள்காலம் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தத் தெரிவுக் குழுவில் முன்னிலையாக மாட்டேன் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறிவருகின்றார். தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என்றும் அவர் அழுத்தங்களை வழங்கியிருந்தார். (எ)



# இளைஞரைக்கொன்றோருக்கு தற்போதைய அரசில் பதவிகள்

*மகிந்த ராஜபக்ச குற்றச்சாட்டு*

கொழும்பு, ஓக.26

இளைஞர்களைக்கொன்றவர்களுக்குத் தற்போதைய அரசில் அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச.



கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1989ஆம் ஆண்டுகளில் எம்பிலிப்பிட்டியவிலிருந்து பட்டலந்தை வரை பல இடங்களில் சித்திரவதைமுகாம் இருந்ததைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்தக் கால கட்டத்தில் தான் மனித உரிமைகள் என்ற வார்த்தையை முதன் முதலில் அறிமுகம் செய்தோம்.

இளைஞர்கள் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும், எமது காலத்தில் இளைஞர்கள் கொல்லப்பட்டமைக்குநீதியைபெற்றுக்கொடுத்தோம். போரை நிறைவுக்கு கொண்டு வந்தமையே இளைஞர்களுக்குவழங்கிய பெரும் சேவையாக நாம் கருதுகின்றோம். ஆனால் தற்போது இந்த அரசு முன்னெடுக்கும் செயற்பாட்டால் பெரும் பிரச்சினைக்குமுகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில்இளைஞர்களை தேடித் தேடி கொலை செய்தவர்களுக்கும் சித்திரவதை செய்தவர்களுக்கும் அன்று முறையான தண்டனை வழங்கியிருந்தால் இந்த அரசைக்கொண்டுநடத்த தலைவரும், அமைச்சர்களும் இருந்திருக்கமாட்டார்கள். அன்று சித்திரவதைக்கு உள்ளானவர்களும் அதற்கு எதிராக குரல்கொடுத்தவர்களும் இன்றுஓரணியில்திரண்டுள்ளனர். கடந்த காலங்களில் இளைஞர்களை மீட்டநாம் இன்று அவதிப்பட்டு வருகின்றோம் - என்றார். (எ)

# தேசியப் பிரச்சினை தீர்வுக்காக திஸ்ஸவை நியமித்தார் மகிந்த!

கொழும்பு, ஓக.26

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இணைப்பாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை சிறிலங்கா எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்சநியமித்துள்ளார்.

அண்மையில் கூட்டுஎதிரணிக்கும், சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போதே தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதுதொடர்பானஇணைப்பாளராக, பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டுள்ளார் என்று மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்த போது இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமை தாங்கியிருந்தார். அந்தக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு அறிக்கை முன்னேற்றகரமான ஒன்றாக வரவேற்கப்பட்ட போதும், மகிந்த ராஜபக்ச அதைநடைமுறைப்படுத்தஇணங்கவில்லை.

தற்போது தமிழ் மக்களினதும், தமிழ்க்கட்சிகளினதும் ஆதரவைத் திரட்டுவதற்காக பேராசிரியர் திஸ்ஸ விதாரணவை இணைப்பாளராக மகிந்த ராஜபக்ச நியமித்துள்ளார்.

எதிர்கால அரசின் கொள்கை அறிக்கையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள்தொடர்பாகஅறிக்கைஒன்றை சமர்ப்பிக்கவேண்டும்என்றுதிஸ்ஸ விதாரணவிடம்கோரப்பட்டுள்ளது.

அதையடுத்து பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வடக்கு-கிழக்குஅரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை நடத்திவருகிறார். வன்னி, கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில்அவர்கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றார். அவர் சி.வி.விக்னேஸ்வரன்,ஆனந்தசங்கரி, சந்திரகுமார், பிரபாகணேசன், வரதராஜப்பெருமாள், உள்ளிட்டவர்களைச் சந்தித்துள்ளார். கிழக்கிலும் முஸ்லிம் மற்றும் தமிழ் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்எனக்கூறப்படுகின்றது. (எ)

# குற்றச்சாட்டுள்ள ஒருவர் வேட்பாளராவது வியப்பு

*இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.26

பலகுற்றச்சாட்டுக்களைஎதிர்கொண்டுள்ளஒருவர், அரச தலைவர்வேட்பாளராகநியமிக்கப்பட்டுள்ளார்என்பது மிகவும்வியப்புக்குரியவிடயம். மக்களின்கருத்துக்கள் அடிப்படையில் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக நாங்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரச தலைவர் தேர்தல் இன்னும் அறிவிக்கப்படவில்லை. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தனது வேட்பாளரை அறிவித்துள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில் முதலில் அரச தலைவர் தேர்தல்அறிவிக்கப்படவேண்டும். அதன்பின்னர்வேட்பாளர்கள் அறிவிக்கப்பட வேண்டும். அவர்கள் தமது நிலைப்பாடுகளை அறிவித்தபின்னர், அவர்கள் அழைக்கும் பட்சத்தில் அவர்களுடன் கலந்துரையாடி மத்திய குழுவின் ஊடாகத் தீர்மானம் எடுப்போம்.

அரச தலைவர் தேர்தல் தொடர்பாக எமது கட்சி சார்ந்து எந்த உத்தியோகபூர்வ சந்திப்புக்களும் இதுவரை நடக்கவில்லை.

கோத்தபாயராஜபக்சதொடர்பாகதமிழ்மக்கள்கொண்டுள்ளகருத்துமிகவும்வெளிப்படையானது. அவர் அரச தலைவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதும் வடக்கு - கிழக்கில் பட்டாசு கொளுத்தப்பட்டது என்று திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒன்று.

பலகுற்றச்சாட்டுக்களைஎதிர்கொண்டுள்ளஒருவர்அரச தலைவர் வேட்பாளராக வருகின்றார் என்பது வியப்பான விடயம். இது இந்த நாட்டுக்கு அழகு சேர்க்கும் விடயமாக இருக்க முடியாது - என்றார். (எ)

# அவசர காலச் சட்டம் நீங்கினாலும் இராணுவச் செயற்பாடுகள் மாறாது

*இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.26

அவசரகாலச்சட்டம்நடைமுறையில் இருந்தாலும் இல்லாவிட்டாலும்,தேவையின் அடிப்படையில் இராணுவம் தற்போது மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்ததாவது:

அவசரகாலச்சட்டவிதிகள் தற்போது நடைமுறையில் இல்லாதபோதும் வெளிநாட்டுதூதரகங்கள் உட்படப் பல்வேறு இடங்களுக்கு வழங்கப்படும் இராணுவ பாதுகாப்பில் எந்தமாற்றமும்இருக்காது. அத்தகையபாதுகாப்புநடவடிக்கைகளை, தேவையின் அடிப்படையில் சிறிலங்கா இராணுவம் வழங்குகிறது. அவசர காலச் சட்டம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் அவை தொடரும்.

பொது பாதுகாப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்தின் தற்போதைய பங்களிப்பை மாற்றும் எண்ணம்எங்களுக்குஇல்லை. அவசர கால சட்ட விதிமுறைகள், எவரையாவது நேரடியாக கைது செய்வதற்கோ அல்லது தேடுதல் நடத்தவோ, தடுத்துவைத்திருக்கவோ தான் உதவுகின்றன.

அந்த சட்ட விதிகள் நடைமுறையில் இல்லாத நிலையில், பொலிஸார் அதைச்செய்வதற்குநாங்கள் உதவுவோம். இப்போது கூட சந்தேகநபர்கள் அனைவரும் சிவில் சட்டத்தின் கீழேயே பொலிஸாரால்கையாளப்படுகிறார்கள். அவசரகால விதிகளை நீக்குவது இராணுவத்தின் பணிகளைப் பாதிக்காது - என்றார். (எ)

# மின் தாக்கி சிப்பாய் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.26

சிகிரியவில் உள்ள இனாமலுவ இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 23 வயதுடையவர் என்றும்- ஊவா பரணகமவைச் சேர்ந்தவர் என்றும் - பொலிஸார் தெரிவித்தனர்.

மின் தாக்குதலுக்கு இலக்கான இவர் தம்புள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

# போர்க் காலத்தில் கடமையை சரியாகவே நிறைவேற்றினேன்

## தலதா மாளிகையில் சவேந்திர சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

இறுதிக் கட்டப் போரின்போது எனக்கு வழங்கப்பட்ட கடமையை சரியான முறையில் நிறைவேற்றினேன். எனது உயிரைப் பணயம் வைத்தாவது நாட்டைப் பாதுகாப்பேன். இவ்வாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தலதா மாளிகையில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

என்மீது எவ்வாறான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டாலும் உயிரைப் பணயம் வைத்தாவது நாட்டைப் பாதுகாக்க அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

இராணுவம் மற்றும் பொலிஸாருடன் இணைந்து எதிர்காலத்தில் புலனாய்வுத்துறையை வலுப்படுத்தி, நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுப்பேன். மேலும் போர்க் காலத்தின்போது எனக்கு வழங்கிய கடமைகளை நாட்டுக்காக சரியான முறையில் நிறைவேற்றியுள்ளேன். பல்வேறு சவால்களுக்கு மத்தியில் என்னை இராணுவத் தளபதியாக நியமித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றிகளையும் கூறிக்கொள்கிறேன் - என்றார்.

(ஒ.5,21)



# பண்டாரவன்னியனுக்கு முல்லையிலும் அஞ்சலி

முல்லைத்தீவு, ஓக. 26

முல்லைத்தீவுக் கோட்டையை வெற்றிகொண்ட பண்டாரவன்னியன் 216ஆம் ஆண்டு நினைவஞ்சலி முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது.

பண்டாரவன்னியன் தனது வாள் வீச்சில் 60 வெள்ளையர்களைச் சாய்த்த இடமான, முள்ளியவளை தெற்கு, 7ஆம் கட்டை, கயட்டையடி கற்பூரப் புல்வெளியில் அஞ்சலி நிகழ்வு நேற்று நடைபெற்றது. வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் தலைமையிலான குழுவினர் குறித்த இடத்தில் கற்பூரம் கொளுத்தி, மலரஞ்சலி செலுத்தினர்.

கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

(து-246)

# காட்டிக் கொடுப்புக்களால்தான் இன்றும் தோற்கடிக்கப்படுகிறோம்

## பண்டாரவன்னியன் நிகழ்விலிருந்து இடையில் வெளியேறிய சாந்தி எம்.பி. காட்டமாகத் தெரிவித்தார்

வவுனியா, ஓக. 26

ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கையில் காட்டிக் கொடுப்புக்களால் தோற்கடிக்கப்படுகின்றோம். மீண்டும் காட்டிக் கொடுப்புக்களால் எங்களின் பிரச்சினை நீண்டு செல்கின்றது என்ற வேதனையைக் கூற விரும்புகின்றேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

பண்டாரவன்னியன் நினைவேந்தல் வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் தனக்கு பேச வாய்ப்பளிக்கவில்லை என்றும், பக்கச்சார்பாகச் செயற்படுகின்றார்கள் என்றும் கூறி நிகழ்விலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வெளியேறியிருந்தார்.

இது பற்றிக் கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தலைவர் இ.கௌதமன் தலைமையில் நேற்று காலையில் பண்டார வன்னியனின் நினைவுச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து நகர சபை மண்டபத்தில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் உரையாற்றியிருந்தார். நீண்டநேரமாக விருந்தினர் வரிசையில் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா அமர்ந்திருந்தார். எனினும் அவர் உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா நகர சபை உறுப்பினர் ஒருவரை அழைத்து தனக்கு உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்குமாறு சாந்தி சிறிஸ்கந்தராசா கோரினார். அவர் நகரசபைத் தலைவரிடம் கோரிய போதும் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனை குறித்த உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தியிடம் தெரிவித்தார்.

அதனையடுத்தே அவர் அங்கிருந்து வெளியேறினார். என்று தெரிவிக்கப்பட்டது.

இது பண்டாரவன்னியன் நிகழ்வா? அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி நிகழ்வா என்று அங்கிருந்த ஒருசிலரிடம் தெரிவித்தபடி மண்டபத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

இது பற்றி அவரிடம் கேட்டபோது சாந்தி மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய நிகழ்வு மிகவும் மதிக்கக்கூடிய ஒரு நிகழ்வு. பண்டாரவன்னியனின் 216 ஆவது இந்த நிகழ்வை மிகவும் கோலாகலமாக கொண்டாடியதையிட்டு மகிழ்வடைகின்றேன். நான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால், நான் ஒரு வன்னியாள். இந்த வன்னி மண்ணைச் சேர்ந்தவள். இந்த மண்ணில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவள் என்ற உணர்வுடன் இந்த நிகழ்வில் பங்கு பற்றியிருந்தேன். ஆனாலும் பண்டாரவன்னியனின் சிலைக்கு மாலை அணிவித்த பின்னர் நகரசபையில் இடம்பெற்ற நிகழ்வு ஒரு கட்சி சார்ந்த நிகழ்வாகிவிட்டதோ என்ற வேதனையை நான் உணர்கின்றேன். இந்த நிகழ்வில் சக நாடாளுமன்ற உறுப்பினருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த அதேவேளை, எனக்கும் எனது கருத்தைக் கூறுவதற்கான எனது கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் வன்னி மண்ணை காத்த வீரன் பண்டார வன்னியன் நிகழ்வு ஒரு கட்சி சார்ந்த நிகழ்வாக மாறிவிட்டதோ என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது.

காட்டிக் கொடுப்புக்களால்தான் அன்று பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். எங்களுடைய ஆயுதப் போராட்டம் காட்டிக் கொடுப்பால்தான் தோற்கடிக்கப்பட்டது. ஒருமித்த நாட்டுக்குள் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலையை உருவாக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கையில் காட்டிக் கொடுப்புக்களால் தோற்கடிக்கப்படுகின்றோம். மீண்டும் காட்டிக் கொடுப்புக்களால் எங்களின் பிரச்சினை நீண்டு செல்கின்றது எனத் தெரிவித்தார்.

இது பற்றி நிகழ்வின் ஏற்பாட்டுக்குழுத் தலைவரும் நகர சபைத் தலைவருமான கௌதமனிடம் கேட்டபோது, குறித்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சட்டத்தரணி மு.சிற்றம்பலத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அவர் வெளி நிகழ்வில் கலந்துகொண்டபோதும், உடல் நிலை காரணமாக அரங்க நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை. அதனால் முதன்மை விருந்தினர் உரையாற்ற வேண்டிய இடத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனை உரையாற்ற அழைத்திருந்தோம். அத்துடன், இது ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் நிகழ்வல்ல - என்றார்.

(த-110,ரி4)

NEWUTHAYAN.COM

# தமிழ் அரசு எம்.பிக்களின் மோதல் தொடர்கின்றது

வவுனியா, ஓக. 26

அரசியல் பழிவாங்கலுக்காகவே தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் என்மீது குற்றஞ் சுமத்துகின்றார் என்று, அதே கட்சியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் உங்கள் மீது காணி சம்பந்தமான சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். அது தொடர்பான விசாரணைகளும் தமிழ் அரசுக் கட்சி மட்டத்திலே இடம்பெற்று வருகின்றது. இது தொடர்பாக உங்களுடைய கருத்து என்ன என வினவிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சி மட்டத்தில் அல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டத்திலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மூன்று கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தலைவர்களை ஒரு குழுவாக அமைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரையும் விசாரிக்குமாறு தீர்மானம் எடுக்கப்பட்டு இருக்கிறது.

அவரால் கூறப்பட்ட குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. அவ்வாறாக நான் காணி அபகரிக்கவும் இல்லை. காணியை களவாக பிடிக்கவும் இல்லை. அதற்குரிய சகல ஆவணங்களும் என்னிடம் இருக்கின்றது. அந்த காணிக்கென்று ஒரு வரலாறு இருக்கின்றது. அது எனது கணவரின் தந்தையாருக்கு சொந்தமான காணி. அந்த காணியிலே எனது கணவர் 40 வருடங்களாக வயல் செய்கின்றார், தோட்டம் செய்கின்றார்.

ஒரு அரசியல் பழிவாங்கல் என்ற வகையிலேயே சக நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு வெளியிட்ட செய்தி என்பது உண்மைக்குப் புறம்பானது. இதனுடைய விசாரணைகளின் முடிவில் மாவட்டச் செயலர் எழுத்து மூலமாக எனக்கு அறிவித்திருக்கிறார். இது கையகப்படுத்தப்பட்ட காணி அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அந்தப் போர்வையிலேயே நான் இந்தக் காணியை கையகப் படுத்தவில்லை - என்கிறார்.

(ஒ.5,110)

# பண்டாரவன்னியன் நினைவேந்தல் வவுனியாவில் சிறப்பாக நடந்தது

வவுனியா, ஓக. 26

வன்னி மண்ணின் விடுதலைக்காகப் போராடிய இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 216 ஆவது வெற்றி விழாவும், நினைவேந்தலும் வவுனியாவில் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.



காலை 8.15மணிக்கு வவுனியா மாவட்டச் செயலக முன்றிலில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் நினைவுத்தூபிக்கு அரசதலைவர் சட்டத்தரணியும், அவரின் சிலை மாவட்டசெயலகத்தில் அமைவதற்குக் காரணமாகவிருந்தவருமான மு.சிற்றம்பலம் சார்பாக மலர்மாலை அணிவித்தார். நகரசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது அமைப்பினரும் சிலைக்கு மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தினர்.

கவிதைகளும் நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. இதனையடுத்து காலை 9.30மணியளவில் வவுனியா நகரசபை மண்டபத்தில் ஏனைய நிகழ்வுகள் நடைபெற்றன. இன,மத,பன்முகத்தன்மையைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்வு அனைவரையும் கவர்ந்திருந்தது.

நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக சட்டத்தரணியும் வவுனியா மாவட்ட சபையின் முன்னாள் தலைவருமான மு.சிற்றம்பலம் கலந்துகொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(த-110, ரி4)

# சஜித் வாய் வீரன்தான் செயல் வீரன் அல்ல

## இப்படிச் சொல்கிறார் மகிந்த



கொழும்பு, ஓக. 26

சஜித் பிரேமதாச, தந்தையின் பெயரைப் பயன்படுத்தியே தேர்தலில் களமிறங்கத் தீர்மானித்துள்ளார். அவர் செயலில் வீரன் அல்ல. வாய்ச்சொல்லில்தான் வீரன். இவ்வாறு முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிப்பது இந்த நாட்டில் வாழும் மக்களேயன்றி பன்னாட்டுச் சமூகம் அல்ல. ஐக்கிய தேசியக் கட்சியை பல வெளிநாடுகள் இயக்குகின்றன. அதனால் அந்தக் கட்சி சின்னாபின்னமாக சிதறுண்டு காணப்படுகின்றது.

அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்வதில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பாடு படுகின்றார். அதேவேளை அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட அவருக்கும் ஆசை வந்துள்ளது. பல அரச தலைவர் தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவர் மீண்டும் போட்டியிடக் கனவு காண்பது வெட்கக்கேடான விடயம்.

சஜித் பிரேமதாச அரச தலைவர் வேட்பாளராவதற்கு எந்தத் தகுதியும் அற்றவர். தந்தையின் பெயரைப் பயன்படுத்தித்தான் அவர் அரசியலுக்கு வந்தவர். தற்போதும், தந்தையின் பெயரைப் பயன்படுத்தியே தேர்தலில் களமிறங்க அவர் தீர்மானித்துள்ளார். அவர் செயலில் வீரன் அல்ல. வாய்ச்சொல்லில்தான் வீரன்.

அதேவேளை, கரு ஜயசூரியாவும் அமெரிக்காவின் நிகழ்சி நிரலுக்கு ஏற்ப செயற்படும் ஒருவர். கடந்த ஒக்ரோபர் மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது அமெரிக்கா உள்ளிட்ட பல வெளிநாடுகளின் அழுத்தத்தின் பெயரில்தான் அவர் நாடாளுமன்றத்தில் நடுநிலையாகச் செயற்படவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாகவே அவர் செயற்படுகின்றார். சபாநாயகர் கதிரையில் அமர்வதற்கு தகுதியற்ற அவர் அரச தலைவர் கதிரைக்கு வருவது எப்படி நியாயம்?

ஒட்டுமொத்த ஐக்கிய தேசியக் கட்சியில் அரச தலைவர் வேட்பாளருக்கு எவரும் தகுதியற்றவர்கள். இந்த நாட்டில் வாழும் மூவின மக்களும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாயவை ஆதரித்து வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் - என்றார். (ஓ.5,22)

# கட்சியை முன்னிறுத்தி எழுக தமிழ் இல்லை

## விக்கி தெரிவிப்பு

எழுக தமிழ் நிகழ்வினூடாக ஓர் கட்சியின் எழுச்சி முன்னிறுத்தப்படுவதாக பலர் எண்ணுவது முற்றிலும் பிழையான விடயம் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எழுக தமிழ் பேரணிக்கு சமூக அமைப்புக்களின் ஆதரவை திரட்டும் நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக நேற்றுச் சனிக்கிழமை மீனவ அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகறியச் செய்ய வேண்டியதே எமது நோக்கமாகும். கட்சி பேதங்களை மறந்து தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். அடுத்த மாதம் ஜெனிவாவில் தமிழ் மக்களின் விடயங்கள் பேசப்படப் போகின்றன. அதேநேரத்தில் இலங்கையில் அடுத்தடுத்து மூன்று தேர்தல்கள் வரவிருக்கின்றன. எமது பிரச்சினைகளை உலகறிய தமிழ் மக்கள் ஒருமித்து நின்று கூற வேண்டிய தேவை உள்ளது' என்றார் -விக்னேஸ்வரன் (ஓ.5)

# பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் கணக்கெடுப்பு

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை

கொழும்பு, ஓக. 26

பாடசாலைக்குச் செல்லாத 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தொடர்பில் நாடு முழுவதும் கணக்கெடுப்பொன்றை ஆரம்பித்துள்ளதாக, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் தொடர்பில் ஆராய்ந்து, அவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக அடுத்த தவணையிலிருந்து பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் நடவடிக்கைகள் இதன் ஊடாக முன்னெடுக்கப்படும்.

இதேவேளை, அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள 22 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இந்தக் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. ஒருபோதும் பாடசாலைக்குச் செல்லாத 17 பிள்ளைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் 378 பிள்ளைகள், பாடசாலை கல்வி நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது. இவர்களை, அடுத்த தவணையிலிருந்து பாடசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ஓ.5)

# நெஞ்சுவலியால் குடும்பத்தலைவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, ஓக. 26

நெஞ்சுவலியால் அவதிப்பட்ட குடும்பத் தலைவர் நேற்று அதிகாலை மருத்துவமனைக்கு கொண்டு வரும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 4 மணிக்கு சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த நரசிங்கராசா பேரின்பராஜா (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு உணவு அருந்திய பின்னர் படுகைக்குச் சென்றுள்ளார். நேற்று அதிகாலை நெஞ்சு வலிப்பதாகக் கூறியுள்ளார். நோயாளர் காவு வண்டி மூலம் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது உயிரிழந்துள்ளார்.

சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார், நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையினைப் பார்வையிட்டு பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி திருமதி சு.தவமலர் மூலம் விசாரணைகளை நடத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ஓ.5,9)

# ஸஹ்ரானை காத்தான்குடி மக்களே ஏற்கவில்லை

## பள்ளிவாசல் சம்மேளன தலைவர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஓக. 26

ஸஹ்ரான் போன்றோரை காத்தான்குடி நகர மக்கள் நிராகரித்துள்ளனர். இவ்வாறானோர் மேற்கொண்ட இன பேத நடவடிக்கைகள் காரணமாக, பல உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. முஸ்லிம் மக்கள் தொடர்பில் சந்தேகம் ஏற்படுபவதற்கு இது காரணமாக அமைந்ததாக காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் நிறுவன சம்மேளனத்தின் தலைவர் எம்.சி.எம்.சத்தார் தெரிவித்துள்ளார்.

காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசல் மற்றும் நிறுவன சம்மேளனத்தின் முதன்மை மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காத்தான்குடி நகரத்தில் மீண்டும் ஒருமுறை பயங்கரவாதி அல்லது பொதுமக்களுக்கு எதிரான நபர்கள் உருவாவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

முஸ்லிம் சமூகம் எப்பொழுதும் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை மறந்துவிடவில்லை. பயங்கரவாதம் நடைபெற்ற காலப்பகுதியில் முஸ்லிம் சமூகம் மற்றும் ஏனைய சமூகங்களுக்கு இடையில் நெருக்கமாக தொடர்புகளை முன்னெடுத்திருந்தது. இருப்பினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் காத்தான்குடி நகரம், முஸ்லிம் சமூகம், மதத்தைப் போதித்தல், மத்ரஸா பாடசாலை, பேரீச்சம்பழ மரங்கள் போன்ற பல்வேறு கதைகள் பேசப்பட்டன.

முஸ்லிம் சமூகம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏனைய இனத்தவர்கள் பாதிக்கப்படும் வகையில் அல்லது ஏளனம் செய்யும் வகையில், உரிமைகளைக் கோரும் மக்களல்ல. மட்டக்களப்பில் தமிழ் மக்களுடன் தாம் மிகவும் நல்லுறவுடன் வாழ்ந்து வருகின்றனர்.

ஏனைய பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிங்கள மக்களுடன் மிகவும் அன்னியோன்யமாக செயற்படுகின்றனர். எமக்கு பயங்கரவாதமோ, அடிப்படைவாதமோ தேவையற்றது- என்றார். (ஓ.5)

# ரூபாவின் பெறுமதி சரிவு

அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை மத்திய வங்கியினால் வட்டி வீதத்தை குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டமையால் இந்த நிலமை ஏற்பட்டுள்ளது. வார இறுதியில் டொலர் ஒன்றின் விற்பனை விலை 181.24 ரூபாவாக பதிவாகியுள்ளது. (ஓ.5)

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தீவிரவாதிகள் ஊடுருவவில்லை

## இராணுவம், கடற்படை மறுக்கின்றது

கொழும்பு, ஓக. 26

இலங்கையிலிருந்து தீவிரவாதிகள் 6 பேர், இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ளதாக வெளியான தகவலை ஏற்க முடியாது என்று கடற்படை மற்றும் இராணுவம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கையைச் சேர்ந்த தீவிரவாதிகள் 6 பேர் தமிழகத்துக்குள் ஊடுருவியுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று இந்திய மற்றும் லண்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. தீவிரவாதிகளுடன் தொடர்புடைய நபர்கள் என்று சந்தேகிக்கப்படும் சிலர் தமிழகம் முழுக்க கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாறு 10 இற்கும் மேற்பட்ட நபர்கள் அந்நாட்டு பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்பு படை அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவித்திருந்தன. கைதானவர்கள், பாகிஸ்தான் மற்றும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள இலங்கை கடற்படை பேச்சாளர் இசுறு சூரிய பண்டார, கடற்படையினர் 24 மணி நேரமும் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதால், தீவிரவாதிகள் இலங்கையில் இருந்து கடல் மார்க்கமாக தப்பிச் செல்ல வாய்ப்பில்லை என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கையிலிருந்து தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் ஊடுருவி உள்ளது தொடர்பான தகவலை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். (ஓ.5,21)

C M Y K

## இராஜதந்திர...

அனுப்பப்படவேண்டும் என்று தனது சட்டத்தரணி ஊடாகக் கோரியுள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில், லசந்தவின் மகள் அமெரிக்காவின் கலிபோனியா மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்குத் தொடர்பில் கோத்தபாயவின் சட்டத்தரணிகள் புதிய மனுவை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர். அதிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் முறைப்பாடு உண்மையாக இருக்கும் என்ற ஊகத்தில் கூட இவ் வழக்கில் சட்டப்பூர்வ ஆதாரப்பற்றாக்குறை இருப்பதாக ராஜபக்சவின் சட்டதரணிகள் தெளிவுப்படுத்தியுள்ளனர்.

அரச தலைவர் வேட்பாளர் என்ற ரீதியில் இலங்கையர்கள் இவ் வழக்கை உன்னிப்பாக அவதானித்து வரும் வேளையில் கோத்தபாய ராஜபக்ச இக் கருத்தை நீதிமன்றத் துக்கு தெரிவித்துள்ளார். அதேவேளை இக் குற்றச்சாட்டை கோத்தபாய ராஜபக்ச வன்மையாக மறுப்பதாகவும் அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

லசந்த விக்கிரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்கிரமதுங்க தொடுத்துள்ள இவ் வழக்கில் இலங்கையின் பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்ச அதிகார மட்டத்திலேயே இதனைப் புரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் பொது சட்ட வெளிநாட்டு அலுவலர் சலுகையின் கீழ் விசாரித்து வழக்கை தள்ளுப்படி செய்ய வேண்டும் என்று கோத்தபாயவின் சட்டத்தரணிகள் அமெரிக்க நீதிமன்றத்தில் எடுத்துரைத்துள்ளனர். (ஒ,5)

## மோடியுடன்...

இருப்பினும் திகதி அறிவிக்கப்படவில்லை' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தெரிவித்தார்.

இதேவேளை - டில்லிப் பயணம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி இலங்கை வந்திருந்தபோது, பல விடயங்கள் குறித்து அவருடன் பேசினோம். எங்களைப் புதுடில்லிக்கு வரும்படி அவர் கேட்டிருந்தார். அடுத்து வரும் வாரங்களில் அந்தப் பயணத்தை மேற்கொள்வோம் என்று நம்புகின்றோம். தேசிய பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்துக்கு அளித்த உறுதிப்பாட்டை பேணுவதை உறுதி செய்வதில் இந்தியா இன்னும் தீவிரமான பங்கை வகிக்குமாறு புதுடில்லியிடம் வலியுறுத்துவோம். தேசிய பிரச்சினைக்கு இலங்கை இன்னும் தீர்வை வழங்கவில்லை என்ற உண்மை குறித்து நாங்கள் புதுடில்லியுடன் கலந்துரையாடுவோம். இந்த விடயம் தொடர்பான தீர்மானத்தை ஆதரித்த இந்தியாவுக்கும், ஏனைய நாடுகளுக்கும் பேச்சுகளுக்கு உதவிய நாடுகளுக்கும் இலங்கை அரசால் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால், இந்த உறுதிமொழிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இப்போதைய சூழலில், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசுக்கு பன்னாட்டுச் சமூகம் உணர வைக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அரச தலைவர் தேர்தல் விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், கூட்டமைப்பு புதுடில்லி செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இந்தியத் தலைநகர் புதுடில்லிக்கு கடந்த 12ஆம் திகதி சென்றிருந்தார். அவர் ஒரு வாரம் அங்கு தங்கியிருந்தார். அவர் தனது மருத்துவத் தேவைக்காகவே இந்தியாவுக்குச் சென்றிருந்தார் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன. (ஒ,5,21,22)

## ரூபா 6...

யைப் பெற்றுக்கொள்ளவதற்கு பதிவாளர் நாயகம் திணைக்களத்திலிருந்து அரசகரும மொழிகள் மற்றும் தேசிய நல்லிணக்க அமைச்சுக்கு 650 பேரின் பெயர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அந்த அமைச்சின் மேலதிகச் செயலர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பல ஆயிரக் கணக்கானோர் உள்ளார்கள். இவர்களின் உறவினர்களுக்கு உதவுவதற்கு 2019ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர் என்ற சான்றிதழ் சமர்ப்பிக்கவேண்டும். 2018ஆம் ஆண்டு வரையில் மேற்படி சான்றிதழ்களைப் பெற்றவர்களுக்கு, வரவு - செலவுத் திட்டத்தில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்த காலம் தொடக்கம் கொடுப்பனவு கிடைக்கும். 2019ஆம் ஆண்டில் மேற்படி சான்றிதழைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு, சான்றிதழ் கிடைக்கப்பெற்ற மாதத்திலிருந்தே கொடுப்பனவு கிடைக்கும்.

இந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள், மாவட்டச் செயலகங்களை நாடுமாறும், அவர் தெரிவித்தார். (ஒ,5,105)

## சஜித்...

'எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாசவை பெயரிடாவிட்டால் அடுத்த கட்ட அதிரடியாக தனித்த பயணத்தை ஆரம்பிக்க கட்சியின் 57 உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்' என்று அந்தக் கட்சியின் உயர்மட்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்த வாரமே சஜித், கரு , ரணில் மூவரும் பேச்சு நடத்தவுள்ளதுடன் அடுத்த வாரத்துக்குள் பிரச்சினைக்கு தீர்வைக் காண்பதற்கு கட்சியின் உயர்மட்டம் தீர்மானம் எடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பது குறித்து தொடர்ந்தும் இழுபறி நிலமை உருவாகியுள்ளது. ஒரு மாதகாலமாக பல சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்று வருகின்ற போதிலும் கூட இந்தப் பிரச்சினையில் பொது இணக்கப்பாடு எட்டப்படுவதில் தொடர்ந்தும் இழுபறி நிலமையே உள்ளது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் சஜித் பிரேமதாச அணியினர் மாத்தறையில் மக்கள் கூட்டத்தை நடத்தி தமது பலத்தை மீண்டும் நிரூபித்திருந்த நிலையில் அன்றைய தினமே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அலரிமாளிகையில் இராப்போசன விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இராப்போசன விருந்துக்கு அமைச்சர் சஜித் மற்றும் அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரும் மேலும் சில முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை.

இந்த நிகழ்வின் போதும் அரச தலைவர் வேட்பாளர் குறித்து முக்கியமான சில விடயங்கள் கட்சியின் மேலிடத்தில் தனிப்பட்ட ரீதியில் கலந்துரையாடப்பட்டுள்ளது. எனினும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தரப்பு அமைச்சர் சஜித் பிரேமாதசவை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்க முடியாதென்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்துள்ளனர். இந்த நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் அணி முக்கிய தீர்மானத்தை எடுத்துள்ளதாக, உயர்மட்ட அமைச்சர் கூறியுள்ளார். (ஒ,5)

## எந்தக்...

தலைவர் வேட்பாளருமான அநுரகுமார திசாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் பன்னாட்டு ஊடகத்தின் கொழும்புச் செய்தியாளருக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ், முஸ்லிம் மக்கள் எம்முடன் கைகோர்த்தால் என்னுடைய வெற்றி உறுதியாகும். இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முஸ்லிம்களின் தலைவர்களான ஹக்கீம் மற்றும் ரிசாத் பதியுதீன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோருடன் திறந்த மனத்துடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றேன்.

நான் ஆட்சிக்கு வந்தால், வடக்கு - கிழக்கு, மலையக மக்களின் அனைத்துவிதமான பிரச்சினைகளுக்கும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் நேரில் பேசி தீர்வைக் காண்பேன். பத்து ஆண்டுகளாக ராஜபக்ச ஆட்சியிலும், நான்கு ஆண்டுகளாக மைத்திரி - ரணில் தலைமையிலான ஆட்சியிலும், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எந்த விமோசனமும் கிடைக்கவில்லை. அவர்கள் பல்வேறு வழிகளில் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளார்கள். அவர்களின் அடிப்படை பிரச்சினைகள் கூட தீர்க்கப்படவில்லை. எனவே, எனது ஆட்சியில் இன, மத, மொழி பாகுபாடு இன்றி அனைவருக்கும் சமதகுதியுடன் இந்த நாட்டில் வாழும் சூழலை ஏற்படுத்துவேன்.

எந்த நாட்டின் பின்புலத்துடனும் நான் களமிறங்கவில்லை. தேசிய மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராகவே நான் களமிறங்கியுள்ளேன் - என்றார். (ஒ,5,22)

## பேராயரின்...

நியாயமானது என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் இந்தக் கோரிக்கையை, நாம் ஆட்சிப்பீடத்துக்கு வந்தவுடன் நிறைவேற்றவுள்ளோம்.

அதுமாத்திரமன்றி, இலங்கையிலுள்ள அனைத்து இன மக்களும் பயங்கரவாதம் மற்றும் இனவாதம் இன்றியும், நாட்டுக்குள் அச்சம் மற்றும் சந்தேகம் இன்றியும் சுதந்திரமாக வாழ்வதற்கான உரிமையை எமது ஆட்சியில் பெற்றுக்கொடுப்போம்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையை அடுத்து, கொழும்பு பேராயருக்கு ஏற்பட்டுள்ள சிரம நிலைமையை நான் புரிந்துகொள்கின்றேன்.

பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களுக்கு மாத்திரமன்றி, நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்காகவுமே பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை இந்தக் கோரிக்கையை அரசிடம் விடுத்துள்ளார்.

இவ்வாறான ஒரு சம்பவம் இனிவரும் காலங்களிலும் இடம்பெறாதிருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

நாட்டில் நிலவிய 30 வருடப் போரை, மூன்று வருடங்களில் நிறைவு செய்த எனக்கு, இந்த விடயத்தைசிறந்த முறையில்புரிந்துகொள்ள முடிகின்றது. இந்தநிலையில், கொழும்பு பேராயரினால் அரசிடம் விடுக்கப்பட்டுள்ள இந்தக் கோரிக்கை நியாயமானதாகும் என்றுள்ளது. (ஒ,5,22)

## தமிழர்களின்...

எனவே எம்முடன் கைகோர்குமாறு கூட்டமைப்புக்கு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன். இவ்வாறு சிறிலங்கா பொது மக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரும், முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்புச் செய்தியாளர் ஒருவருக்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியை இனியும் தமிழ் மக்கள் நம்பக் கூடாது. அரச தலைவர் வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாத அந்தக் கட்சியா தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்கப் போகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4 ஆண்டுகளாக ரணில் அரசுடன் திரைமறைவில் செய்த நடவடிக்கை எல்லாம் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். தமிழ் மக்கள் சிறுபிள்ளை தனக்காரர்கள் அல்ல.

அரச தலைவர் வேட்பாளராக கடந்த 11ஆம் திகதி நான் அறிவிக்கப்பட்டபோது, தமிழ் மக்கள் பெருமளவில் கலந்து கொண்டார்கள். தமிழ் மக்கள் எம்மை நம்புகின்றார்கள். எனவே எம்முடன் கைகோர்க்குமாறு கூட்டமைப்புக்கு பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றேன். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழ் முஸ்லிம் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து தேசிய அரசு ஏற்கும் வகையில் தீர்வைப் பெற்றுக் கொடுப்போம். என்மீது சில தரப்பினர் வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றார்கள். நான் அப்படியான குற்றச்சாட்டுக்கள் எவையும் புரிந்தவன் அல்ல. இந்த நாடு மூவின மக்களுக்கும் சொந்தமானது. மூவின மக்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து நிம்மதியாக வாழும் சூழ்நிலையை எமது ஆட்சியில் ஏற்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம். எனவே சிங்கள மக்கள் மட்டுமன்றி தமிழ் முஸ்லிம்களாகிய தமிழ் பேசும் மக்களும் எமக்கு ஆதரவு வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஒ,5,22)

## வவுனியா ...

நிலையில் செட்டிகுளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஒ,5,110)

## எதிர்கால...

யாளத்தை பாதுகாத்தே புதிய கூட்டணி அமைக்கப்படும். புதிய கூட்டணியின் கொள்கைத்திட்டம் மற்றும் அரச தலைவர் வேட்பாளர் ஆகிய இரண்டும் கைவசம் உள்ளது என்றும் ரணில் குறிப்பிட்டார்.

அங்கும்புர அலவலதுவல வீதி மற்றும் அங்கும்புர பேருந்து தரிப்பிடம் ஆகியவற்றின் திறப்பு விழா தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (ஒ,5)

## காணாமல்....

கணுக்கேணியைச் சேர்ந்த பொன்னுத்துரை திருஞானசம்பந்தர் (வயது - 61) என்ற தந்தையே கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

திருஞானசம்பந்தர் வாசீசன் என்பவர் முள்ளிவாய்க்காலில் 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டார். அவரைத் தேடி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக தாயும் தந்தையும் அலைந்து திரிந்ததுடன் போராட்டங்களிலும் ஈடுபட்டு வந்தனர்.



மகன் காணாமற் போன வேதனையில் ஆழ்ந்த கவலையிலிருந்த தந்தையார் பொன்னுத்துரை திருஞானசம்பந்தர் மற்றுமொரு மகளை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக கொழும்புக்கு சென்று வீடு திரும்பும் போது விபத்தில் சிக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 20ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்ட மகனைத் தேடியயலைந்த வவுனியா, ஓமந்தை, மகிழங்குளத்தைக் சேர்ந்த வேலாயுதம் செல்வராசா (வயது -56) என்ற தந்தையும் உயர் குருதி அழுத்தத்தால் உயிரிழந்திருந்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் உறவுகள் தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் உயிரிழப்பதையிட்டு வேதனை கொண்டுள்ள எஞ்சியிருக்கும் உறவுகள், இவற்றால் தமது போராட்டத்தை வீரியமாக முன்னெடுக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (ஒ,5,21)

## உலகில்...

வடக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் இடம்பெறும் திருக்குறள் பெருவிழாவை முன்னிட்டு இரு தபால் தலைகள் எதிர்வரும் 30ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. தபால் தலைகள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. திருவள்ளுவரின் வடிவம், திருக்குறள் ஏடு வடிவம் ஆகிய வடிவங்களிலேயே இந்தத் தபால் தலைகள் வெளியிடப்படவுள்ளன. வெளியீட்டு விழாவில் அஞ்சல் சேவை[illegible] மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் [illegible] அதிகாரிகள் ஆகியோருடன் வடக்கு மா[illegible] ஆளுநர் உட்பட பலரும் கலந்து [illegible]வுள்ளனர். ([illegible])



பிரேசிலின் அமேசன் காடுகள் தீப்பிடித்து எரிவது குறித்த ஒளிப்படத் தொகுப்பை வெளியிட்டது பன்னாட்டு ஊடகமான ரெய்டர்ஸ். அந்த ஒளிப்படங்களில் பிரேசில் காடுகளைப் பெரு நிறுவனங்கள் அழித்து வணிக நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதையும், பூர்வீகக் குடிகள் காடுகளைக் காப்பதற்காக (காடுகள் தொடர்ந்து எரிவதைத் தடுப்பதற்காகக் காடுகளின் தொடர்புகளை நீக்குதல்) போராடுவதையும் சுட்டிக்காட்டியது.

## உலக நாடுகள் தலையிட வேண்டாம்

# அமேசன் தீயை அணைப்பதற்கு ஆயுதப்படைகளுக்கு உத்தரவு!

### பிரேசில் அதிபர் நடவடிக்கை

றியோடிஜெனிரோ.ஓக.26
பிரேசிலின் அமேசன் மழைக் காடுகள் தீக்கிரையாகியுள்ளவிவகாரத்தில் உலக நாடுகள் தலையிட வேண்டாம் என்று தெரிவித்தார் பிரேசில் அதிபர் ஜெய்ர் பேல்சனாரோ அத்தோடு குறித்த காட்டுத் தீயை அணைப்பதற்கு ஆயுதப் படைச் சிப்பாய்களை அனுப்புமாறு உத்தரவிட்டிருக்கிறார் அவர்.



அமேசனில் உள்ள மழைக் காடுகளில்கடந்தமூன்றுவாரங்களாக காட்டுத்தீஏற்பட்டுள்ளது. இதில்பல அரியவகை மரங்கள் மற்றும் விலங்குகள்சாவடைந்தன. உலகுக்கு 20 சதவீத ஒட்சிசனையும், பல்லாயிரக்கணக்கான உயிரினங்களின் வார் விடமாகவும் விளங்கும் அமேசன் காட்டில் ஏற்பட்டதீஉலகஅரங்கில்பேசுபொருளானது. இந்தக் காட்டுத் தீ குறித்துப் பிரபலங்கள் பலரும் கவலை தெரிவித்தனர். மேலும் பல நாடுகள் பிரேசில் மீது பொருளாதாரத் தடை விதிக்க உள்ளதாகச் செய்திகள் வெளியாகின.

இதைத் தொடர்ந்தே அமேசன் காட்டுத் தீ குறித்து உலக நாடுகள் தலையிட வேண்டாம் என்று பிரேசில் அதிபர் கேட்டுக் கொண்டார். அத்தோடு குறித்த காட்டுத் தீயை அணைக்குமாறு ஆயுதப் படைகளுக்கு உத்தரவிட்டிருக் கிறார்.

**பின்னணி**
பிரேசிலில்அமைந்துள்ளமழைக் காடுகள் கடந்த 3 வாரங்களாக தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கின்றன. இதில்ஏராளமானஅரிய வகை மரங்கள் மற்றும் வனவிலங்குகள்அழிந்துள்ளன. விவசாயிகள் சட்ட விரோதமாகக் காட்டைப் பற்ற வைத்திருக்கிறார்கள் என்றுகூறினார்பிரேசில்அதிபர். ஆனால், அங்குள்ளபூர்வீகக்குடிகளோ அரசின் தயவில் பல நிறுவனங்கள்பெருமளவில்காடழிப்பில் ஈடுபட்டு வருவதாகக் கூறி, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.
இவ்வாறிருக்க, பிரேசிலில்இந்த ஆண்டுமட்டும்72ஆயிரத்து843 காட்டுத்தீவிபத்துக்கள்ஏற்பட்டுள்ளன. இதில்பாதிக்கும்அதிகமான தீ விபத்துகள் அமேசன் காட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ளன.

# பிரான்ஸில் நடக்கும் 'ஜி7' மாநாட்டில் அமேசன் தீ விவகாரம் குறித்து விவாதம்?

பாரிஸ்.ஓக.26
பிரான்ஸின் பியாரிட்ஸ் நகரில் 45ஆவது 'ஜி7' உச்சிமாநாடுகடந்தசனிக்கிழமைஆரம்பித்தது. அது மூன்று நாள்கள் நடைபெற்று இன்றுடன் நிறைவடைகிறது. முன்னேறிய நாடுகள் என்று கருதப்படும், வளர்ந்த பொருளாதாரத்தைக் கொண்டஏழுநாடுகள்இருக்கும்அமைப்பேஜி7. இதில் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் இடம்பெறுகின்றன.



இந்த மாநாட்டில் ஆற்றல் உற்பத்திக் கொள்கை, பருவ நிலை மாற்றம், எய்ட்ஸ் மற்றும் உலகப் பாதுகாப்பு ஆகியவை விவாதிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு பியாரிட்ஸில் நடைபெறும் மாநாட்டில்சமத்துவமின்மைக்குஎதிராகப்போராடுவதில் கவனம் செலுத்தப்படுகிறது.
ஆனாலும், தற்போது பேசு பொருளாகியிருக்கின்றபிரேசிலின்மழைக்காடுகளில்ஏற்பட்டுள்ள காட்டுத் தீ விவகாரம் குறித்தும் கலந்தாலோசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# காஷ்மீரில் மனித உரிமை மீறலில் இந்தியா உச்சம்!


### அதை மறைக்கவே தீவிரவாத எதிர்ப்பு இம்ரான் கான் தெரிவிப்பு

இஸ்லாமபாத்.ஓக.26
ஜம்மு - காஷ்மீரில் நடக்கும் மனித உரிமை மீறல் பிரச்சினைகளைத் திசை திருப்புவதற்காகப் போலியான தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்திய அரசு நடத்துகிறது என்று பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்தார்.



இதுகுறித்துஅவர்தனதுகீச்சகப் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: நாசவேலைகளில் ஈடுபடுவதற்காக இந்திய எல்லையில் ஆப்கானிஸ்தானிலிருந்து தீவிரவாதிகள் ஊடுருவிஇருப்பதாகவும் மற்றும் சிலர் தென் மாநிலங்களிலும் ஊடுருவிஇருப்பதாகவும்இந்திய ஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள்காஷ்மீர்விவகாரத்தைத் திசை திருப்புவதற்கு இந்தியா மேற்கொண்டுள்ள முயற்சி என்பதை கணிக்க முடிகிறது. ஜம்மு-காஷ்மீரில் நடக்கும் மனித உரிமை மீறல் பிரச்சினைகளைத் திசைதிருப்புவதற்குப் போலியான தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளைஇந்தியஅரசு நடத்துகிறது என்று பதிவிட்டுள்ளார்.

**பின்னணி**
இந்தியா - பாகிஸ்தானிடையேயுள்ள ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் இந்தியக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிக்குத் தான் வழங்கி வந்த சிறப்புரிமை அரசமைப்பை நீக்கியது இந்தியா. அந்த மாநிலத்தை இரண்டாகப் பிரித்து லடாக் மற்றும்ஜம்மு-காஷ்மீர்என மாற்றியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தகாஷ்மீர்மக்களை ஒடுக்கும் வகையில், இந்திய இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. அரசியல் கட்சித் தலைவர்கள் வீட்டுச்சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அந்த மாநிலத்தில்பல்வேறுமாவட்டங்களில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அங்கு குவிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் மீது காஷ்மீர் மக்கள் கல்லெறி நடத்திவருகின்றனர். காஷ்மீர் விவகாரம் குறித்த இந்தியாவின் தன்னிச்சையானசெயல்குறித்து ஐ.நாவில் விவாதிப்பதற்குக் கோரிக்கைவிடுத்தது பாகிஸ்தான். அதன்படி இந்தியா - பாகிஸ்தான் தவிர்க்கப்பட்ட ஆலோசனைக்கூட்டம்ஒன்று ஐ.நாவில்நடந்தேறியது. பின்னர் பன்னாட்டு நீதிமன்றத்திடம் காஷ்மீர் விவகாரத்தை எடுத்துச்செல்வதற்குமுடிவெடுத்துள்ளது பாகிஸ்தான்.
இதற்கிடையில்காஷ்மீர்பிரச்சினை குறித்துப் பாகிஸ்தானும் இந்தியாவும் பேச்சு நடத்த விரும்பினால் தாம் நடுவராகச் செயற்படுவதற்குத் தயாராகவுள்ளதாக அறிவித்துவருகிறார்ட்ரம்ப். இதில் மூன்றாவதுநாடுதலையிடக் கூடாது என்றார் பிரான்ஸ் அதிபர் மக்ரொன். பலமுறை இந்த விவகாரம் குறித்துப் பேச வருமாறு பாகிஸ்தான் அழைப்புவிடுத்தும்தீவிரவாதத்தைமுதலில்கட்டுப்படுத்துமாறு நழுவல் போக்கான பதிலைத் தெரிவித்து வருகிறது இந்தியா.



## துருக்கி நோக்கி நகர்கிறது ஈரானின் எண்ணெய் கப்பல்

லண்டன்,ஓக.26
ஜிப்ரால்டர் நீரிணைப் பகுதியில் பிரிட்டனால் கைப்பற்றப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட ஈரானின் எண்ணெய் கப்பல் துருக்கி நோக்கி நகர்வதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. ஈரானின் இந்த எண்ணெய்க் கப்பல் துருக்கியில் உள்ள எண்ணெய் முனையமான மெர்சின் துறைமுகம் நோக்கிச் செல்வதாக அதன் தானியங்கி அடையாள அமைப்புத் தரவுத் தளத்தில் தெரிவித்துள்ளது. 130 மில்லியன் டொலர் மதிப்புள்ள 2.1 மில்லியன் பீப்பாய்கள் அளவிலான கச்சா எண்ணெயைக் கொண்டு செல்கிறது இந்தக் கப்பல். ஆனால், அந்தக் கப்பல் துருக்கி நோக்கி நகர்வது பற்றிய எந்தவோர் உறுதிப்படுத்தப்பட்ட தகவலையும் ஈரான் அரசு வெளியிடவில்லை. தற்போது வெளிவந்துள்ள தகவல்களின்படி குறித்த கப்பல் இன்னும் ஒரு வாரத்தில் துருக்கியின் மெர்சின் நகரை அடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் அங்குதான் அந்தக் கப்பல் செல்கிறது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

**பின்னணி**

ஐரோப்பிய ஆணையகத்தின் தடையை மீறிச் சிரியாவுக்குக் கச்சா எண்ணெய் ஏற்றிச் சென்றதாகக்கூறி ஈரானின் எண்ணெய் கப்பலை ஜிப்ரால்டர் நீரிணைப் பகுதியில் வைத்துப் பிரிட்டன் கடற்படை இரண்டு மாதங்களுக்கு முன்பு கைப்பற்றியது. தடுத்து வைத்து மேற்கொண்ட விசாரணைகளில் அது சிரியாவுக்குச் செல்வதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் எவையும் இல்லை என்று தெரிவித்த பிரிட்டன், அந்தக் கப்பலை விடுவித்தது. அத்தோடு குறித்த கப்பல் சிரியாவுக்குச் செல்லாது என்று ஈரான் அரசிடம் எழுத்துமூல ஆவணத்தையும் பெற்றதாகத் தெரிவித்தது. பிரிட்டனால் விடுவிக்கப்பட்ட அந்த எண்ணெய்க் கப்பலைக் கைப்பற்றுமாறு அமெரிக்க நீதித்துறை அறிவித்தது. ஈரான் எண்ணெய் கப்பலுக்கு எவராவது உதவினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மைக் பாம்பியோ கூறினார். எமது கப்பலை அமெரிக்கா கைப்பற்ற நினைத்தால் கடும் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று ஈரான் அறிவித்தது. இந்த நிலையிலேயே ஈரானின் எண்ணெய்க் கப்பல் ஜிப்ரால்டர் நீரிணைப் பகுதியில் இருந்து நகர ஆரம்பித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அது நகர்வதாகத் தெரிவிக்கப்படுகின்ற மெர்சின் துறைமுகம் சிரியாவின் பனியாஸ் நகரில் இருந்து 200 கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

*அமெரிக்காவுக்கு வெளிப்படையாக மிரட்டல்*

சியோல்,ஓக.26
இரண்டு சிறியவகை ஏவுகணைகளைப் பரிசோதனை செய்துள்ளது வடகொரியா. அந்த ஏவுகணைப் பரிசோதனைகளின் பின்னர் அமெரிக்காவுக்கு மிகப் பெரிய சவாலாக இருப்போம் என்று அது தெரிவித்தது.




கடந்த சனிக்கிழமையன்று சிறிய ரக ஏவுகணைகள் இரண்டைக் கடலில் செலுத்திச் சோதனை செய்தது வடகொரியா. கண்டம்விட்டுக்கண்டம் பாயும் இந்த ஏவுகணைகள் 380கிலோமீற்றர்தொலைவுவரை பாய்ந்து சென்று 97 கிலோ மீற்றர் உயரத்தில் இருந்து கிழக்குக் கடல் பகுதியில் (ஜப்பான் கடலில்) விழுந்துள்ளது. இதைத் தென் கொரிய அரசு உறுதி செய்தது. இந்தப் புதிய ஏவுகணைச்சோதனைகூட்டு.இராணுவப்பயிற்சியில்ஈடுபட்டிருக்கும் அமெரிக்கா மற்றும் தென்கொரியாவுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கை ஆகும். என வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் தெரிவித்தார்.

**பின்னணி**

அணுஆயுதம்தொடர்பாகஅமெரிக்காவுக்கும் வட கொரியாவுக்கும் முரண்போக்கு நீடித்து வந்தது. வடகொரியாமீதுதடைகளைவிதித்தது அமெரிக்கா. கடந்த வருடம் தென் கொரியாவில் இடம்பெற்ற குளிர் கால ஒலிம்பிக்கில் வடகொரியா பங்கேற்றதுமுதல்நிலமைமாற்றமடைந்தது.

பகமை நாடான தென் கொரியா, அமெரிக்காவுடன் வடகொரியா பேச்சில்ஈடுபடுவதற்கு வாய்ப்புஏற்படுத்தியது. அணு ஆயுதத் தயாரிப்பை நிறுத்துவதாக அறிவித்தது வடகொரியா. ஆனால், வடகொரியா மீதான தடைகள் எதையும் அமெரிக்கா நீக்கவில்லை.

வடகொரியாஅமெரிக்காஇடையில் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம் பெற்றன. அவை இரண்டுமே தோல்வியில்முடிந்தன. அதன்பின்னர் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய-தென்கொரியாவுக்கு இடைப்பட்ட இராணுவம் அற்ற பிரதேசத்தில் சந்தித்துப்பேசினர். இந்தநிலையில்தென்கொரியாவும் அமெரிக்காவும் இணைந்து இராணுவப்பயிற்சியில்ஈடுபட்டன. தென் கொரியாவைத் தாக்கவல்ல குறுந்தூர ஏவுகணைப் பரிசோதனையில் முனைப்புக் காட்டித் தென்கொரியாவுக்கு எச்சரிக்கையும் விடுத்தது வடகொரியா. அத்தோடு பேச்சுக்கும் தயார். போருக்கும் தயார் என்றும் அது தெரிவித்தது. இந்தநிலையிலேயேதற்போது அமெரிக்காவுக்கு மேற்கண்டவாறு வெளிப்படையாகஎச்சரிக்கைவிடுத்தது வடகொரியா.



## 'ஹுவாவி' நிறுவன அதிகாரியை உடனடியாக விடுதலை செய்யுங்கள்

*சீனா வலியுறுத்தல்*

ஒட்டோவா,ஓக.26
அமெரிக்காவின் வேண்டுகோளின்படி கடந்த ஆண்டு கனடாவில் கைது செய்யப்பட்ட ஹீவாவி நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான மெங் வான்சுவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று சீனத் தூதரகம் வலியுறுத்தியது. கனடாவின் தலைநகர் ஒட்டோவாவில் உள்ள சீனத் தூதரகமே இவ்வாறு வலியுறுத்தியது. இது குறித்துச் சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் மேலும் கூறுகையில்; 'மெங் வான்சுவின் கைது சம்பவமானது ஒரு முன்னணிச் சீன நிறுவனத்தை முடக்குவதற்கு அமெரிக்கா தனது அரச அதிகாரத்தைப் பயன்படுத்திய செயல். இது மிக மோசமான நடத்தை ஆகும். கனடாவைச் சேர்ந்த இருவர் சீனாவில் கைது செய்யப்பட்டது முற்றிலும் மாறுபட்ட விடயம். அவர்கள் சீனாவின் பாதுகாப்பு விதிமுறைகள் அடிப்படையில் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர் - என்றார்.

**பின்னணி**

உலகளவில் பிரபலமான தொலைத்தொடர்பு நிறுவனமான சீனாவின் ஹுவாவி நிறுவனம் அமெரிக்காவின் தடையை மீறி, ஈரானுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ளதாகவும் அமெரிக்காவின் வர்த்தகஇரகசியங்களைத்திருடமுயற்சித்ததாகவும் ட்ரம்ப் நிர்வாகம் குற்றஞ்சாட்டியது. அதன் காரணமாக அந்த நிறுவனத்தின் தலைமை நிதி அதிகாரியான மெங் வான்சு கடந்த ஆண்டு கனடாவில் கைதுசெய்யப்பட்டார். (அவர் கனடாவில் சுதந்திரமாக நடமாடினாலும் அவரின் உடலில் கண்காணிப்புக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. அவரை அமெரிக்காவுக்கு நாடு கடத்துமாறு அமெரிக்கா கோருகிறது) இதற்குக் ஹுவாவி நிறுவனமும் சீன அரசும் கண்டனம் தெரிவித்தன. இந்த நிலையிலேயே மெங் வான்சுவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்று சீனத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

## ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினாலும் பன்னாட்டுச் சமூகத்திலிருந்து பின்வாங்கமாட்டோம்

*போரிஸ் ஜோன்சன் தெரிவிப்பு*

லண்டன்,ஓக.26



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினாலும் பன்னாட்டுச் சமூகத்திலிருந்து பின்வாங்க மாட்டோம் என்று பிரிட்டனின் புதிய தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சன் தெரிவித்தார். ஜி7 மாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னதாகவே போரிஸ் ஜோன்சன் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த நாடு எடுத்துள்ள ஜனநாயக முடிவு குறித்துச் சிலர் கேள்வி எழுப்புகிறார்கள், நாங்கள் உலக நாடுகளிலிருந்து விலகி நிற்போம் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். சிலர் பிரிட்டனின் சிறந்த நாள்கள் கடந்து சென்றுவிட்டதாக நினைக்கிறார்கள். அந்த நபர்களிடம் நான் சொல்கிறேன்: நீங்கள் மிகவும் தவறாக நினைக்கிறீர்கள். பிரெக்சிட்டுக்குப் பிறகு உலக அரங்கில் பிரிட்டன் ஓர் ஆற்றல்மிக்க பங்காளியாக இருக்கும். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினாலும் பன்னாட்டுச் சமூகத்திலிருந்து பின்வாங்க மாட்டோம்' என்றார். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததையடுத்துப் பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரேசா மே பதவி விலகியிருந்தார். பிரிட்டனை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலக்கிக் கொள்வதற்காகத் தருவிக்கப்பட்டிருப்பவர் என்று அரசியல் விமர்சகர்கள், தற்போதைய தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சனைச் சுட்டிக்கூறும் நிலையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# அரியாலை சரஸ்வதி வலைப்பந்தில் மகுடம்



யாழ்ப்பணம், ஓக. 26
அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி கிண்ணம் வென்றது.
அரியாலை திருமகள் சனசமூக நிலைய முன்றிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலைசரஸ்வதி சனசமூக நிலைய அணியை எதிர்த்து அரியாலை சனசமூக நிலைய அணி மோதியது. இதில் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அணி 12:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
(ம-23)



## திருநெல்வேலி துடுப்பாட்ட அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 26
ஏபி பவுண்டேசன் நடத்தும் ஜப்னா துடுப்பாட்ட லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி வெற்றி பெற்றது.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஹாட்லிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லிஸ் விளையட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரேசன் 41 ஓட்டகளையும், பிரதீப் 36 ஓட்டங்களையும், மயூரன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சுரேந்திரன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.
116 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி துடுப்பாட்டக் கழக அணி 14.2 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. (ம-23)



## கறுப்புப் பட்டியுடன் இந்திய அணியினர்

இந்திய அணியின் முன்னாள் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், ஆண்டிகுவா டெஸ்ட் தொடரின் நேற்றுமுன்தின ஆட்டத்தில் இந்திய வீரர்கள் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினார்கள்.
முன்னாள் நிதி அமைச்சர் அருண் ஜெட்லி உடல் நலக்குறைவு காரணமாக டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். (ம)

## வெற்றிபெற்ற அணிகளுக்கு கேடயங்கள்

வவுனியா, ஓக. 26
கோவில்குளம் ரொக்கட் விளையாட்டுக் கழகத்தின் 42ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த வருடம் நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் வெற்றிபெற்ற அணிகளுக்கு நேற்றுமுன்தினம் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.
குறித்த தொடரில் முதலாம் இடத்தை சக்தி விளையாட்டு கழகத்தினரும், இரண்டாம் இடத்தை லோட்ஸ் விளையாட்டுக் கழகத்தினரும் பெற்றிருந்தனர்.
(ம-110)








## இலங்கை கபடி அணியில் இரு தமிழ் வீராங்கனைகள்

யாழ்ப்பாணம், ஓக. 26
தென்கொரியாவில் நடைபெறவுள்ள பெண்களுக்கான கபடித் தொடரில் இலங்கை அணியின் சார்பில் தமிழ் வீராங்கனைகள் இருவர் கலந்து கொள்ளவுள்னர்.
தென்கொரியாவில் அழைக்கப்பட்ட நாடுகளுக்கு இடையிலான பெண்களுக்கான கபடித் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.
இதில் இலங்கை தேசிய அணியில் யாழ் மாவட்ட கபடிச் சங்கத்தை பிரதிநிதித்துவம் செய்த வி.டிலக்சனா, இ.பிரியவர்னா ஆ்கியோர் கலந்து கொள்ளவுள்னர்.
(ம-422)

# சைனிங்ஸ் அணி சம்பியனானது

யாழ்ப்பணம், ஓக. 26
வல்வை உதயசூரியன் கழகம் 57ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் வல்வை சைனிங்ஸ் அணி கிண்ணம் வென்றது.
உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வல்வை சைனிங்ஸ் அணியை எதிர்த்து வல்வை ரேவடி அணி மோதியது. இதில் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
ஆட்ட நாயகன் விருதை வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் துளசி ராம் பெற்றார்.
(ம-23)



# மட்ரிட் - வில்லாடுலிட் ஆட்டம் சமநிலையில்




ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லாலிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ரியல் மட்ரிட் - ரியல் வில்லாடுலிட் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின.

கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 82ஆவது நிமிடத்தில் பென்சிமா மட்ரிட்டின் கோலையும் சேர்ஜி 88ஆவது நிமிடத்தில் வில்லாடுலிட் அணியின் கோலையும் பதிவு செய்தனர். (ம)




ஸ்பெயினின் ரியல் மட்ரிட் கழகம், பல மில்லியன் டொலர் செலவில் மட்ரிட் நகரில் உள்ள தனது மைதானத்தை சீர்செய்தது. மைதானத்தின் தற்போதைய ஒளிப்படத்தை அந்தக் கழகம் தனது வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளது. (ம)

## யுவென்டஸ் வென்றது

இத்தாலியக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யுவென்டஸ் வெற்றிபெற்றது.

யுவென்டஸை எதிர்த்து பர்மா அணி மோதியது. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் யுவென்டஸின் கோலைப் பதிவு செய்தார் ஜியோரியோ. மேலதிக கோல்கள் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் இரண்டு அணிகளும் கடுமையாக முயற்சித்த போதிலும் மேலதிக கோல்கள் பதிவாகவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யுவென்டஸ் வெற்றிபெற்றது. (ம)

JUVENTUS



## அணித் தெரிவு மட்டில் கோக்லி தடுமாறுகிறார்

### கங்குலி கருத்து

அணித் தெரிவு விடயத்தில் கோக்லி இன்னும் தெளிய வேண்டியுள்ளது. இந்த ஒரு விடயத்தில் அவர் தொடர்ந்தும் குழம்புகின்றார் - இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அணித் தெரிவு விடயத்தில் கோக்லி இன்னும் தெளிவு நிலையை அடையவேண்டியுள்ளது. அவர் இந்த விடயத்தில் தொடர்ந்தும் தடுமாறுகின்றார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின், குல்தீப் யாதவ் ஆகியோரை வெளியில் உட்கார வைத்தமை எனக்கு ஆச்சரியம் தருகிறது. வீரர்களுக்கான வாய்ப்புக்களை அவர் தொடர்ந்தும் வழங்க வேண்டும்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான அஸ்வின் சிறந்த பெறுபேறுகளைக் கொண்டுள்ளார். அதேபோல் குல்தீப் தட்டையான ஆடுகளங்களில் வீசக்கூடியவர். அவருக்குப்பதிலாகஜடேயாவைத்தெரிவுசெய்துள்ளார். ஜடேயா நல்ல வீரர்தான். ஆனால் குல்தீப்பும் சிறந்த தெரிவு - என்றார். (ம)

# இந்தியப் பந்துவீச்சு பிரமாதம் என்றல்ல

### சேஸ் சீண்டல்



இந்திய அணியின் பந்துவீச்சு பலரால் மெருகூட்டிச் சொல்லப்படுகிறது. உண்மையில் அவ்வாறு ஒன்றுமில்லை. சாதாரண நிலையில்தான் அவர்களின் பந்துவீச்சு உள்ளது - இவ்வாறுதெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரர் றொஸ்டன் சேஸ்.

இந்தியா - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வரு கிறது. முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றுமுன்தினம் நிறைவில் ஊடகங்களுக்குக்கருத்துத்தெரிவிக்கையிலேயே றொஸ்டன்சேஸ்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் சில நல்ல தொடக்கக் கூட்டணி அமைத்தோம். புதிய பந்தின் பளபளப்பு போன பிறகு மத்திய வரிசையில் ஓட்டங்களை எடுக்கவசதியாகஇருந்தது. இந்தியாவுக்கு எதிரானஇந்தத்தொடரில்அவ்வாறுமீண்டும் விளையாட வேண்டிய அவசியம் உள்ளது.

கவனமின்மையால்தான் நாம் முதல் இன்னிங்ஸில் பின்னடைவைச் சந்தித்தோம். எங்களில் ஒருவருக்குக்கூட சிறப்புவாய்ந்தபந்தோ, விளையாட முடியாத பந்தோ வீசப்படவில்லை. நாங்கள் மோசமாகவிளையாடிவிக்கெட்டுகளைப் பறிகொடுத்தோம்அவ்வளவே. அதாவது சாதாரண பந்துகளுக்கு ஆட்டமிழந்தோம். கனவமின்மைதான் என் ஆட்டமிழப்புக்கும் காரணமாக அமைந்தது - என்றார். (ம)



## பஞ்சாப் அணியினது தலைவராக ராகுல்?

ஐ.பி.எல். தொடரில் விளையாடும் அணிகளில் ஒன்றான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் தலைவராக கே.எல்.ராகுல் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன - என்று இந்திய் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

2018, 2019ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடர்களை அஸ்வினின் தலைமையில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி எதிர்கொண்டது. 2018ஆம் ஆண்டுத் தொடரை 7ஆம் இடத்திலும், இந்த வருடத் தொடரை 6ஆம் இடத்திலும் பஞ்சாப் முடித்துக் கொண்டது. இந்த நிலையிலேயே பஞ்சாப் அணியில் இருந்து அஸ்வின் நீக்கப்படவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அஸ்வினை பஞ்சாப் நீக்கினால் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி அவரை ஒப்பந்தம் செய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**மாலை நேர வகுப்புக்கள்**

கணக்காளர் சேவை
புதிய பிரிவு ஆரம்பம்
திங்கள், செவ், புதன், வியாழன்
5.00–7.00

**SLAS**
திங்கள், செவ், புதன், வியாழன்
5.00–7.00

**076 688 3394**

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதியில்
பஸ் நிலையத்திலிருந்து
100m தூரத்தில்)

# இரு வகைத் தொடர்களுக்காக பாகிஸ்தானில் இலங்கை அணி

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச்சுற்றுப் பயணம்மேற்கொண்டு மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரிலும், மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரிலும் விளையாடவுள்ளது.

இலங்கை அணியினர் கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்து விளையாடியபோது அவர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதன் பின்னர் வேறு எந்த அணிகளும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்வதைத் (இந்தியா 2008 ஆம் ஆண்டிலிருந்து தவிர்த்து வருகிறது) தவிர்த்து வந்தன. எனினும் சிம்பாப்வே மற்றும் மேற்கிந்தியத் தீவுகளை அழைத்து இருதரப்புத் தொடர்களை நடத்தி வெற்றிகண்டது பாகிஸ்தான். இதையடுத்து நியூசிலாந்து மற்றும்இலங்கைஅணிகளை தமது மண்ணுக்கு வருமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்தது. இந்த நிலையில் அழைப்பை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டுள்ளது.

இதன்படி ஒருநாள் ஆட்டங்கள் செப்ரெம்பர் 27, 28 மற்றும் ஒக்ரோபர் 2 ஆகிய திகதிகளிலும், ரி-20 ஆட்டங்கள் ஒக்ரோபர் 5,7 மற்றும் 9ஆம் திகதிகளிலும் இடம் பெறவுள்ளன.

(ம)

**NEW SCIENCE HALL**

KANNATHIDDY ROAD JAFFNA

**2020 A/L DAY CLASS**

2019 பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது
திங்கள் தொடக்கம் வெள்ளிவரை

புதிய பாடத்திட்டம், பழைய பாடத்திட்டம் இருபிரிவுகளாக நடைபெறும்

| | |
|---|---|
| **COM.MATHS 7.00**<br>திரு.P.செந்தில்நாதன்<br>திரு.S.சிவகரன் | **PHYSICS 11.30 - 1.30**<br>திரு.G.பிரபா<br>திரு.S.சோதிலிங்கம் |
| **BIOLOGY 7.00 - 9.30**<br>வழமையான ஆசிரியருடன்<br>திரு.T.கெங்காதரன் | **AGRICULTURE**<br>3.00 - 4.30<br>திரு.K.அரசிளங்குமரன் |
| **CHEMISTRY**<br>9.30- 11.30<br>திரு.K.சிவத்திரன் | **INFORMATION COMMUNICATION TECHNOLOGY 4.30 - 6.00**<br>திரு.K.கேதீஸ்வரன் |

**ENGLISH MEDIUM**

CHEMISTRY - திரு.S.V செல்வரஞ்சன். 9.30 - 11.30
BIOLOGY - திரு.S.P. நாகநாதன் 7.30 - 9.30
PHYSICS - திரு.S. சோதிலிங்கம் 11.30-1.30

**ஆரம்பம் - 02.09.2019 Monday**

(C/32688)(11,17)

**ZOA** RELIEF | HOPE | RECOVERY

**VEHICLES FOR SALE**

The Following vehicles will be available for inspection up to 31st August 2019 between 08:30 am to 05:30 pm at the respective locations. (except Sundays)

Colombo: 6/1 Alexandra Road, Wellawatte, Colombo - 06
Call 0777727425 – Roy
Kilinochchi: 1138,Thiru nagar South Kilinochchi –
Call 0770107283 - Ramesh

| Vehicle Number | Type | YoM | Location |
|---|---|---|---|
| WP PC 93-- | D/Cab – Toyota Hilux | 2011 | Colombo |
| WP CBC 22- | Car-Alto LXI 800 | 2018 | Colombo |
| WP PE 63-- | Van – Mitsubishi | 2012 | Colombo |
| WP GB 09-- | Montero-Mitsubishi | 2000 | Colombo |
| WP LJ 06-- | Motor Lorry - HINO | 2011 | Kilinochchi |

Please submit your sealed offer in the prescribed tender form at one of the above locations on or before 4PM 31st August 2019

Non – refundable fee to inspect vehicle : LKR 500.00
Refundable Deposit to buy tender form : LKR 1000.00 per vehicle
Trial drive nonrefundable fee : LKR 3000.00 per vehicle

The organization reserves the right to withdraw sale of any of the above vehicles without prior notice.




தமது வாடிக்கையாளர்களின் வேண்டுகோளை ஏற்று இலங்கையின் டெனிம் ஆடைகளின் முன்னணி நிறுவனமான LiCC மீண்டும் யாழ் நகரில். ஏற்பாடு செய்யும்

**மலிவு விற்பனை**

ஓகஸ்ட் 26,27,28 (மு.ப 10 - பி.ப 7
ஜீன்ஸ் ரூ.750 முதல் ரூ.1,500 வரை
ரீ-சேட்கள் - ரூ,600.00

சென். ஜேம்ஸ் ஆலயம்,
செம்மணி வீதி, நல்லூர்

Payment Options - Cash | VISA | MasterCard 0777 35 48 75

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.